Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ். நகரின் லுமாலா மிதிவண்டியின்
ஏக விநியோகஸ்தர்



வெங்கடேஸ்வரா
ரான்ஸ்போட் சேவிஸ்
0212228306
பொதிகள் ஏற்றி
இறக்குவதில்
நம்பிக்கை பெற்றோர்

(C/1630)

வெங்கடேஸ்வரா 125, 127 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 22 திங்கட்கிழமை (06.08.2012) பக்கங்கள் 20 ஓசை – 310

இரணைமடு வற்றியது ஏன்?




05

நிறமற்ற வானவில்



12



'1023 வருடங்கள்'

13





17

# தெரிவுக்குழுவை கூட்டமைப்பு புறக்கணிக்க முடியாது

## யதார்த்தத்தை ஒப்புக்கொள்கிறார் சுமந்திரன்

(கொழும்பு)

ஜனநாயகக் கோட்பாடுகளைப் பின்பற்றும் அரசியல் கட்சி என்ற ரீதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இருந்து ஒதுங்கிக்கொள்ள முடியாது என்று அக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்தார்.

வெள்ளவத்தையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்பு கிளையின் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:

சமஷ்டி, அதிகார பகிர்வு என்று கதைத்தவுடன் இலங்கையிலுள்ள சிங்கள மக்கள் பயப்படுகிறார்கள். நல்லாட்சி, நீதி நியாயம் போன்றவற்றை இங்குள்ளவர்கள் விரும்பவில்லை. இன்று எமது பிரச்சினை உலக மயப்படுத்தப்பட்டுள்ளது. சமஷ்டி ஆட்சிமுறை மூலமே தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க முடியுமென்பதை இன்று நாம் உலகத்திற்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பம்

2012 ஆம் ஆண்டிற்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் நாடளாவிய ரீதியில் இன்று ஆரம்பமாகின்றன. இந்த வருடம் புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்தில் இரண்டு இலட்சத்து 77671 பேர் பரீட்சையில் தோற்றவுள்ளனர். இவர்களுக்காக நாடு முழுவதிலும் 2093 பரீட்சை நிலையங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இஸட் புள்ளி மீண்டும் வெளியிட்டதன் பின்னர் பரீட்சாத்திகள் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி கோரியுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதேவேளை 2011 ஆம் ஆண்டு பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வெளியான இஸட் புள்ளிப் பிரச்சினைகள் தொடர்பில் தாம் தொடர்ந்தும் அவதானம் செலுத்தி

19 ஆம் பக்கம் பார்க்க

## சமூக பொருளாதார மீளாய்வு; களம் இறங்குகிறது அமெரிக்கா

(கொழும்பு)

யுத்தத்திற்குப் பிந்திய இலங்கையின் சமூக அரசியல் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதற்கு அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதன் ஒருகட்டமாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்திய விவகாரங்களுக்கான உதவிச்செயலர் றொபேட் ஓ பிளேக் தலைமையிலான குழுவொன்று விரைவில் கொழும்புக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது எனக் கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளன.



றொபேட் ஓ பிளேக் தலைமையிலான அமெரிக்கக் குழு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க போன்றோரைச் சந்திப்பார் என்றும் எதிர்

19 ஆம் பக்கம் பார்க்க

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு நடவடிக்கை

### பிரிட்டிஷ் எம்.பி.க்கள் திருப்தி

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகளில் அரசாங்கம் கண்டிருக்கும் முன்னேற்றங்களுக்காக அரசைப் பாராட்டுவதாக பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் குழு கூறியுள்ளது. இது தொடர்பாக கொழும்பில் செய்தியாளர்களை பிரிட்டிஷ் குழுவினர் சந்தித்தபோது, அக்குழுவின் சார்பில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினரான பொப் பிளாக்மான் பி.பி.சி செய்தியாளரிடம் இவ்வாறு கூறியுள்ளார்.

மூன்று வருடங்களுக்கு முன்பாகத்தான் ஒரு உள்நாட்டு போரினைச் சந்தித்து திரும்பியிருக்கும் மக்கள் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன என்று நான் நம்புகிறேன். பொருளாதார வாய்ப்புக்கள் மற்றும் மக்கள் தமது வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புக்கள் ஆகியன பாரியவையாக இருக்கின்றன. அவை நடந்துகொண்டும் இருக்கின்றன.

அப்படியான ஒரு இடத்தில் இது நடப்பது மிகவும் முக்கியமானது.

19 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா.வுடன் ஒத்துழைக்க தயாராகிறது கொழும்பு

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அமுலாக்கம் தொடர்பாக ஐ.நா.வுடன் முழுமையாக ஒத்துழைக்க அரசு முடிவு செய்திருப்பதாகக் கொழும்பு ஆங்கில வாரஇதழ் தகவல் வெளியிட்டிருக்கிறது. ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அமுலாக்கத்திற்கான தொழில்நுட்ப ஆலோசனையை இலங்கை அரசுக்கு வழங்குவதற்காக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நிபுணர் குழு அடுத்த மாதம் கொழும்புக்கு வரவுள்ளது. இதற்கான அனுமதியை அரசு வழங்கியது

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைத் துறைமுக அபிவிருத்தியில் இந்திய தனியார் துறைக்கு வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையின் துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகளில் இந்திய முதலீட்டாளர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் முன்னேற்றத்திற்காக துறைமுக அபிவிருத்தி எணணெய் மற்றும் எரிவாயுப் பகுப்பாய்வு ஆகிய துறைகளில் இந்தியத் தனியார் துறைகள் முதலீடு செய்யும் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்துள்ளார், இந்தியன் 'ஷோ' வர்த்தக மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு மேலும் பேசிய ஆனந்த் சர்மா,

போரினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் உட்கட்டமைப்பை மேம்படுத்த இந்தியா உதவும். போரில் இடம்பெயர்ந்த தமிழர்களை மீண்டும் அவர்களின் இடங்களில் குடியேற்றுவது தொடர்பாக இரு நாடுகளுக்கு இடையேயான ஒப்பந்தம் மறுபரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்காக இந்தியா வீடு கட்டித்தருவதை இலங்கை வரவேற்றுள்ளது. இலங்கையில் உள்ள துறைமுகங்களை மேம்படுத்துவதில் இந்திய நிறுவனங்கள் அதிக ஆர்வம் காட்டும். இது தவிர எண்ணெய் மற்றும் எரிவாயுப் பகுப்பாய்விலும் இந்திய நிறுவனங்கள் முக்கிய பங்காற்றும். இலங்கையில் முதலீடு செய்ய விரும்பும் தனியார் நிறுவனங்களுக்கு கடன் அளிக்குமாறு இந்திய வங்கிகளை மத்திய அரசு கேட்டுக்கொள்ளும் என்றார்.

## இந்தியாவின் உதவி தொடர்ந்தும் கிடைக்கும்



(கொழும்பு)

யுத்தத்தால் சிதைந்துபோன இலங்கையின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் இந்தியாவின் பூரண ஒத்துழைப்பு என்றும் தொடர்ந்து இருக்கும் என்று இந்திய வர்த்தக கைத்தொழில்

19 ஆம் பக்கம் பார்க்க

## யுத்தகாலக் குற்றச் செயல்கள் உள்ளக விசாரணைகள் தொடர்கிறது

### குற்றச்சாட்டுக்களுக்கு முற்றுப்புள்ளி

மனித உரிமை கண்காணிப்பகத்தின் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ளமுடியாது என இராணுவம் அறிவித்துள்ளது.

யுத்த காலத்தில் இடம்பெற்ற செயல்கள் தொடர்பில் உரிய முறையில் விசாரணை நடத்தப்படவில்லை என மனித உரிமை கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது. இராணுவச் சட்டங்களுக்கு அமைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உள்ளகவிசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார். உலகின் ஏனைய இராணுவத்தினரைப் போன்றே குற்றச்சாட்டுக்கள்தொடர்பில் உள்ளக விசாரணை நடத்தப்பட்டு வருவதாக

19 ஆம் பக்கம் பார்க்க

# வடக்கின் கல்வி வளர்ச்சிக்கு புதிய செயற்திட்டங்கள்

(காரைநகர்)



யாழ். சடையாளி அ.மி.த.க பாடசாலை வகுப்பு முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் விழாவும் மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கு மறுமலர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் 1000 இடைநிலைப் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஆரம்ப வைபவமும் கடந்த வெள்ளியன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் அமைப்பாளரும், காரைநகர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான வீரமுத்து கண்ணன் (ரஜனி) உரை நிகழ்த்தும் போது இந்தப் பாடசாலை மீள ஆரம்பித்து குறுகிய காலத்திற்குள் பாரிய முன்னேற்றமடைந்துள்ளது. இம்முன்னேற்றத்திற்குக் காரணம் இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் எனத் தெரிவித்தார்.

இரண்டாவது சின்னம் சூட்டும் நிகழ்வில் கலந்து கொள்வதையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதுடன், எமது அரசாங்கம் பாரிய அபிவிருத்தியினை மேற்கொண்டு வருகிறது. அதில் நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் புனரமைப்புச் செய்து மாணவர்களுக்கான சத்துணவு வழங்கும் திட்டம் மிகச் சிறந்த திட்டமாகும். இதன்மூலம் எமது நாட்டின் மாணவர்களின் முன்னேற்றத்திற்கான பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் தாம் இப்பிரதேச மக்களின் பிரதிநிதி என்ற வகையில் எமது அரசாங்கத்திற்கும் இத்திட்டத்தை மேற்கொள்ளும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார். அத்துடன் காரைநகர் பிரதேசத்தில் மூன்று பாடசாலைகள் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் இந்தப் பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறித்துப் பெருமையடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வலயக் கல்விப் பிரதிப் பணிப்பாளர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி பு.ஸ்ரீ.விக்னேஸ்வரன் முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.அருணகிரிநாதர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இத்துடன் கடந்த வெள்ளியன்று காரைநகர் தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாசாலையிலும் அப்பாடசாலையின் அதிபர் தலைமையில் அடிக்கல் நாட்டும் நிகழ்வும், மரம் நடுகை நிகழ்வும் இடம்பெற்றது. இந்நிகழ்வுகளில் ஈ.பி.டி.பி.யின் காரைநகர் பிரதேச அமைப்பாளரும், காரைநகர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான வீரமுத்து கண்ணன், பிரதேச செயலர் திருமதி பி.தேவநந்தினி உட்படப் பலர் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# தரம் 5 மாணவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

### ஆனைக்கோட்டை பொதுநூலகம் ஏற்பாடு

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் ஆனைக்சோட்டை உப அலுவலக பொது நூலகத்தின் நூலக வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தின் ஏற்பாட்டின் ஓர் அம்சமாக தரம் ஐந்து மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை ஆனைக்கோட்டை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகப் பொது நூலகத்தின் நூலகர் திருமதி சுபத்திரா மகேஸ்வரன் தெரிவித்தார்.

இவ்வழிகாட்டல் கருத்தரங்கில், 'புகழ்' வெளியீட்டு ஆசிரியர் லோ.விஜேந்திரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கினை நடத்தவுள்ளார்.

எனவே, இவ்வரிய சந்தர்ப்பத்தினைத் தவறவிடாது புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களை அவர்களது பெற்றோர் தவறாது அழைத்து வந்து இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு நூலகர் அழைப்பு விடுத்துள்ளார்.


## வாகனங்கள் விற்பனைக்குண்டு

பின்வரும் வாகனங்கள் விற்பனைக்கு உண்டு

| | | |
|---|---|---|
| 41 - XXX | இஸ்சுஸ் லொறி | - 4 |
| 40 - XXX | இஸ்சுஸ் லொறி | - 1 |
| 28 ஸ்ரீ XXX | இஸ்சுஸ் லொறி | - 1 |
| 26 ஸ்ரீ XXX | டிப்பர் இஸ்சுஸ் | - 1 |

தொடர்புகளுக்கு :

0755751955, 0772557863
0213737686

C/1702

## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

சுதுமலை தெற்கில் சகல வசதிகளும் கொண்ட ஒரு வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு : க.சீவறட்ணம், சம்பந்தர் ஒழுங்கை சுதுமலை தெற்கு.(R/152)


# திருட்டுச் சந்தேகத்தில் மூவர் மாட்டினர்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் திருட வந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தென்பகுதியைச் சேர்ந்த மூன்று பெண்கள் யாழ்.பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

நீர்கொழும்பு, கண்டி போன்ற இடங்களைச் சேர்ந்த இந்த மூன்று பேரும் நல்லூரின் ஒன்பதாம் திருவிழா அன்று பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டபோது அவர்கள் தமது இருப்பிடங்களை மாறி மாறிக் கூறியிருப்பதுடன், சந்தேகப்படும்படியாக நடந்து கொண்டதனை அடுத்து இவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதாகவும் அந்தத் தகவல் தெரிவித்தது,

நேற்று யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டது. (பா)



வயாவிளான் மகா வித்தியாலயப் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் காணலாம். (படம் : நந்தகுமார்)

# மலர் வெளியீடும் பரிசளிப்பு விழாவும்

(வயாவிளான்)

யாழ். வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் வயவன் மலர் வெளியீடும் நேற்று நடைபெற்றது.

ஆர்.சி நடராசா கலையரங்கத்தில் வித்தியாலய அதிபர் க.கனகராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினராகத் தெல்லிப்பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலக்குமாரன், கௌரவ விருந்தினராக வடமாணத் திட்டமிடல் செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் ம.துஸ்யந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.


வயவன் மலரின் முதல் பிரதியை யாழ்.பொன் பரமானந்தா வித்தியாலய ஆசிரியை வலன்ரீனா இளங்கோவன் பெற்றுக் கொண்டார். கௌவரப் பிரதியை வயாவிளான் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவி சோபியா விஜயன் பெற்றுக்கொண்ட அதே வேளை 35 பேர் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பேருந்து தரிப்பிடத்துக்கு அடிக்கல் நாட்டு விழா

ஊர்காவற்றுறை பேருந்துத் தரிப்பிடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நாளை காலை 10,30 மணிக்கு ஊர்காவற்றுறை நகர மையத்தில் ஊர்காவற்துறை பிரதேச சபை தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரின், சிறப்பு விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# குருக்கள் கௌரவிப்பு



இணுவை மண்ணைச் சேர்ந்த ஊர்மக்களாலும், சர்வதேச சமூகத்தினராலும் மதிக்கப்படுபவரும், சிறந்த சிவாச்சாரியாருமான குமாரசாமிக் குருக்கள் சரவண பவக்குருக்கள் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இணுவில் காரைக்கால் சிவன் கோவில் வருடாந்த மஹோற்சவத்தின் இறுதி நாளான கடந்த வெள்ளிக்கிழமை ஆலய வீதியிலுள்ள அம்பலவாணர் கலையரங்கத்தில் ஆலய தர்மகர்த்தா சபையினரால் கௌரவிக்கப்பட்டார்.

# கட்டுரைத் தொகுப்பு வெளியீட்டு விழா

(தும்பளை)

சமரபாகு சினா உதயகுமாரின் 'பகிர்வு' என்னும் கட்டுரைத் தொகுதி வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4.00 மணிக்குப் பொலிகண்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் அதன் அதிபர் ச.செல்வானந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்திரனராக மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளார் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில், விமர்சன் உரைகளைக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் க.லலீசன், க.இன்பரூபன் ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில், வெளியீட்டுரையை மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் திருமதி சிவமலர் சுந்தரபாரதியும், ஏற்புரையை நூலாசிரியரும் நிகழ்த்தினர். (62)




# சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்கும்
# காரைநகர் "கசூரினா" கடற்கரை



(யாழ்ப்பாணம்)

காரைநகர் "கசூரினா" கடற்கரைக்கு செல்லும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது.

இக்கடற்கரைக்கு நாளாந்தம் வெளிநாடுகளிலிருந்தும் தென்னிலங்கையிலிருந்தும் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் பெருமளவிலான உல்லாசப்பயணிகள் வருகை தருகின்றனர்.

இவ்வாறு வருகை தரும் உல்லாசப் பயணிகளுக்கு ஏற்ற வகையில் வசதிகள் சீர்செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக குடிநீர் மலசல கூடம், கடலில் நீராடி விட்டு உடைமாற்றுவதற்கு ஏற்ற வகையில் ஆண், பெண் இருபாலாருக்கும் தனியான இடங்கள் ஏனைய தேவைகளுக்கான தண்ணீர் வசதி என்பன சிறப்பான முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கசூரினா கடற்கரைக்குச் செல்லும் நுழைவாயில் பகுதியில் மதுபானம் கொண்டு செல்ல தடைவிதிப்பு என்ற குறியிடப்பட்டு மதுபோத்தலில் தடை அடையாளம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையால் உல்லாசப் பயணிகள் அச்சமின்றி அங்கு செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கடற்கரைப் பகுதியில் பிரத்தியேகமாக வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அங்கு சகல விதமான உணவுப் பொருட்களையும் குளிர்பான வகைகளையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது. கடலில் பயணம் செய்வதற்கு 'படகுச் சேவை' ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் பயணிகள் அதில் சென்று கடலின் இயற்கை அழகை இரசிக்கக்கூடியதாக உள்ளது.

வாகனங்கள் நிறுத்துவதற்கு போதிய இடவசதிகள் காணப்படுவதாலேயே உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது. மேலும் சுகாதாரமும், சூழலுக்கேற்ற ஒழுக்கமும் பேணப்படுமிடத்து மேலும் உல்லாசப் பணயிகள் வருகை அதிகரிப்பதுடன் வருகின்ற உல்லாசப் பயணிகள் மீண்டும் இங்கு வரவேண்டும் என்ற எண்ணம் ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.


## அபிவிருத்தித்திட்டத்திற்கு 5 பாடசாலைகள் தெரிவு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயத்திலுள்ள ஆரம்பபாடசாலைகளில் 5 பாடசாலைகள் மகிந்த சிந்தனை 5 ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயம், மேலைப் புலோலி சைவப்பிர காச வித்தியாசாலை, தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை, வட இந்து ஆரம்பப்பாடசாலை, புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை ஆகியன தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளாகும்.

இப்பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இவ்வேலைகள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் வேலைகள் எதிர் வரும் செப்ரெம்பாட மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்ய வேண்டும் எனவும் முடிவுற்றதும் அதற்குரிய பணம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால பாடசாலைகளுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (109)



## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று...

(நல்லூர்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடாத்தும் ஆன்மிக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலை நிகழ்வுகளும் தொடரில் இன்று 'கந்தன் கருணை' என்னும் விடயம் பற்றி சிவ-உமாசுதன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்ற உள்ளார்.

தொடர்ந்து இடம்பெறும் கலை நிகழ்வுகளில் வேலணை வங்களாவடி ஸ்ரீ முருகன் அறநெறிப்பாடசாலை, இளவாலை ஆல்சடை ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, இளவாலை துணைவி அறநெறிப்பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் நிகழ்வுகளும் இடம்பெற உள்ளன.

விசேட நிகழ்வாக புஸ்பமலர் யோக நாதனின் மாணவர்களின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெற உள்ளது.

✡ ✡ ✡ ✡ ✡

சைவத் தமிழ் பண்பாட்டு கழகத்தினால் நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடத்தி வரும் 'தெய்வீகப் பேருரைகளும் கலை நிகழ்வுகளும்' தொடரில் இன்று சைவப்புலவர் நித்திய தசிதரன் 'கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்' என்னும் பொருள் பற்றி சிறப்புச் சொற்பொழிவு ஆற்ற உள்ளார்.

✡ ✡ ✡ ✡ ✡

இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடாத்தும் தெய்வீக இசையரங்கில் திருமதி.குணபூஷணத்தின் பாட்டுக் கச்சேரி இன்று மாலை 6.45-7.45 மணிவரையும் இடம்பெறஉள்ளது.

இன் நிகழ்வில் அணிசேர் இசைக் கலைஞர்களாக ஏ.ஜெயராமன் வயலினையும், திரு.எஸ்.மகேந்திரன் மிருதங்கத் தினையும், ஆர்.சிவராமன் கெஞ்சிராவினையும் இசைக்க உள்ளனர்.

✡ ✡ ✡ ✡ ✡

மகேஸ்வரன் மணிமண்டபத்தில் இன்று நிர்மலம் (பகுதி 2) ஆத்ம விழிப் புணர்ச்சியுடன் கூடிய தெய்வீக இசை விருந்து தொடரில் 'சாமகானம்' வீணை இசை இடம்பெற உள்ளது. நல்லூர் சைவ மகாசபை நடாத்தும் தெய்வீக இசைப் பேருரை தொடரில் இன்று பிற்.பகல் 6.30 மணி முதல் பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் 'கந்தபுராணம்' சொற்பொழிவு நல்லை ஆதின குரு மூர்த்த ஆலய மண்டபத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (42,60)


## பூநகரி பிரதேசத்தில் மண் பரிசோதனை

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் உள்ள நெற்காணிகள் உவர் நிலமாக மாறிவருவதையிட்டு இதுபற்றிய மண் பரிசோதனையை 250 இடங்களில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

இவ் ஆய்வு மத்திய அரசின் விவசாயத்திணைக்கள மண் பரிசோதகர் குழுவினால் அடுத் தவாரம் நடை பெறவுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக மண் ஆய்வுக்குட்படுத்தப்படும் பகுதி விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டு கமநல சேவை நிலையத்தின் அனுசரணையுடன் ஆய்வு நடைபெறவுள்ளது. (112)

## நல்லூர் முருகனுக்கு இன்று 14ஆம் திருவிழா



### சைவம் ஒளிவீசும்!

பூர்விக மான புதுமைகளாற் பேர் பெற்ற
ஊர்நல்லூர் சைவம் ஒளிவீசும் - பேர்பெற்ற
ஆலயங்கள் மண்டபங்கள் ஆதீனஞ் சத்திரங்கள்
சாலப் பொருந்தியதே சான்று

-நல்லூர் கந்தன் பாமாலை-

### வேலும் மயிலும் சேவலும் துணை!

நம் அகங்காரத்தைக் கூறு போட்டு
நமக்கு அறிவொளியைத் தரும் வேலவா
நம்மை அறியாமை என்னும் உறக்கத்தில்
நின்று எழுப்பும் சேவல் கொடியோனே
நம் பாசங்களை அறுக்கும் மயில் வாகனனே
நின் வேலும் மயிலும் சேவலும் துணை நமக்கு

-கனகராசா (நல்லூர்)-

### சோதி வடிவான பிள்ளை!

நல்லதோ ரூரில் குந்தி
நாற்றிசையும் அருளைப் பொழியும்
வல்லவனாம் குமரன்: அவனை
வணங்குவோர்க்குப் போகுமிடிமை
எல்லை யிலாவரங் களியும்
எழி லழகன் கந்தன் புகழை
சொல்லிட வோர்வார்த் தையில்லை: அவனே
சோதி வடிவான பிள்ளை!

-பிரியா பரந்தாமன்-
கைவேலி

நல்லூரானை வணங்கிடுவோம்
நலம் பல பெற்றிடுவோம்
மனங்கவர் டிசைன்களில் தங்க நகைகளை
செய்து பெற்றிட நாடுங்கள்
விஷானி நகை மாளிகை



இல: 187, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
தொ.பே: 021 221 9510
பக்ஸ்: 021 221 9511

## முறிகண்டிக் காட்டில் சிறுத்தையின் முண்டம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி முறிகண்டி காட்டுப்பகுதியில் சிறுத்தைக்குட்டி ஒன்றின் தலை கால்கள் வெட்டப்பட்ட நிலையில் கிளி நொச்சி பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலப்பெருமாள் காட்டுப் பகுதியில் ஏற்கனவே இந்தச் சிறுத்தைக்குட்டி சுருக்கில் மாட்டியிருந்த போது பொலிஸார் அத்னை மீட்டபோது அது காட்டில் தப்பியோடியிருந்த தாகவும் அந்தச்சிறுத்தைக் குட்டியே இறந்த நிலையில் தலையும், கால்களும் வெட்டப்பட்டு முறிகண்டி காட்டுப் பகுதியில் காணப்பட்டுள்ளது. இந்தச் சிறுத்தைக்குட்டி வேட் டையாடப்பட்டு இதன் பற்கள், நகங்களுக்காக தலையும் கால்களும் வெட்டப்பட்டிருக்கலாம் எனவும் மேலும் தெரியவருகின்றது.

நேற்றுமுன்தினம் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த செய்தியாளர் மாநாட்டிலேயே இச்செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (பா)



யாழ்.உயரப்புலம் மெதடிஸ்த மிசுஷன் தமிழ் கவலன் வித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி.இளங்கோவன் மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (137)

எல்லாருக்குமே உங்கள் காதைக் கொடுக்கலாம் ஒரு சிலரிடம மட்டுமே வாயைக் கொடுக்கலாம். - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## இன்று நேற்று வந்த ஏமாற்றல்ல இது!

இவ்வளவு வீரங்கள் பேசி, ரோசங்கள் காண்பித்து, எதிரிக்கு சவால்கள் விட்டு நாடகங்களை அரங்கேற்றியபடி, இத்தனை அழிவுகளையும் அவலங்களையும் மக்களுக்கு ஏற்படுத்தியவர்கள், அதற்கெல்லாம் எந்தப் பொறுப்பும் சொல்லாமலே மன்னிப்பும் கேளாமலே மற்றொரு தேர்தலுக்காக கிழக்கில் என்ன முழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கவனியுங்கள்:

"நடைபெறவுள்ள கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தமிழர்களின் தன்மானத் தேர்தல். முள்ளிவாய்க்காலில் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கும், ஜெனிவாவில் நமது உரிமையை வென்றெடுப்பதற்கும் நடைபெறுகின்ற தேர்தலாகும். கிழக்கு மாகாணத் தன்மானத் தமிழர்கள், பாலத்தையும், விளையாட்டு முற்றத்தையும், கட்டடங்களையும், வீதிகளையும் கண்டு சோரம் போகமாட்டார்கள் என்பதை நிரூபித்துக் காட்டுகின்ற நன்னாள், பொன்னாள் அந்தத் திருநாள் செப்டெம்பர் 8 ஆம் திகதியாகும். கடந்த காலங்களில் நமது தமிழ் இனம் வாக்களிப்பதும் கீழ் நிலையில் இருப்பதும் நீங்கள் அறிந்ததாகும். நாம் இழந்த உரிமையை மீளப் பெறுவதற்குள்ள வாய்ப்பு இதுவே ஆகும். இக்கிராமம் இன்று நேற்றல்ல அன்று தொட்டு இன்றுவரை, தமிழ்த் தேசியத்தை ஆதரித்த கிராமம். தங்க மாலையிட்டு, பாராளுமன்ற உறுப்பினர்களைக் கௌரவித்த கிராமம். அவர்களை இரத்தத்திலகமிட்டு வரவேற்ற கிராமமுமாகும். அதனால் வருகின்ற தேர்தலில் !நமிழ் தேசியத்தை ஆதரித்து உங்களது வீடான வீட்டுச்சின்னத்திற்கு வாக்களித்து தமிழ் தேசியத்தை வெல்லச் செய்யுங்கள்..."

இவ்வாறுதான் இதே வசனங்களோடுதான் கிழக்கில் தமிழரசுக் கட்சியினர் பிரசாரம் செய்துவருவதாக பத்திரிகைகளில் செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்த வெற்று வார்த்தை ஜாலங்களை இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் தமிழ்மக்கள் கேட்டுக் கிறுகிறுத்துக் கொண்டிருக்க வேண்டும். தமிழ்மக்களின் நன்னாள் பொன்னாள் திருநாள் எல்லாம் தேர்தல் நாளன்று ம்ட்டும்தானே பேச்சில் வந்துகொண்டிருக்கிறது. அதன்பிறகு அப்படியொரு நாள் பற்றி இவர்கள் பேசுவதும் இல்லை; அந்த நாளுக்காகக் காத்திருக்கும் மக்களுக்கு அதற்கான நம்பிக்கையையும் காட்டுவதில்லை. ஏன், மக்களும் அதுபற்றி கேட்பதில்லை?

ஒவ்வொரு தேர்தலிலும் வென்றபிறகு, அந்த நன்னாள் பொன்னாளை எல்லாம் வரவிடாமல் தடுத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லும் அந்த எதிரிகளை, எதிரிகளாகவே வைத்திருந்து அடுத்த தேர்தலிலும் உணர்ச்சிகரச் சவால்களோடு வெல்வதற்குத் தகுந்தமாதிரிதானே நடந்துகொண்டு வருகிறார்கள். அதைத்தவிர, முள்ளிவாய்க்காலில் இழந்த உரிமைகளை ஜெனீவாவில் போய் எடுப்பதற்கு இவர்களிடமிருக்கும் அந்த வித்தை என்ன? அதை மக்களுக்குச் சொல்லக் கூடாதா? ஆற்றிலே போட்டுவிட்டு குளத்திலே எடுத்தது கூடச் சம்பந்தரில்லையே... அது சுந்தரர் அல்லவா!

இப்படி யார் யாரோ வந்து எடுத்துத் தருவார்கள் என்பதைச் சொல்லியே தொடர்ந்து மக்களை ஏமாற்றிவர முடிவது எங்ஙனம்? ஒரு உதாரணம்: திருமலையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், அங்கு தமிழரசுக் கட்சியில் போட்டியிடும் வேட்பாளரான ஆயுர்வேத வைத்தியர் முதலில் பேசும்போது, நாங்கள் வென்றால் இங்கு மக்களின் குறையாக இருக்கும் வைத்தியசாலையை நவீன வசதிகளுடன் கட்டித்தருவோம் என்று பேசியுள்ளார். இதன் பிறகு பேசவந்த தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிப் பாராளுமன்ற வீரர், ஆஸ்பத்திரிகளும் பாடசாலைகளும் பாலங்களுமல்ல மக்கள் கேட்பது, உரிமைக்கும் சுதந்திரத்துக்கும் விடுதலையுணர்வுக்குமே அவர்கள் வாக்களிப்பார்கள் என வைத்தியரை மறுத்து உணர்ச்சிபொங்க முழங்கினார். கைதட்டலோ தட்டல்!

எப்படி எங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ளப் போகிறோம்? - ஆசிரியர்

## பாரிய சேதமடைந்த நிலையில் சங்கானை வைத்தியசாலை வீதி

(சங்கானை)

சங்கானை வல்லை வீதியிலிருந்து சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திற்கு அருகாக சங்கானை அரச வைத்திய சாலைப்பகுதிக்குச் செல்லும் முக்கிய வீதி பாரிய சேதமடைந்துள்ளது.

நிற்சாமம் கிராமத்தினூடாக சித்தங்கேணி பண்டத்தரிப்பு பிரதான வீதியையும் பிரான்பற்று கிராமத்தையும் சென்றடையும் 2ஆம் ஒழுங்கை என அழைக்கப்படும் இவ் வீதி மிக நீண்ட காலமாகப் பராமரிக்கப் படாது மக்களின் பாவனைக்கு உதவாத நிலையில் கற்கள் நிறைந்து குண்டும் குழியுமாக காணப்படுகின்றது.

இவ்வீதி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், வைத்திய சாலைக்குச் செல்லும் பொது மக்கள் ஆகியோரோடு அங்கு வதியும் நூற்றுக்கணக்கான குடிகளைச் சேர்ந்த மக்கள் அனைவரும் பயன்படுத்தும் முக்கிய வீதியாகும்

வீதியில் கிளறுண்ட நிலையில் பரவலாகக் காணப்படும் கற்களினால் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி, ஆகியவற்றில் பயணிப்போரும் கால்நடையாகச் செல்வோரும் விபத்துக்குள்ளாவது சர்வசாதாரணமாக நடைபெறுவதைக் காணலாம். பாடாசாலையின் பிரதான வாயில்களில் ஒன்று இவ் வீதியில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளிகள் பாடசாலை மாணவர்கள் பொதுமக்களின் சிரமங்களைக் கவனத்திலெடுத்து இவ்வீதியை மிக விரைவில் புனரமைக்குமாறு சம்பந்தப்பட்டோரை மக்கள் கோருகின்றனர்.

## பொதுக்கூட்டம்

(இளவாலை)

இளவாலை, மணலடைப்பு ஸ்ரீமனோன்மணி. சமேத ஸ்ரீ அண்ணமகேஸ்வரர் ஆலய பரிபாலன சபை பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் பரிபாலன சபைத் தலைவர் நா.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும்.

முக்கிய பல விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதால் ஆலய பங்குதாரர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் குறித்த நேரத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## கமக்காரர் அமைப்புக்கான தேர்தல் அறிவிப்பு

(பூநகரி)

பூநகரி கமநலச் சேவை நிலையத்தின் கீழ் இயங்கும் 5 கமக்காரர் அமைப்புக்கான தேர்தல் மூன்றாம் கட்டமாக இந்த மாதத்தில் நடைபெறவுள்ளது.

ஏனைய 15 கமக்கார அமைப்புக்கான தேர்தல் நடந்து முடிந்துள்ளது. ஏனைய அமைப்புக்களின் தேர்தல்கள் பின்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளதாக பூநகரி கமநலசேவை அலுவலர் ந.சுந்தர மூர்த்தி அறிவித்துள்ளார் அதன்படி இன்று பிள்ளையார் நகர் கமக்கார அமைப்பு, எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை கௌதாரிமுனை கமக்கார அமைப்பு, 13 ஆம் திகதி திங்கட்கிழமை பரமன் கிராய் நாடு கமக்கார அமைப்பு, 16 ஆம் திகதி வியாழக்கிழமை மட்டுவில் கமக்கார அமைப்பு, 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செட்டியகுறிச்சி கமக்கார அமைப்பு. (112)

## ஆபாசப்படம் பார்த்த மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

கைத்தொலைபேசியில் ஆபாசப்படம் பதித்து வைத்திருந்த மூவர் கடந்த வாரம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்குட்படுத்தப்பட்டதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுன்னாகம் பகுதியிலும் பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறைப்பகுதியிலும் தலா ஒவ்வொரு பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டனர் எனவும் அந்தத் தகவல் தெரிவித்தது. நேற்று முன்தினம் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாரந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.(பா)

## தெருவிளக்குகள் பொருத்தல்

(ஆனைக்கோட்டை)

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஜே/134, ஜே/135, ஜே/136 ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளிலுள்ள வீதிகளுக்கு வலி. தென்மேற்கு பிரதேச சபையினால் மின் விளக்குகள் பொருதப்பட்டுள்ளன.

விளக்குகளுக்கு மக்களின் ஒத்துழைப்புடன் வீடுகளிலிருந்து மின்சாரம் பெறப்பட்டே விளக்குகள் ஒளிரச் செய்யப்பட்டுள்ளது. இதேவேளை இவ்வீதிகளிலுள்ள சில மின்கம்பங்களுக்கு மின்சார சபையினால் மின் விளக்கு பொருத்தப்பட்டுள்ளது.

எனினும் சிலர் இவ்வாறன பாரபட்சம் ஏன் என்றும் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளனர்.(104)

## புற்றளை மகா வித்தியாலயத்தில் வருடாந்த பரிசளிப்பு விழா

புலோலி புற்றளை மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் அதிபர் ஆர். ஆனந்தேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், திருமதி இராஜஇராஜேஸ்வரி சத்தியசீலன் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டனர்.

புற்றளைச் சித்திவிநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜைகள், ஆராதனைகளையடுத்து விருந்தினர்கள் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டனர்.

வித்தியாலய பிரதி அதிபர் எஸ்.விக்கினேஸ்வரமூர்த்தி வரவேற்புரையை நிகழ்த்தினார். இளைப்பாறிய சங்கீத ஆசிரியை திருமதி. இந்திராணி பத்மநாதன், வித்தியாலய பழைய மாணவ சங்க கனடாக்கிளைத் தலைவர் எஸ்.தர்மகுலசிங்கம் பிரதம விருந்தினர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

திருமதி.இரஜஇராஜேஸ்வரி சத்தியசீலன் பரிசில்களை வழங்கினார். மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (01)

## கரவெட்டி தேவமாதா ஆலய வருடாந்த திருவிழா

(கரணவாய்)

கரவெட்டி தேவமாதா ஆலய வருடாந்த திருவிழா இன்று மாலை 4.45 மணிக்கு திருச்செபமாலையும், தேவமாதாவின் திருக்கொடியேற்றத்துடனும் நடைபெறவுள்ளது.

தினமும் நவநாள் வழிபாடுகள் மாலை 4.45 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி நடைபெறும். தொடர்ந்து எதிர்வரும் 14 ஆம் திகதி 5 மணிக்கு நற்கருணை விழாத்திருப்பலியும் நற்கருணை ஆசிர்வாத வழிபாடும் இடம்பெறும். திருவிழாத் திருப்பலி எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். திருநாட்திருப்பலி நிறைவில் தேவமாதாவின் திருசசெரூப பவனி இடம்பெறவுள்ளது. (18)

# இரணைமடுக்குளம் வற்றியது ஏன்? இராணுவம் காரணமா?

**- கோ.றுஷாங்கன்**

**கிளிநொச்சி** இரணைமடுக்குளம் வற்றிவிட்டதால் இம்முறை சிறுபோக விவசாயிகள் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது தொடர்பாக வெளியான சில செய்திகளில், குளம் வற்றியமைக்கு இராணுவத்தினரே காரணம் என்று மொட்டந் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டு வழமைபோல எமது சில தமிழ் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டும் இருந்தன. உண்மையில் என்னதான் நடந்தது என்று விசாரிக்கப் புறப்பட்டோம்.

வன்னியைப் பொறுத்தளவில் ஒவ்வொரு வருடமும் காலபோகம், சிறுபோகம் என்று இரண்டு போகங்களாக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காலபோகம், பருவகால மழையை நம்பிச் செய்யப்படுவது. இதற்கு குளத்து நீரை

**அந்தந்தப் பிரச்சினைக்கு எது எது காரணமாக இருக்கிறது என்பதைச் சரியாக இனங்கண்டாலே, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும். அப்படியின்றி, பார்வைக்கோளாறுடன் பிரச்சினைகளை அணுகினால், தீர்வு காணக்கூடிய பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியாமல் போவதுடன், அவை தேவையற்று பூதாகரமாக்கப்பட்டு மேலும் பிரச்சினைகள் உருவாகவே வழிவகுக்கும்.**

விவசாயிகள் நம்பியிருப்பதில்லை. ஆனால் சிறுபோகம் அப்படியல்ல. இதற்கு குளத்திலிருந்து வாய்க்கால் வழியே வயல்களுக்குக் கிடைக்கும் நீரையே விவசாயிகள் பெரிதும் நம்பியுள்ளனர்.

ஒவ்வொரு முறை சிறுபோகத்தின் போதும், குளத்தில் தண்ணீர் மட்டம் எந்தளவு இருக்கிறது, இதைக்கொண்டு எத்தனை ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியும், எந்த இன நெல்லை விதைக்கலாம், எந்தக் காலப்பகுதியில் விதைப்பு நடைபெற வேண்டும் என்பது பற்றியெல்லாம் திட்டக்குழுக்கள் அமைத்துத் தீர்மானம் மேற்கொள்ளப்படுவது வழக்கம்.

இந்தத் திட்டக்குழுவில், நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் என, இவற்றுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் திணைக்களத்தின் பிரதிநிதிகளும் இடம்பெற்று, கலந்துரையாடியே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவது வழக்கம்.

இந்தத் திட்டக்குழுவின் வழிகாட்டலின்படி நெற்செய்கை மேற்கொள்ளப்படும்போது, அதற்குத் தேவையான நீர் போதியளவுக்கு இரணைமடுக் குளத்திலிருந்து விவசாயிகளுக்குக் கிடைக்கும். கூடவே, கோடை மழையும் பெய்யும்போது நெற்செய்கை எவ்வித தடையுமின்றி சிறப்பாக மேற்கொள்ளப்படுவது வழமை.

இந்த ஆண்டும் இதேபோன்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், நீர்ப்பாசனத்திணைக்களப் பொறியியலாளர், கமநல சேவைகள் திணைக்கள பொறுப்பதிகாரி, பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள், விவசாயிகள் என அனைவரும் கூடி சிறுபோக நெற்பயிர்ச்செய்கை தொடர்பான தீர்மானத்தை மேற்கொண்டனர்.

இம்முறை இந்தத் திட்டக்குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும் கலந்துகொண்டு சிறுபோகச் செய்கை தொடர்பான தீர்மானங்களை வழிநடத்தியிருந்தார்.

இந்தக் கூட்டத்தின்போது, இம்முறை இரணைமடுக் குளத்தில் இருந்த நீர்மட்டத்துக்கு அளவாக 8,000 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்வது என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு, எந்தெந்தப் பகுதிகளுக்கு எவ்வாறு நீர்ப்பாசனம் வழங்குவது என்பது தொடர்பாகவும், பங்கு அணைப்பு தொடர்பாகவும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆனால், திட்டக்குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு மாறாக, சில விவசாயிகள் அனுமதியின்றி சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டனர். இவ்வாறு, நிர்ணயிக்கப்பட்ட 8,000 ஏக்கர்களுக்கு மேலதிகமாக 4,000 ஏக்கர்களில் முன்னனுமதியின்றி நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மேலதிக நெற்செய்கையையும் சேர்த்து 12,000 ஏக்கர்களுக்கு வழங்குவதற்கு இரணைமடுக்குளத்தில் போதிய நீர் இல்லாத நிலையில், பல வயல்களுக்கு நீர் போதாமல் அவை கருகத்தொடங்கின.

இந்த ஆண்டு வழமையாகப் பெய்யும் கோடை மழையும் கைவிட்டுவிட்டதால், குளத்து நீர் போதாத நிலையில் பல வயல்கள் எரிந்து நாசமாகிப் ' போயின.

இந்த நிலைமைக்குக் காரணம், அனுமதியின்றி, அங்கீகரிக்கப்பட்ட அளவுக்கு மேலதிமாக சில விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டமையே என்று திட்டக்குழு உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர். திட்டக்குழுவின் வழிகாட்டலின் பேரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தால் இவ்வாறான ஒரு பயிரழிவைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டிருக்காது என்று அவர்கள் கூறுகின்றனர்.

சில நெல் வயல்கள் இவ்வாறு நீரின்றி எரிந்து போனதையடுத்து, கடந்த மாத இறுதிப்பகுதியில் நடைபெற்ற அவசர திட்டக்குழுக் கூட்டத்தின்போது, அனுமதியின்றி நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் சிறுபோக உரிமையை அடுத்த மூன்று வருடங்களுக்கு இரத்துச் செய்வது எனவும், இவர்களிடம் ஏக்கர் ஒன்றுக்கு 15,000 ரூபாப்படி தண்டம் அறவிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இரணைமடுக்குளத்தில் இருந்து கிடைக்கக் கூடியதாக உள்ள நீருக்கு மேலதிகமாக, அனுமதியின்றி விவசாயத்தில் ஈடுபட்டவர்களால் நெற்செய்கை இவ்வாறு பாதிக்கப்பட்டிருக்க, நம்முடைய பத்திரிகைகள் சில, முந்திக்கொண்டு இரணைமடுக்குள நீர் வற்றியமைக்கு இராணுவத்தினரே காரணம் என்று செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தப் பகுதியில் இராணுவத்தினர் அமைத்துள்ள முகாம் காரணமாகவே குளத்து நீர் வற்றியதாகவும், அதனாலேயே விவசாயிகள் பாதிக்கப்பட்டதாகவும் இந்தச் செய்திகளில் குறிப்பிடப்பட்டிருந்தன.

முகாம் அமைத்ததால் நீர் வற்றியது எப்படி? நீர் வற்றியமைக்கும் இராணுவத்தினருக்கும் என்ன சம்பந்தம்? என்ற எந்தவித தர்க்க ரீதியான விளக்கமும் இன்றி, நாய்க்கு எங்கு அடித்தாலும் பின்னங்காலைத் தூக்குவது போன்றே இந்தச் செய்திகள் எழுதப்பட்டிருந்தன.

இரணைமடுக் குளம் அமைந்துள்ள பகுதியில் முகாம்கள் அமைக்கப்பட்டு அது இராணுவமயப்பட்டிருப்பதும், அங்கே புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்டு வழிபாடியற்றப்பட்டு வருவதும் அடிக்கடி தமிழர் தரப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டுக் கண்டனம் தெரிவிக்கப்பட்டு வரும் விடயம். முன்னர் புலிகளுடைய காலத்திலும் இரணை-மடுக் குளத்தின் ஒரு பகுதி முற்றிலுமாக உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டு மக்கள் அங்கு செல்ல முடியாதவாறு தடுக்கப்பட்டிருந்ததும் தெரிந்ததே.

ஆனால், இந்தப் பகுதியில் இராணுவத்தினர் முகாமிட்டிருப்பதால், குளம் வற்றியமைக்கும்

**முகாம் அமைத்ததால் நீர் வற்றியது எப்படி? நீர் வற்றியமைக்கும் இராணுவத்தினருக்கும் என்ன சம்பந்தம்? என்ற எந்தவித தர்க்க ரீதியான விளக்கமும் இன்றி, நாய்க்கு எங்கு அடித்தாலும் பின்னங்காலைத் தூக்குவது போன்றே இந்தச் செய்திகள் எழுதப்பட்டிருந்தன.**

அவர்களே காரணம் என்று சொல்வதுதான் வேடிக்கையானது. இது எமது அறிவீனத்தையே வெளிக்காட்டுவதாக அமையும்.


அந்தந்தப் பிரச்சினைக்கு எது எது காரணமாக இருக்கிறது என்பதைச் சரியாக இனங்கண்டாலே, பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும். அப்படியின்றி, பார்வைக் கோளாறுடன் பிரச்சினைகளை அணுகினால், தீர்வு காணக்கூடிய பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியாமல் போவதுடன், அவை தேவையற்று பூதாகரமாக்கப்பட்டு மேலும் பிரச்சினைகள் உருவாகவே வழிவகுக்கும்.

மாவிலாறில் 2005ஆம் ஆண்டு உருவான சிறிய சர்ச்சையை அதனளவில் கையாண்டு தீர்வைக் காண முயலாமல் பூதாகரமாக்கியதால், அங்கு மூண்ட மோதல் முள்ளி வாய்க்கால் வரையில் தமிழர்களை அலைக்கழித்து அழிவுகளைப் பரிசளித்தமையை அதற்குள் நாம் மறந்துபோக முடியாது.

எனவே....

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என, மக்கள் இனிமேல் ஊடகச் செய்திகளை அப்படியே நம்பிவிடாமல், உண்மை என்ன என்பதை தீர விசாரித்து அறிந்துகொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்வது அவசியம்.

அல்லாதுபோனால், தொழில்முறைத் தேர்ச்சியற்ற, வெறும் உணர்ச்சிச் சவால்கள் நிறைந்த நமது தமிழ் ஊடகச் செய்திகள் தொடர்ந்தும் தமிழர்களுக்கு அவலங்களையே பரிசளித்துக் கொண்டிருக்கும்.




# மிகப் பாரிய சவால்கள் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது

இந்த புனித ரமழான் மாதத்திலே பெண்கள் தொழ முடியாத நிலை காணப்படுகின்றது. பெரும்பான்மையினத்தினர் கூடி, குழப்புவதற்கு இருக்கின்றனர். இதனை தடுப்பதற்கு அருகதையில்லாதவர்கள் ஆட்சியில் இருக்கின்றார்கள் என நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவருமான ரவூப் ஹக்கீம் கூறினார்.

கிண்ணியாவில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் தலைமையில் நடைபெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் ஹக்கீம் இவ்வாறு கூறினார்.

இந்நிகழ்வில் அமைச்சர் தொடர்ந்து பேசுகையில், நாம் அரசாங்கத்துடன் சேர்ந்து போட்டியிடப்போவதாக தமிழ்தேசியக் கூட்டமைப்பினர் ஆரம்பத்தில் அறிக்கைகளை விட்டனர். இப்போது அவர்களுக்கு பெரும் சந்தோசம். இதெல்லாம் பார்க்கின்ற போது முஸ்லிம் காங்கிரஸ்தான் ஆட்சியைத் தீர்மானிக்கும் கட்சி, எந்தத் தரப்பு ஆசனங்கள் எடுத்தாலும் எங்களின் ஆசனத் தொகையை வைத்தே ஆட்சியைத் தீர்மானிக்க வேண்டும் என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகவுள்ளது.

இன்று முஸ்லிம்களுக்கு பாரிய சவால்கள் உள்ளன. 40 முஸ்லிம்கள் குடும்பங்கள் வீட்டில் ஒன்று கூடி தொழ முடியாமல் உள்ளது. பிக்குகள் வந்து கலாட்டா செய்யும் நாடாக இது மாறியுள்ளது. இதை முஸ்லிம் காங்கிரஸ் தவிர வேறு யாரும் தட்டிக் கேட்பதில்லை என்றார்.



கைத்தொழில் ரீதியாக இலங்கை - இந்திய நட்புறவை மேம்படுத்தும் நோக்கில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் (இந்தியக் கண்காட்சி) நடத்தப்பட்டு வருகின்றது. இந்நிகழ்வில் கலந்துகொள்ள வருகைதந்த இந்திய அமைச்சர் பிரசாத் சர்மா உட்பட முக்கிய பிரமுகர்கள் - ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் மாலை சந்தித்து கலந்துரையாடினர்.

# ரணில் தொடர்பான கேள்விகளுக்கு நாளை பதில் வழங்கப்படும்



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தொடர்பான கேள்விகளுக்கு நாளை பதிலளிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்ட காமினி திஸாநாயக்கவின் தேர்தல் வியூகங்களை,ரணில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவிற்கு வழங்கியதாக மைத்திரிபால அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தார்.

நாளை கொழும்பில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை ஒழுங்கு செய்து அதில் இதற்கான பதில்களை அளிப்பேன். இந்த சம்பவம் தொடர்பில் பரவலாக செய்தி வெளியிடப்பட்டு வருகின்றது.

எதிர்க்கட்சிகளும் ஊடகவியலாளர்களும் எழுப்பும் கேள்விகளுக்கு இந்த செய்தியாளர் சந்திப்பில் பதிலளிக்கப்படும் என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்

# பள்ளிவாசல் படுகொலை காத்தான்குடியில் நினைவு

(மட்டக்களப்பு)

காத்தான்குடி பள்ளிவாசல்களில் கடந்த 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட 103 முஸ்லிம்களினதும் 22ஆவது ஆண்டு நினைவு தினம் கடந்த 3ஆம் திகதி காத்தான்குடி மற்றும் மட்டக்களப்பு நகரங்களில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. இச்சம்பவத்தின் போது 103 பேர் காத்தான்குடி மீரா ஜும்ஆ பள்ளிவாயில் மற்றும் ஹுஸைனயா பள்ளிவாயிலில் படுகொலை செய்யப்பட்டனர்.

புனித இரவு நேரத் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மீது துப்பாக்கித் தாக்குதல் நடத்தியதன் காரணமாக அவர்கள் ஸ்தலத்திலேயே படுகொலை செய்யப்பட்டனர். இந்த சம்பவத்தில் தொழுகையிலிருந்த 265 பேர் படுகாயமடைந்து அங்கவீனர்கள் ஆக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தின் 22 ஆவது நினைவு தினநாளன்று காத்தான்குடி நகரில் பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்படுவதுடன் கடைகள், வங்கிகள் மூடப்பட்டிருந்தன. நகரில் வெள்ளைக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. பள்ளிவாயில்களில் விஷேட பிரார்த்தனை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# இந்திய வர்த்தக வலயம் திருகோணமலையில் அமைக்க ஏற்பாடு

(கொழும்பு)

திருகோணமலையில் இந்திய வர்த்தக வலயமொன்று அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலையில் விசேட இந்திய வர்த்தக வலயமொன்றை அமைப்பது தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த வலயத்தில் இந்திய கைத்தொழில் உற்பத்தி நிறுவனங்கள் நிறுவப்பட உள்ளன. இந்த வர்த்தக வலயத்தை அமைப்பது தொடர்பான யோசனைத் திட்டங்களை முன்வைப்பதற்காக இரு நாடுகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்குள் இந்தக் குழு பரிந்துரைகளை முன்வைகக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வர்த்தக அமைச்சர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவிற்கும், இலங்கை அரச தரப்பினருக்கும் இடையில் இந்த விசேடவர்த்தக வலயம் அமைக்கும் திட்டம் குறித்து இணக்கம் காணப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் இல்லை



எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின்போது வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளாதிருக்க தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

கட்சி செயலாளர்கள் மற்றும் தேர்தலில் போட்டியிடுகின்ற சுயேற்சைக் குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இது குறித்து அறிவிக்கப்பட்டதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கின்ற சில கட்சிகள், இம்முறை மாகாண சபைத் தேர்தலுக்காக வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் ஒத்துழைப்பு பெறப்பட வேண்டியதன் அவசியம் குறித்து பல்வேறு சந்தர்ப்பங்களில் தேர்தல்கள் ஆணையாளருக்கு சுட்டிக்காட்டியிருந்தன.

எனினும் அவ்வாறான ஒத்துழைப்பின்றி தேர்தலை சுயாதீனமாக நடத்தக்கூடிய சாத்தியம் நிலவுவதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கூறியுள்ளார்.

இதன்பொருட்டு தமது அதிகாரிகள் அதிகபட்ச செயற்பாடுகளை மேற்கொள்வார்கள் என கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரிஷாத் பதியுதீனிடம் 3மணிநேர விசாரணை



(கொழும்பு)

மன்னார் நீதிவான் அச்சுறுத்தப்பட்ட சம்பவம் குறித்து அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடம் இரகசியப் பொலிஸார் மூன்று மணிநேரம் விசாரணைகளை மேற்கொண்டு வாக்குமூலமொன்றைப் பெற்றுள்ளனர்.

மன்னார் சம்பவம் குறித்து அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடம் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு முடிந்துள்ளன எனவும், அவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தையும், இந்தச் சம்பவம் தொடர்பில பெறப்பட்டுள்ள ஏனைய ஆவணங்களையும் சட்ட ஆலோசனைகளுக்காக சட்டமா அதிபரிடம் கையளித்துள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவரின் தலைமையின் கீழ் விசேட குழுவினரால் சுமார் மூன்று மணிநேரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

மன்னார் நீதிவான் ஜேசுதாசன் ஜூட்சன் அமைச்சர் ரிஷாத பதியுதீனால் அச்சுறுத்தப்பட்ட சம்பவம் குறித்து அமைச்சரிடம் முழுமையான வாக்குமூலமொன்றைப் பெற்றுள்ளோம். இந்தச் சம்பவம் தொடர்பில் மன்னார் நீதிவானிடமும் மற்றும் மன்னார் நீதிமன்ற சட்டத்தரணிகள் ஐந்து பேரிடமும் பொலிஸ் விசாரணைகளை நடத்தி வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

மன்னார் நீதிவான் அச்சுறுத்தப்பட்டமை மற்றும் நீதிமன்றம் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில சட்டத்தரணிகள், அமைச்சர் ரிஷாத பதியுதீனுக்கு எதிராக முறைப்பாடு செய்தமைக்கு அமைய செபரெம்பர் மாதம் 5 ஆம் திகதி அமைச்சர் ரிஷாத் பதியுதீனை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உயர்நீதிமன்றம் கடந்த 26 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காட்டுத் தீ

ஒகியா மற்றும் பட்டிப்பொல பிரதேசங்களில் நேற்று முன்தினம் ஏற்பட்ட காட்டுத் தீ, நேற்று முன்தினம் மாலை முதல், பலபகுதிகளுக்கு பரவிவருவதாக தெரிவிக்கப்படுகின்றது. நுவரெலிய மாவட்ட செயலாளர் டி.பீ.ஜி.குமாரசிரி இதனைத் தெரிவித்துள்ளார்.

காட்டுத் தீயை கட்டுப்படுத்துவதற்காக இராணுவத்தினர்,



பொலிஸ் உட்பட பல தரப்பினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தைச் சேர்ந்த 800 பேர், தீயணைக்கும் பணியில் இணைந்து இருப்பதாக இராணுவ பேச்சாளர் ரூவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

பல நாட்களாக சிறிது சிறிதாக பரவ ஆரம்பித்த இந்த காட்டுத தீ காரணமாக தற்போது ஆயிரத்து 500 ஹெக்டயர் நிலப்பரப்பு முற்றாக அழிவடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# 5000 பாடசாலை அபிவிருத்தித்திட்டம் பிரதேச செயலகமூடாக முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

மகிந்த சிந்தனை அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 5000 பாடசாலை திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருக்கும் பாடசாலைகளின் அபிவிருத்தி வேலைகள் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கும் இடையூறு ஏற்படாத வகையில் முன்னெடுக்கப்படுவதாக யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர் க.கமலேந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்.குடாநாட்டில் 15 பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட 61 பாடசாலைகளுக்கான அபிவிருத்திக்கான அங்குரார்ப்பண நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், கோண்டாவில் றோமன கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, தெல்லிப்பளை குரும்பசிட்டி பொன்பரமானந்தா மகா வித்தியாலயம், யாழ். வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம் ஆகிய வற்றில் இடம்பெற்ற அபிவிருத்திக்கான அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

மகிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மாணவர்களின் கல்வியினை மேம்படுத்தும் நோக்கில் 1000 பாடசாலைத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டிருக்கும் உயர்தரப் பாடசாலைகளுக்கு மாணவர்களை உள்வாங்குவதற்கு 5000 ஊட்டப் பாடசாலைகளில் இருந்து அவர்கள் உள்வாங்கப்படுகின்றனர்.

மாறிவரும் உலக ஒழுங்கிற்கு ஏற்ப மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதுடன் அறிவைக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புதல் அறிவுசார் பொருளாதார முன்னேற்றம் விஞ்ஞான தகவல் தொழில்நுட்பத் துறைகளில் எமது மாணவர்களை வளப்படுத்துவதுடன் மாணவர்கள் தாம் வாழும் சூழலிலே நிறைவான கல்வியினைப் பெற வேண்டும் என்ற மகிந்த சிந்தனைத்திட்டத்தின் கீழ் யாழ். குடாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்திக்கான அங்குரார்ப்பண நிகழ்வுகள் அப்பிரதேச செயலர்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இந் நிகழ்வுகளில் யாழ். கோண்டாவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசால்ல அதிபர் செந்தில் குமரன், யாழ்.தெல்லிப்பளை குரும்பசிட்டி பொன்பரமானந்தர் மகா வித்தியாலய அதிபர் இ.தேவ



ராஜா, யாழ்.வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலய அதிபர் யூத் மரியரட்னம், தெல்லிப்பளை பிரதேச செயலர் ஸ்ரீ மோகன், நல்லூர் பிரதேச செயலர் செந்தில் நந்தன், தெல்லிப்பளை கல்விக்கோட்ட அதிகாரி சண்முககுலக்குமாரன், வலி கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் ஐங்கரன், வலி வடக்கு பிரதேசசபை உறுப்பினர் ஜெயபாலசிங்கம் (அன்பு) நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் அ.ரவீந்திரதாசன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தெல்லிப்பளை பிரதேச உறுப்பினர், மற்றும் பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# காரைநகரில் கடும் வறட்சி

(காரைநகர்)

காரைநகர் பகுதியில் கடும் வறட்சி நிலவி வருவதால் தண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவத் தொடங்கியுள்ளது. குறிப்பாக களபூமி, தோப்புக்காடு துறை முகப்பகுதிகளில் கிணறுகளில் தண்ணீர்வற்றிச் செல்வதனால் தண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. அதைவிட காரைநகரில் உள்ள குளங்கள், துரவுகள் என்பவற்றில் நீர் வற்றிவிட்டதால் கால்நடைகள் நீருக்காக அலைகின்றன. சில வருடங்களாக சிறுமாரி எனக்கூறப்படும் கோடை மழை பொய்த்து விட்டதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இங்கு வெய்யிலின் கொடுமை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதால் கிணற்றில் உள்ள நீரும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே செல்கின்றது. குடிதண்ணீர் நீர்த்தாங்கிகளுக்கு வாகனம மூலம் விநியோகிப்பதால் ஓரளவு ஆறுதலாகவுள்ளது. (50)

# பருத்தித்துறை இளைஞன் கதிர்காமத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கதிர்காமத்திற்கு சுற்றுலா சென்ற பருத்தித்துறை இளைஞர் ஒருவர் அங்கிருந்து திரும்பும்வழியில் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி அன்று நடைபெற்ற இச்சம்பவத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த ஜசிகரன் (வயது 19) என்ற இளைஞரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார்.

கதிர்காமத்தில் இருந்து படி வழியாக கீழிறங்கி வரும் பேர்து சுமார்13 படிகள் உருண்டு விழுந்த நிலையிலே இவர் படுகாயமடைந்துள்ளார்.

இவர் உடனடியாக அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவரது தலை, கைகள் என்பவற்றில் கடுமையான காயம் ஏற்பட்டுள்ளது. இவரது உடலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பதனை அறிய வைத்தியர்களால் எக்ஸ்ரே எடுக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது. (பா)


# சொந்தக் காணிகளில் மண் அகழத் தடை

(நயினாதீவு)

வேலணைப் பகுதியில் உள்ள மக்கள் தமது சொந்தக் காணிகளில் மண் அகழ்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமது சொந்தக் காணியில் உள்ள மணலை அகழ்ந்து கட்டட வேலைகளை மேற்கொள்ளும் ஒருசிலருக்கு கிராம சேவையாளர் அனுமதி வழங்குவதாகவும், மற்றும் ஒரு சிலருக்கு அனுமதி வழங்க மறுப்பதாகவும் இதனால் அவர்களது கட்டட வேலைகளில் தாமதம் ஏற்படுவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (175)

# பரமர் சங்கமம்



"ஏட்டிக்குப் போட்டி உலகில் இல்லாத இடமே இல்லை" எனலாம். எங்கு போட்டி; எதிலும் போட்டி இது தான் உலகம்.

போட்டி மனப்பான்மை நல்லதுக்காக அமைய வேண்டும். அதனால் ஆக்கத்துக்கு வழி அமைக்காமல் அழிவுக்கு வித்திட்டால் அழிவு தான்.

வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைவதும் போட்டிதான். போட்டிகள பல்வேறுவிதமாக அமையும். மெய்வன்மை, தடகள மற்றும் கலை இலக்கியப் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

அவைகளில் ஊக்கம் அளித்து இளைய தலைமுறையினரை அத்துறைகளில் வளர்த்தெடுக்கவே போட்டிகள் நடத்தப்படுகின்றன. மெய் வன்மை, தடகள போட்டிகள் உடனடியாகவே கண்டுகொள்ளத்தக்கதாக அமையும்.

கலை, இலக்கியப் போட்டிகள் எழுத்துப் பிரதிகளில் பெறப்பட்டு மூன்று நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. பல நூறு பார்வையாளர்கள் முன்பாக நடத்தப்படும் போட்டிகளில் மறைமுகமாக எந்தச் சுத்துமாத்தும் செய்து வெற்றியாளர்களைத் தெரிவு செய்வது முயற்கொம்புதான்.

பிரதிகளில் பங்கெடுக்கும் போட்டிகளில் நடுவர்கள் தத்தமது செல்வாக்கைப் பயன்படுத்தி வெற்றியாளர்களைத் தெரிவு செய்வதொண்றும் புதுமையில்லை.

1980 களில் கொழும்பு பல்கலைக்கழக தமிழ் மன்றம் ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டிக்கு காவலூர் இராசதுரை, சில்லையூர் செல்வராசனுடன் மூன்றாவதாகப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் இருந்தார்.

மேற்சொன்ன இலக்கியப் படைப்பாளிகளான இருவரும் தெரிவு செய்த முதற்பரிசுக்கான கதையை இரண்டாமிடம் வழங்கி அவர்களால் இரண்டாமிடத்துக்குத் தெரிவு செய்திருந்த கதையைப் பல்கலைக்கழகத் தலைவர் செல்வாக்கைப் பயன்படுத்தி முதற்பரிசு வழங்கியதாக அரசல் புரசலாக உள்விவகாரம் வெளிவந்திருந்தது.

இன்னும் சொல்லப் போனால் போட்டிகளை நடத்துவது திறமைசாளிகளைத் தட்டிக் கொடுப்பதுடன் நல்ல இலக்கியப் படைப்புக்களை தமிழ் இலக்கியப்பரப்பிற்கு வழங்குவதாகவும் அமையும்.

அதேவேளை நடுவர்களில் இத்தகைய புல்லுருவிகள் செயற்பாட்டால் நல்ல பல கதைகள் பரிசுக்குத் தெரிவு செய்யப்படாமல் நடுவரகளின் தீர்ப்பே இறுதியானது அல்லது முடிவானது என்னும் மாயைக்குள் மழுங்கடிக்கப்படுவதுமுண்டு.

நடத்தப்பட்ட பல போட்டிக் கதைகளை ஒருசேரப் பார்க்கக் கிடைக்காமல் போய்விடுகிறது. ஒன்றிரண்டு போட்டிகளைக் பார்க்கக் கிடைக்கையில் அக்கதைகளின் வீக்க தூக்கங்களை வாசகர்களே தீர்மானிக்கவும் முடிந்துள்ளது.

இதனால் போட்டிகளில் தெரிவு செய்யப்படும் கதைகளில் இருந்து தெரிவாகாமல் கதைகளில் நல்ல பல கதைகள் மறைந்துவிடுவதுமுண்டு. இல்லையே சொல்லுங்க பாப்பம்...

# முரசின் இன்றைய பலன்


(06.08.2012 - திங்கட்கிழமை)

நந்தன வருஷம் ஆடி மாதம் 22 ஆம் திகதி. சதுர்த்தி முற்பகல் 8.30 வரை நட்சத்திரம் உத்தரட்டாதி. பின்னிரவு 1.50 வரை. சித்தயோகம்.
இராகுகாலம் 7.34 - 9.04 வரை. சுபநேரம் 12.04 - 1.34 வரை.
எமகண்டம் 10.34 - 12.04 வரை. குளிகன் காலம் 1.34 - 3.04 வரை.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | பெருமை, பதவியுயர்வு தாமதமாகும், அநாவசிய பயணம், பழிச் சொற்கள். |
| ரிஷபம் | சுபச் செலவுகள், தடை தாமதங்கள், பெரிய மனிதர் நட்பு, மறைமுக வருவாய். |
| மிதுனம் | தொழில் வளம், வேலைப்பளு அதிகரிக்கும், வெளிநாட்டு வேலை வாய்ப்பு, மன நிம்மதி. |
| கடகம் | சந்திராட்டமம் பிரயாணம் கூடாது, சொத்து சேர்ப்பதில் கவனம், குடும்பத்தோடு பயணம். |
| சிம்மம் | சந்திராட்டமம் பயணம் தவிர்க்கவும், பெற்றோர் அனுசரணை, உறவினர் உதவி. |
| கன்னி | குடும்ப நலம், புதிய ஒப்பந்தங்கள், வெளிநாட்டு உதவி, சுபகாரியங்கள். |
| துலாம் | சுபதினம், ஆலோசனை பெறவும், உடன் பிறப்புக்களால் பிரச்சினை, கடன் சுமை. |
| விருச்சிகம் | கவனம் தேவை, உடல் உபாதை, தேவையற்ற பகையுனர்வு, ஆடம்பரச் செலவு. |
| தனுசு | வீண் முயற்சி, அரசாங்க உதவிகள், கல்வியில் முன்னேற்றம், பாராட்டுக்கள். |
| மகரம் | மனக்களிப்பு, தலையீடுகளைத் தவிர்க்கவும், எதிலும் கவனம் தேவை, குடும்பத்தில் ஒற்றுமை. |
| கும்பம் | இலாபதினம், பயணங்களில் கவனம், சொத்துக்களால் அனுகூலம், கல்வியில்நாட்டம். |
| மீனம் | நற்கீர்த்தி, உறவினரால் பிரச்சினை, செலவுகள் அதிகரிப்பு, கனவுகள் நனவாகும். |


## உலகின் வேகமான வீராங்கனை



உலகின் மிகப் பெரிய விளையாட்டுதிருவிழாவான ஒலிம்பிக் போட்டி லண்ட னில் நடைபெற்று வருகிறது. இதன் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஜமேக்கா வீராங்கனை பிரேசர் மின்னல் வேகத்தில் ஓடி உலகின் வேகமான வீராங்கனை என்ற சிறப்பைப் பெற்றார். இதில் ஜமைக்கா வீராங்கனை பிரேசர் மின்னல் வேகத்தில் ஓடி வெற்றி பெற்றார். அவர் பந்தய தூரத்தை 10.75 வினாடியில் கடந்து தங்கம் வென்றார். பிரேசர் பிரைஸ் 2008ஆம் ஆண்டு பீஜிங்கில் நடந்த ஒலிம்பிக்கிலும் 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கம வென்றாா. இதன்மூலம் அவர் ஒலிம்பிக் சம்பியன் பட்டததை தக்க வைத்துக்கொண்டார்.

## ஒலிம்பிக் "கிளிக்"







## பெண்கள் கால்பந்து அரையிறுதி இன்று

(லண்டன்)

ஒலிம்பிக் மகளிர் கால்பந்து போட்டியிலிருந்து வெளியேறியது போட்டியை நடத்தும் நாடான பிரிட்டன். அத்துடன் அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் இடம்பெறவுள்ளது. காலிறுதி ஆட்டத்தில் பிரிட்டன் 0-2 என்ற கணக்கில் கனடாவிடம் தோல்வி கண்டது. இதன்மூலம் ஒலிம்பிக் கால்பந்து போட்டியில் முதல்முறையாக பங்கேற்ற பிரிட்டனின் பதக்கக் கனவு தகர்ந்தது.

வெம்ப்லெய் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே கனடா வீராங்கனைகள் ஆதிக்கம் செலுத்தினர். 12ஆவது நிமிடத்தில் கனடாவின் பிலிக்னோ கோல் அடிக்க, அந்த அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.தொடர்ந்து அபாரமாக ஆடிய கனடா அணிக்கு 26ஆவது நிமிடத்தில் 2ஆவது கோல் கிடைத்தது. இந்த கோலை சின்கிளேர் அடித்தார். இதனால் முதல் பாதி ஆட்டநேர முடிவில் கனடா 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. பின்னர் நடைபெற்ற இரண்டாவது பாதி ஆட்டத்தில் பிரிட்டன் வீராங்கனைகள் கோலடிக்க கடுமையாகப் போராடியபோதும், அது தோல்வியிலேயே முடிந்தது. இறுதியில் கனடா 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி கண்டு அரையிறுதிக்கு முன்னேறியது.

இந்தப் போட்டியைக் காண்பதற்கு சுமார் 70 ஆயிரம் பேர் திரண்டிருந்தனர். ஆனால் பிரிட்டன் அணி தோல்வி கண்டதால் உள்ளூர் இரசிகர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். இன்று நடைபெறும் அரையிறுதியில் கனடா அணி, ஒலிம்பிக் சம்பியனான அமெரிக்காவை சந்திக்கிறது. முன்னதாக அமெரிக்கா தனது காலிறுதியில் 2-0 என்ற கணக்கில் நியூஸிலாந்தை வீழ்த்தியது.

மற்றொரு காலிறுதியில் உலக சம்பியன் ஜப்பான் 2-0 என்ற கணக்கில் பிரேசிலை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது. ஜப்பான் தனது அரையிறுதியில் பிரான்ஸை சந்திக்கிறது. இந்த ஆட்டமும் இன்று நடைபெறுகிறது. முன்னதாக பிரான்ஸ் 2-1 என்ற கணக்கில் சுவீடனை வீழ்த்தியது.

## அரையிறுதியில் ஒஸ்கா பிஸ்ரோரியஸ்

(லண்டன்)

பிளேட் ரன்னர் என அழைப்படுகின்ற தென்னாபிரிக்க வீரர் ஒஸ்கா பிஸ்ரோரியஸ் இம்முறை லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின் ஆடவருக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் சுற்றின் முதலாவது போட்டியின் இரண்டாம் இடத்தைப் பெற்றதன் மூலம் அவருக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது.

பிஸ்டோரியஸ் போட்டித் தூரத்தை 45.44 செக்கன்களில் கடந்ததுடன் இந்த போட்டியின் முதலாம் இடம் டொமினிக்கன் குடியரசு வீரர் சென்ரோஸ் லுகுவேலின் வசமானது.

இரண்டு கால்கள் இல்லாத நிலையில் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றும் முதலாவது வீரர் என்ற சிறப்பை பிஸ்ரோரியஸ் தன்வசப்படுத்தியுள்ளார்.

அவர் செயற்கைக் கால்களை பயன்படுத்தி இம்முறை 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## செரீனா வில்லியம்ஸ் தங்கம்



(லண்டன்)

ஒலிம்பிக் ரென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தார். இறுதிப்போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவாவுடன் நேற்று முன்தினம் மோதிய செரீனா,தொடக்கத்தில் இருந்தே அதிரடியாக விளையாடி புள்ளிகளை அள்ளினார். ஷரபோவா சர்வீஸ்களை எளிதில் முறியடித்த செரீனா 6-0 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார். இரண்டாவது செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய அவர் 6-0, 6-1 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்று தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். ஷரபோவா வெள்ளியுடன் திருப்தி அடைந்தார். செரீனா ஒலிம்பிக்கில் பெறும் 3ஆவது தங்கம் (2000 சிட்னி, பீஜிங் 2008, லண்டன் 2012) இது.

## பீற்றர்சன் சதம்; மீண்டது இங்கிலாந்து



(லீட்ஸ்)

கெவின் பீற்றர்சனின் அதிரடிச் சதத்தின் மூலம் தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நெருக்கடியிலிருந்து இங்கிலாந்து அணி மீண்டுள்ளது.

இங்கிலாந்து-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி இங்கிலாந்தின் லீட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் இங்கிலாந்து அணி ஆரம்பத்தில் தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து வந்தது. இருப்பினும் அதிரடி வீரர் பீற்றர்சனின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணி வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுள்ளதுடன் நெருக்கடியிலிருந்தும் மீண்டுள்ளது. மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை இங்கிலாந்து அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 351 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் பீற்றர்சன் ஆட்டமிழக்காது 149 ஓட்டங்களையும், மட் ப்ரியர் 20 ஓட்டங்களையும் பெற்றிருந்ததனர். மற்றும் ஸ்ரோஸ் 37, ட்றொட் 35 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ஸ்டெயின் இரண்டு, மோர்க்கல் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸ் 419. முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றது.

## தொடரை வெல்லுமா மே.தீவு?



(கிங்டன்)

நியூசிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை வெற்றி கொள்வதற்கு வாய்ப்பு மேற்கிந்தியத்திவு அணிக்கு ஏற்பட்டுள்ளது.

நியூசிலாந்துமேற்கிந்தியதீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான ஆட்டம் மேற்கிந்தியதீவின் கிங்டனில் நடைபெற்று வருகின்றது.

இதில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி மேற்கிந்தியத்தீவு வீரர்களின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் சுருண்டது. நியூசிலாந்து இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் குப்ரில் 42 மற்றும் பிராங்லின் 35 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் சுனில் நரைன் மூன்று, டோனோரின் நான்கு, பெஸ்ட் இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு 206 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி வரும் மேற்கிந்தியத்தீவுகள் அணி மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, நான்கு விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சாமுவேல் 52 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மற்றும் சந்தர்போல் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். மேற்கிந்தியத்தீவு இப்போட்டியில் வெற்றிபெற்று ஆறு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 71 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளது. நியூசிலாந்து முதல் இனிங்ஸ் 260. மேற்கிந்தியத்தீவு முதல் இனிங்ஸ் 209.

# விளையாட்டுச் செய்திகள்

## கிண்ணம் வென்றது ஆவரங்கால் இந்து இளைஞர்



(கைதடி)

கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 47ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டித் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கிண்ணத்தை சுவிகரித்துள்ளது.

ஆவரங்கால் மத்திய அணிக்கும், ஆவரங்கால் இந்து இளைஞர் அணிக்குமிடையில் நடைபெற்ற இறுதிப் போட்டி கடந்த முதலாம் திகதி புதன்கிழமை கைதடி வளர்மதி விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றது.

இரு அணிகளும் பல முறை மோதிக் கொண்ட அனுபவத்தைப் பெற்றிருந்தாலும், மின்னொளியில் போட்டி நடைபெற்றமையால் இப்போட்டியைக் காண ஏராளமான இரசிகர்கள் மைதானத்தைச் சூழ்ந்திருந்தனர்.

ஐந்து சுற்றுக்களைக் கொண்டதாக அமைந்த இப்போட்டியில் முதல் செட்டை ஆவரங்கால் இந்து இளைஞர் அணி அபாரமாக ஆடி 25-23 என்ற கணக்கில் வென்று கைப்பற்றி போட்டியில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது செட்டில் சுதாகரித்துக் கொண்டு தமது ஆட்ரோசமான ஆட்டத்தை ஆவரங்கால் மத்தி அணி வெளிப்படுத்தும் என அதன் ஆதரவாளர்களால் பெரும் எதிர்பார்க்கப்பட்டது. ஆட்டவேகத்தை சற்றும் தளர்வடையச்செய்யாது ஆவரங்கால் இந்து இளைஞர் அணி இரண்டாவது செட்டிலும் வேகமான முறையில் ஆடியிருந்தது. விறுவிறுப்பாக நடைபெற்ற இரண்டாவது செட்டையும் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி முன்னிலையைத் தொடர்ந்தும் தக்கவைத்தது.

மூன்றாவது செட்டை கைப்பற்றினால் கிண்ணத்தை வெல்ல முடியும் என்ற உத்வேகத்துடன் உற்சாகமடைந்திருந்தது ஆவரங்கால் இந்து இளைஞர் அணி, இருப்பினும், தொடர்ந்து நடைபெறும் மூன்று செட்களையும் கைப்பற்றி கிண்ணம் வெல்லும் ஆற்றல் எமக்கு இருக்கின்றது என்பதை வெளிப்படுத்துவோம் என்ற முனைப்புடன் ஆவரங்கால் மத்தி அணியும் மூன்றாவது செட்டுக்காக களமிறங்கின. இரு அணி இரசிகர்களின் ஆரவரங்களுக்கு மத்தியில் போட்டி பெரும் பரபரப்பு, பதற்றம் நிறைந்ததாக இடம்பெற்றது. எந்தத் தளர்வையும் வேகத்தையும் குறைக்காமல் சிறப்பாக ஆட்டத்தை மீண்டும் வெளிப்படுத்தி மூன்றாவது செட்டையும் கைப்பற்றிய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இறுதியில் 3-0 என்ற கணக்கில் வெற்றிபெற்று வளர்மதி ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இப்போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் கிண்ணத்தை வென்றிருந்தாலும் இரு அணி வீரர்களின் ஆட்டமும் இரசிகர்களிடையே பேசப்படுமளவிற்கு கவர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (93, 118)

## கரப்பந்து பயிற்சி முகாம் இன்று ஊர்காவற்துறையில்

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை பிரதேசத்திலுள்ள இளைஞர்களிடையே கரப்பந்தாட்டத்துறையை வளர்க்கும் முகமாக கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம் ஊர்காவற்துறை முத்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இப்பயிற்சிமுகாமில் கிரிடா சக்தி நிகழ்ச்சிதிட்ட யாழ். மாவட்டப் பணிப்பாளர் நந்தசேனா மற்றும் கரப்பந்தாட்டப்பயிற்றுநர் தயாளபாலன் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கவுள்ளனர். இப்பயிற்சி முகாமிற்கு 50 இற்கு மேற்பட்டவீர,வீராங்கனைகள் கலந்துகொள்ளவுள்ளனர். கிரிடா சக்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளில் கரப்பந்தாட்ட பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (93)

## ஐங்கரன் முன்னேற்றம்

(கைதடி)

கைதடி மின்னொளி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் தென்மராட்சிப் பிரதேச மட்டக் கரப்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு மட்டுவில் ஐங்கரன் அணி தகுதி பெற்றுள்ளது.

கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகத்தினால் அதன் 57ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டத்தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் ஒரு பிரிவாக நடாத்தப்படும் தென்மராட்சிப் பிரதேசங்களிற்கு உட்பட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணியும் சாவகச்சேரி சீமா அணியும் மோதின. 3 சுற்றுக்களைக் கொண்ட இப்போட்டியில் முதாலாவது சுற்றை மட்டுவில் ஐங்கரன் 28-26 என்ற புள்ளியடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாம் சுற்றை மட்டுவில் ஐங்கரன் 25-19 என்ற கணக்கில் கைப்பற்றி 2-0 என்ற நேர்செட்களில் வெற்றிபெற்று அடுத்தசுற்றுக்கு தகுதிபெற்றது (93)

## ஷகிப் அல் ஹசன் விலகல்

பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் ஷகிப் அல் ஹசன் இவ்வாண்டுக்கான இலங்கைபிறீமியர் லீக் போட்டிகளில் பங்குபற்ற மாட்டார் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்டுள்ள முழங்கால் உபாதை காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அவரது இடது முழங்காலில் உபாதை ஏற்பட்டுள்ளதன் காரணமாக அது குணமாகும் வரை போட்டிகளில் பங்குபற்ற வேண்டாம் என அணியின் உடற்கூற்று நிபுணர் அறிவித்துள்ளதாகப் பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் ஊடக முகாமையாளர் ரபீட் இமாம் தெரிவித்தார். அவருக்கு சிகிச்சையும், ஓய்வும் தேவைப்படுவதாக அவர் தெரிவித்தார்.

## விரைவில்

### இரண்டாவது சுற்று ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான பிரிவு மூன்றின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் இந்த மாதம் பிற்பகுதியில் நடைபெறும் எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் இரண்டாவது சுற்று ஆட்டங்களுக்கு ஒவ்வொரு பிரிவிலும் இருந்து இரண்டு அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும்,இப்போட்டிகள் இம்மாதம் இறுதியில் நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## அரச அதிபர் வெற்றிக் கிண்ணம்

### பணியாளர்களுக்கிடையே புரிந்துணர்வை வளர்க்கும்

(யாழ்ப்பாணம்)

எல்லாப் பிரதேச செயலகங்களையும் சேர்ந்த பணியாளர்கள் சகலரும் ஒன்று கூடி விளையாடுவது மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இது பணியாளர்களிடையே புரிந்துணர்வையும், உத்வேகத்தையும், தலைமைத்துவப் பண்பையும் வளர்க்கும் என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலக நலன்புரிச் சங்கம் நடத்தும் அரச அதிபர் வெற்றிக் கிண்ணப் போட்டித் தொடர் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய உலகில் விளையாட்டில் ஒருவர் சாதிக்கும் பட்சத்தில் விரைவாக வெளிக்கொணரப்பட முடியும். அந்த வகையில் விளையாட்டு பணியாளர்கள் மட்டத்தில் வளர்க்கப்படவேண்டும். அந்த வகையில் இந்த முயற்சிகள் பாராட்டப்பட வேண்டிய விடயம். பணியாளர்கள் எல்லோரையும் ஒன்றிணைத்துப் பார்க்க முடிகின்றது.

எனவே, இப்போட்டிகளின் மூலம் பணியாளர்களுக்கிடையே புரிந்துணர்வு, உத்வேகம், தலைமைத்துவப் பண்பு என்பன வளரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (120)

## கொக்குவில் இந்து பெரு வெற்றி

(யாழ்ப்பாணம்)

சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி பெரு வெற்றிபெற்றுள்ளது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி லிங்கநாதன், கீர்த்திகன், சதிஜன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 318 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லிங்கநாதன் 87 பந்துகளை எதிர்கொண்டு 53 ஓட்டங்களையும், கீர்த்தீகன் 81 பந்துகளை எதிர்கொண்டு 62 ஓட்டங்களையும், சதிஜன் 45 பந்துகளை எதிர்கொண்டு 52 ஓட்டங்களையும், தனலக்ஷன் 36 பந்துகளை எதிர்கொண்டு 52 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஜசோகுலன் நான்கு விக்கெட்டுக்களையும், முரளிதரன் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 319 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி 36 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் ஜதுஷன் 10 ஓட்டங்களையும், ஜனதர்ஷன் 31 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பவிதரன், லிங்கநாதன், கனசாந்த் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (எஸ்.பி.)



**யாழ்.ஸ்தான வித்தியாலயமும், யாழ்.நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயமும் மோதும் ருவென்ரி- 20 ஓவர் கிரிக்கெட் போட்டியின் ஆரம்ப நிகழ்வை ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்) தொடக்கி வைப்பதைக் காணலாம். இப்போட்டி கடந்த 2ஆம் திகதி யாழ்.ஸ்தான வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.**

# நீதித்துறையின் சுதந்திரமும் சுயாதீனமும் பாதுகாக்கப்பட வேண்டும்!

- வானவில் - 19 இதழ் தலையங்கம்.

இலங்கையில் நீதித்துறையின் சுதந்திரம் சுயாதீனம் பற்றிய சர்ச்சை ஒன்று மிகவும் தீவிரமாக வெளிக்கிளம்பியுள்ளது. இதற்கு முன்னரும் நீதித்துறை அச்சுறுத்தலுக்கு உள்ளான சம்பவங்கள் சில நடந்துள்ள போதிலும், அவற்றில் காட்டப்படாத தீவிரம் தற்போதைய பிரச்சினையில் காட்டப் படுகிறது. அதற்குக் காரணம், அதற்கான அரசியல் பின்னணியும் காரணிகளும்தான் என்பது இரகசியமான விடயமல்ல.

தற்போதைய பிரச்சினை அமைச்சர் றிசாத் பதியுதீன் சம்பந்தப்பட்டது என்றபடியால், இந்த தீவிரம் ஏற்பட்டுள்ளது. அமைச்சர் பதியுதீன் மன்னார் நீதிபதியை மிரட்டியதாக எழுந்த குற்றச்சாட்டை அடுத்தே, அவருக்கு எதிரானதும், நீதித்துறை மீதான அக்கறை பற்றியதுமான பிரச்சாரங்கள் சூடு பிடித்துள்ளன. அமைச்சர் நீதிபதியை மிரட்டியதாக எழுந்த குற்றச்சாட்டு எழுவதற்கு முன்னர், வேறு சில விரும்பத்தகாத சம்பவங்கள் மன்னாரில் நடந்துள்ளன.

முஸ்லிம் மக்களால் பாரம்பரியமாக பயன்படுத்தப்பட்டு வந்த ஒரு சிறிய மீன்பிடித் துறைமுகத்தை, வேறொரு பகுதியினர் பலவந்தமாகக் கைப்பற்றியதன் காரணமாக இருசாராருக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியுள்ளது. இந்தச் சர்ச்சையில் நீதிமன்றத் தலையீடும் இருந்துள்ளது. நீதிமன்ற செயற்பாட்டை ஆட்சேபித்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் நீதிமன்றத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களில் சிலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்கு முன்னரே மன்னாரில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவரும் தமிழ் பேசும் இரு இனத்தவர்களான தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் முரண்பாடுகளையும் மோதல்களையும் உருவாக்க சில உள் நோக்கம் கொண்ட சக்திகள் முயன்று வந்துள்ளன. இவர்களில் சிலர் கடந்த காலங்களில் புலிகளுடன் தீவிரமான தொடர்புகளைக் கொண்டிருந்த மதவாத சக்திகளாவர். இவர்களுடைய இந்த தீய நோக்கத்துக்கு தமிழ் - முஸ்லிம் ஐக்கியம் பற்றிப் போலியாகப் பேசிவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரமுகர்கள் சிலரும் உடந்தையாக இருந்துள்ளனர்.

புலிகள் 1995 அக்டோபர் 30ஆம் திகதி வட மாகாணத்திலிருந்து 2 மணித்தியால அவகாசத்தில் முஸ்லிம் மக்களை உடுத்த உடையுடன் வெளியேற்றி இனச்சுத்திகரிப்பு செய்தபோது, அதை எந்த விதத்திலும் கண்டிக்காத இந்தச் சக்திகள், போர் முடிவுக்கு வந்து முஸ்லிம் மக்கள் திரும்பவும் வடக்கிலுள்ள தமது பாரம்பரிய வாழ்விடங்களில் மீளக் குடியேறுவதை தற்போதைய சூழலிலும் விரும்பாதவர்களாகவே இருக்கின்றனர். மன்னாரில் அண்மைக்காலமாக தமிழ் - முஸ்லிம் மக்களிடையே உருவாக்கப்பட்டு வரும் முறுகல் நிலைக்கு இந்தப் பின்னணியையும் கவனத்தில் கொள்வது அவசியமானது.

அதேநேரத்தில், மன்னார் நீதிபதி உண்மையில் அச்சுறுத்தப்பட்டிருந்தால், அச்சுறுத்தியவர் எத்தகைய உயர் பதவியில் இருந்தாலும், எவ்வளவு அரசியல் செல்வாக்கு உள்ளவராக இருந்தாலும் அவர் மீது சட்டப்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவது மிகவும் அவசியம். ஏனெனில் ஒரு நாட்டில் நீதித்துறை அச்சுறுத்தலுக்குள்ளானால், சட்டம் ஒழுங்கு சீர்குலைவது தவிர்க்கவியலாது போய்விடும். அதன் காரணமாக அராஜக நிலை தோன்றும். தீய சக்திகளும் சமூக விரோதிகளும் தன்னிச்சையாக செயல்படத் தொடங்குவார்கள். இந்த நிலை எக்காரணம் கொண்டும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அரசாங்கத்தின் தட்டிக்கழிக்க முடியாத கடமையாகும்.

மன்னார் சம்பவம் அமைச்சர் றிசாட் பதியுதீன் சம்பந்தப்பட்டது என்றபடியால், அரசுக்கு எதிரான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பனவும், பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் துள்ளிக் குதிப்பதை அவதானிக்க முடிகிறது. ஆனால் ஏற்கெனவே நீதிமன்ற அவமதிப்பை மேற்கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இரு முக்கியஸ்தர்கள் பற்றி எவருமே வாய் திறப்பதாகக் காணோம். அத்துடன் அரசியல் நோக்கத்துடன் அமைச்சருக்கு எதிராக நடாத்தப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளின் சூறாவளியில், பாதிக்கப்பட்ட மீனவர்களின் பிரச்சினை காணாமல் போகும் நிலை தோன்றியுள்ளது.


யாழ்ப்பாண நீதிமன்றம் வழங்கிய ஓர் ஆணையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பகிரங்க இடத்தில் வைத்து கிழித்து எறிந்ததுடன், "நீதிமன்றக் கட்டளையை மதிக்கும் இறுதிச் சந்தர்ப்பம் இதுதான்" எனவும் சவால் விடுத்துள்ளார். அதேபோல தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்குச் சொந்தமான "உதயன்" பத்திரிகை வெளியிட்ட தவறான செய்தி ஒன்று பற்றி மறுப்பு வெளியிடும்படி யாழ்.நீதிமன்று நீதவான் மா.கணேசராசா விடுத்த உத்தரவை மதிக்காமல் இன்றுவரை அப்பத்திரிகை அதைப் பிரசுரிக்காமல் இருந்து வருகிறது. இந்த இரண்டு நடவடிக்கைகளும் கூட நீதித்துறைக்கு விடுக்கப்பட்ட சவால்கள்தான்.

எனவே அரசாங்கம் இந்த மாதிரியான நீதித்துறை அவமதிப்புகளுக்கு எதிராக பாரபட்சம் அற்ற ரீதியில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இல்லாவிடின் மக்கள் நீதித்துறையின் மீதும், அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை இழந்து விடுவர். அப்படியான ஒரு நிலைமை உருவானால், அது ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக்கால இருண்ட யுகத்துக்கு (1977 - 1994) நாட்டை இட்டுச் சென்றதாக அமைந்துவிடும்.

ஜே.ஆரின் ஆட்சிக்காலத்தில் ஐ.தே.க காடையர்கள் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் வீடுகளுக்கு கல்வீசித் தாக்கினார்கள். அதுமாத்திரமின்றி, அரச உயர் தலைமையே நீதிபதிகளை நிர்ப்பந்தித்துப் பதவி விலக வைத்துவிட்டு, தமக்கு வேண்டியவர்களை பதவியில் அமர்த்தியது. அவ்வாறானதொரு நிலைமையை, சாதாரண பொதுமக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த இன்றைய அரசு அனுமதிக்கவே கூடாது.


விரைவில் மூன்று மாகாண சபைகளுக்குத் தேர்தல்கள் நடைபெற இருக்கும் சூழலில், மன்னார் சம்பவத்தை வைத்து இந்த மாகாணங்களில் வாழும் கணிசமான தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் இனக்குரோதத்தை உருவாக்கி அரசியல் இலாபம் பெற முயலும் சந்தர்ப்பவாத சக்திகள் குறித்தும் அரசு மட்டுமின்றி, பொதுமக்களும் எச்சரிக்கையாக இருப்பதும் அவசியமாகும்.

## கரீனாவின் திருமண ஆடை!



ஹிந்தி திரைப்பட உலகில், தற்போது நம்பர்-1 நடிகை கரீனா கபூர் தான். பல ஆண்டு காதலர்களாக இருந்து வரும் கரீனா கபூர், நடிகர் சயிப் அலிகான் (வயது 41) இருவரும் வரும் ஒக்டோபர் மாதம் திருமணம் செய்து கொள்ள இருக்கின்றனர். சயிப்பின் தாயும் பிரபல நடிகையும், முன்னாள் தணிக்கைக் குழுத் தலைவருமான ஷர்மிளா டாகூர், பிரபல கிரிக்கெட் வீரரும் பட்டோடி நவாப் என்ற, மன்சூர் அலிகான் பட்டோடியை, 1969இல் திருமணம் செய்து கொண்டபோது, திருமணத்திற்கு அணிந்த ஆடையை, அவரது வருங்கால மருமகள் கரீனாவும் தன் திருமணத்திற்கு அணிகிறார். ஆடை வடிவமைப்பாளர் ரிது குமார், அந்த உடையை, இன்னும் நவீனமான வகையில் செய்து கொடுக்கிறார். பட்டோடி குடும்பத்தில், திருமணத்தின்போது, பரம்பரை பரம்பரையாக, முன்னோர்கள் அணிந்த ஆடையை அணிவது வழக்கமாம்.

## சமணம்



சமண மதத்தை இந்தியாவெங்கும் பரப்பியவர் மகாவீரர். அவருடைய இயற்பெயர் வர்த்தமானர். இந்தியாவில் பீகார் என இன்று அழைக்கப்படும் மகத நாட்டில் பாடலிபுத்திரத்திற்கு அருகில் குண்டலபுரம் என்ற ஊரில் கி.மு. 599இல் பிறந்தார்.

மகாவீரருக்கு முன்பே சமண மதம் இருந்து வந்தது. இவருடைய தந்தை ஒரு சிற்றரசர். தம் 30ஆவது வயதிலேயே தம்முடைய செல்வத்தையெல்லாம் மக்களுக்கு வழங்கி துறவி யானார் மகாவீரர். கடுந்தவத்தால் விருப்பு, வெறுப்புகளை வென்றதால் இவரை, "மகாவீரர்" என்றனர்.

சமண மதத்தின் கொள்கைகளை வகுத்தவர்கள் தீர்த்தங்கரர்கள். இவர்கள், 24 பேர். இவர்களில் முதலாமவர் ரிஷபதேவர். தீர்த்தங்கரர்களின் வழி நின்று மக்களுக்குப் போதித்தார் மகாவீரர். இவரைக் கடைசி தீர்த்தங்கரர் என்பர்.

தம் 72ஆம் வயதில் பவாபுரி என்னும் இடத்தில் மறைந்தார் மகாவீரர்...

## கொஞ்சநேரம் குழந்தையாகலாம்

- அதிஷா -

**தம்பி தம்பி**
**என்ன வேண்டும்?**
**பழம் வேண்டும்**
**என்ன பழம்?**
**பலாப்பழம்**
**என்ன பலா?**
**வேர்ப்பலா**
**என்ன வேர்?**
**வெட்டி வேர்**
**என்ன வெட்டி?**
**விறகு வெட்டி**
**என்ன விறகு?**
**மர விறகு**
**என்ன மரம்**
**பனை மரம்**
**என்ன பனை**
**மொட்டைப் பனை**
**என்ன மொட்டை**
**வழுக்கை மொட்டை**
**என்ன வழுக்கை**
**இளநி வழுக்கை**
**என்ன இளநி**
**செவ் விளநி**
**என்ன செவ்வு**
**திரி செவ்வு**
**என்ன திரி**
**விளக்குத் திரி**
**என்ன விளக்கு**
**குத்து விளக்கு**
**என்ன குத்து**
**கும்மாங் குத்து**

இப்படியே போகும் பாட்டு கடைசியில் என்ன குத்து, கும்மாங்குத்து என்று குத்துவதோடு முடியும். அல்லது இடையிலேயே வேறு பாதை பிடித்துப் புதுப்பாடல் உருவாகும். இந்த சிறுவர் விளையாட்டுப் பாடல் நம்மில் பலருக்கும் நினைவிருக்கலாம். இதை யார் நமக்கு கற்றுக்கொடுத்திருப்பார்கள்? எப்படி இந்த விளையாட்டு நமக்கு பரிச்சயமானது? என்பதெல்லாம் நினைவில் நிச்சயமாக இருக்காது.. ஆனால் நம்மில் பலரும் இந்த விளையாட்டினை கடந்துதான் வந்திருப்போம். இந்தப் பாடலை படிக்கும் போது சிறுவயதில் பாட்டுப்பாடி விளையாடிய குழந்தைப்பருவ நாட்களின் மகிழ்ச்சியான நினைவுகள் மட்டும்தான் எஞ்சியிருக்கிறது.

ஒவ்வொரு முறை விளையாடும்போதும் எங்கேயோ தொடங்கி எதிலோ முடியும் இந்த விளையாட்டு. நான்கைந்து பேர் வட்டமாக அமர்ந்து ஒவ்வொருவரும் மாறி மாறி பாடிக்கொண்டே வர.. வார்த்தையில்லாதவர் அவுட் ஆகி வெளியேற்றப்படுவார்! அவுட் ஆகிவிடக்கூடாது என்பதற்காக இன்றைக்கு இதிலே என்ன புதுப் புது வார்த்தைகளைப் போட்டு பாடலாம் என்று வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் அமர்ந்துகொண்டு நிறையவே யோசித்திருக்கிறேன். என்ன உருண்டை கோலா உருண்டை என்ன கோலா கோக்க கோலா என்றெல்லாம் பாடியது நினைவில் இருக்கிறது.




இப்போதைய நம் குழந்தைகளுக்கு இதுமாதிரி பாட்டெல்லாம் பரிச்சயமா என்பது சந்தேகம்தான். தெரிந்திருந்தாலும் ரியூசனுக்கும் டிவிக்கும் நடுவே மற்ற குழந்தைகளோடு இதெல்லாம் விளையாட நேரமிருக்குமா தெரியாது. உங்கள் குழந்தைக்கு இந்தப் பாடலை சொல்லிக்கொடுத்து நீங்களும் அவர்களோடு விளையாடுங்கள்.. குழந்தைகள் நிறைய தமிழ் சொற்களை கற்றுக்கொள்ளவும் புதிய பாடல்களை உருவாக்கவும் வாய்ப்பாக அமையும். அதோடு நாமும் கொஞ்ச நேரம் முழுமையாக குழந்தையாகலாம்.

# இலங்கையில் முன்னேற்றம் உதவிகள் இன்னும் தேவை

**- ஐ.நா. உயரதிகாரி ஜோன் கிங் -**

பல நாடுகளைப் பார்க்கும் போது போரின் பின்னரான காலகட்டத்தில் ஒப்பீட்டளவில் இலங்கையில் பெரியளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆயினும், இன்னமும் பல ஆயிரக்கணக்கான மக்கள் முகாம்களில் மோசமான சூழலில் வாழ்ந்து வருகிறார்கள் என்பதையும், மீளக் குடியேறியவர்களின் நிலையும் அதே போன்று மோசமாகவே உள்ளது என்பதையும் மறந்துவிடக் கூடாது எனவும் ஐ.நாவின் உயரதிகாரி ஜோன் கிங் பி.பி.சி. க்குத் தெரிவித்துள்ளார்.



போர் முடிந்து மூன்று ஆண்டுகளில் வடகிழக்கில் எந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை பார்வையிட வந்திருந்த, ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான பணிகளுக்கான இணைப்பு அலுவலகத்தின் செயல்திட்ட இயக்குநர் ஜோன் கிங் (John Ging), இன்னும் செய்யப்பட வேண்டிய பணிகள் நிறைய இருக்கின்றன எனக் கூறியுள்ளார்.

வடகிழக்கு பகுதிகளில் போரினால் பாதிக்கப்பட்டு அரசால் மீளக் குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப கூடுதலான உதவிகள் தேவைப்படுகின்றன எனவும் அவர் கூறினார். போரினால் வாழ்க்கையை இழந்த மக்கள் மீண்டும் கௌரவமாக வாழ்ந்து தங்களது வாழ்க்கையை கட்டியெழுப்ப ஐ.நாவின் தமது அலுவலகமும், இதர சர்வதேச மனிதாபிமான அமைப்புகளும் இலங்கை அரசுடன் இணைந்து வேலை செய்ய விரும்புவதாகக் கூறிய அவர் வட பகுதியில் மக்கள் குடிநீர், சுகாதாரம் போன்ற அடிப்படை தேவைகள் கிடைக்காத நிலையில் இருக்கிறார்கள் அவை உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டியவை எனவும் கூறினார்.

எனவே இப்படியான நிலையில் மீளக்குடியமர்ந்தவர்கள் தங்களது தற்போதைய நிலை குறித்து திருப்தி அடைய முடியாது, நாமும் திருப்தி அடையக் கூடாது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். இந்த நிலை மாறி அவர்களின் வாழ்வாதாரம்



மேம்பட வேண்டும் என்றால், கொடையாளி நாடுகள் தமது உதவிகள் மற்றும் முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டும் எனவும் ஐ.நாவின் தமது அலுவலகம் கோருகிறது எனவும் பி.பி.சி.க்கு அவர் தெரிவித்தார்.

வட மாகாண மக்களின் முன்னேற்றத்துக்கு தேவையான நிதியுதவியில் 20 சதவீதம் மட்டுமே கிடைத்துள்ளது என்றும் சர்வதேச நிதியுதவியில் 80 சதவீதம் குறைந்த நிலையில், அதன் காரணமாக் மக்கள் பெரும் துன்பத்தை தேவையில்லாமல் எதிர்கொள்கிறார்கள் என்றும் ஜோன் கிங் கூறினார்.

எனினும் அரசிடம் சில செயல்திட்டங்கள் இருக்கின்றன எனவும் அவை நடைமுறைபடுத்தப்படும் என்கிற நம்பிக்கை தனக்கு இருக்கிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# லெபனான்

**- எஸ்.ராமகிருஷ்ணன் -**

இஸ்ரேலியத் திரைப்படம் லெபனான், முழுப்படமும் ஒரு பீரங்கி வண்டிக்குள்ளாகவே எடுக்கப்பட்டிருப்பது இதன் முதற்சிறப்பு. பீரங்கிவண்டியை ஒரு வலிமையான போர்க்கருவியாக மட்டுமே அறிந்து வைத்திருந்த நமது பொதுப்புத்தியை இப்படம் கேள்விக்குள்ளாக்குகிறது.

யுத்த முனையில் பீரங்கிகள் கடந்து போவதையும் அவை இலக்குகளைத் தாக்கி அழிப்பதையும் பல படங்களில் பார்த்திருக்கிறோம். ஆனால் பீரங்கி வண்டி என்பது ஒரு தனியுலகம். அந்த வாகனத்தினுள் நாலு போர்வீரர்கள் பகலிரவாகத் தங்கியிருக்கிறார்கள். இலக்கைக் குறிவைத்துத் தாக்க ஒருவர், வண்டியை இயக்க மற்றவர், யாரைத் தாக்குவது என்று உத்தரவிட ஒரு கொமாண்டர், தொலைத்தொடர்பை கவனிக்க இன்னொரு போர்வீரன் என்று மாறுபட்ட நாலு பேர் அச சிறிய இடத்திற்குள் உண்டு உறங்கி கட்டளையிடப்பட்ட இலக்குகளை அழித்து, மூச்சு முட்டும் நெருக்கடிக்குள்ளாக வாழ்கிறார்கள் என்பதைப் படம் விரிவாக எடுத்துக்காட்டுகிறது.

இராணுவ வீரர்கள் யாவரும் சாகச நாயகர்களில்லை, அவர்களும் சாமான்ய மனிதர்களே, இயல்பான குழப்பங்களும், பயமும், நெருக்கடியை எதிர்கொள்ளும துணிச்சலும் அவர்களுக்குள் எப்படி உருவாகின்றன என்பதை படம் துல்லியமாக விளக்குகிறது.

Samuel Maoz இயக்கிய இப்படம் 66ஆவது வெனிஸ் திரைப்படவிழாவில் சிறந்த படமாக விருது பெற்றிருக்கிறது. அது போலவே சிறந்த திரைப்படத்திற்கான சத்யஜித்ரே விருதையும் பெற்றிருக்கிறது. சாமுல் போர்வீரராக யுத்தமுனையில் ஒரு பீரங்கி வண்டியில் பணியாற்றியவர், தனது சுய அனுபவத்தைக் களமாக கொண்டு இப்படத்தை இயக்கியிருக்கிறார்.

1982ஆம் ஆண்டு லெபனானின் யுத்தம் தொடங்கிய தினத்தில் இருந்து படம் தொடங்குகிறது. சூரியகாந்திப் பூக்கள் அடர்ந்த தோட்டம் ஒன்றில் பீரங்கி வண்டி நின்று கொண்டிருக்கிறது. மெல்ல அது நகர்ந்து சாலையை வந்தடைந்து அங்கே கடந்து செல்லும் வாகனம் ஒன்றினை குண்டுவீசித் தாக்குகிறது. அந்த தாக்குதலில் கோழிகளை ஏற்றிக் கொண்டு போன ஒருவன் இரத்தவெள்ளத்தில் சிதறி வீழ்கிறான். கோழி ரோமங்கள் காற்றில் பறக்கின்றன. பீரங்கி வண்டிக்குள் உள்ள போர்வீரர்களின் உலகம் மெல்ல கவனம் பெறத் தொடங்குகிறது.

பீரங்கிவண்டியில் இருந்து வெளியுலகைக் காணும் தொலைநோக்கியின் கண் தான் படத்தின் மையப்புள்ளி. அதன் வழியே தான் புறஉலகம் அவர்களுக்குத் தெரிகிறது. பீரங்கிவண்டியை அவர்கள் காண்டாமிருகம் என்று அழைக்கிறார்கள். நகரும் வசிப்பிடமான பீரங்கி ஒரு ஆயுதம் என்பதை அவர்கள் படத்தின் இறுதியில் தான் உணருகிறார்கள். வலிமையான அந்தப் போர்க்கருவி தடைகளை அழித்து முன்னேறி போய்க் கொண்டேயிருக்கிறது,

குறைவான பகல்வெளிச்சமும், காற்றில்லாத இறுக்கமான சிறிய இடமும், மூத்திரம் பெய்வதற்குக் கூட வெளியே போக முடியாத நெருக்கடியும், வெடிமருந்துகளும், தொலைத்தொடர்பு அழைப்புகளும் உள்ள பீரங்கி வண்டிக்குள்ளாகவே கமெரா முன்பின்னாக நகர்ந்து இயங்குகிறது. பலநேரங்களில் நாமும் அந்த வண்டிக்குள் ஒரு மனிதராக இருப்பது போன்ற நெருக்கத்தை உருவாக்கியிருப்பதே படத்தின் வெற்றி.

பீரங்கி வண்டியில் நான்கு மாறுபட்ட பின்புலத்தை, மனநிலையைக் கொண்ட வீரர்கள் இருக்கிறார்கள். அதில் ஒருவன் முதன்முறையாக யுத்தமுனைக்கு வந்திருக்கிறான். தனது அம்மாவிடம் தான் நலமாக இருப்பதாக தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறான். இவர்களை வழிநடத்தும் கொமாண்டர் தனக்கு இடப்பட்ட உத்தரவுகளை நிறைவேற்ற வேண்டும் என்பதில் மட்டுமே கறாராக இருக்கிறான்.

இலக்கைச் சுடுவதற்காக நியமிக்கப்பட்ட ஒருவனுக்கோ சாமான்ய மக்களை ஏன் தாக்க வேண்டும், மனித உயிர் என்பது இவ்வளவு அற்பமானதா என்ற கேள்விகள் எழுகின்றன. அவனால் சுடுகருவியை இயக்கி உயிர்களைக் கொல்ல இயலவில்லை. மனத்தடுமாற்றம், குழப்பம், பயம் ஆகியவற்றால் பீடிக்கப்படுகிறான்.

அவனது கவனக்குறைவால் அவர்கள் அத்தனை பேரும் ஒரே நேரத்தில் அழிந்து போய்விட நேரிடும். டாங்கி பற்றி எரிந்தால் எலும்பு கூட கிடைக்காது என்று கொமாண்டர் மிரட்டுகிறான். ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாத போதும் அந்த உலகிற்குள் அவர்கள் பரஸ்பரம் சார்ந்து இயங்க வேண்டிய அவசியம் உருவாகிறது.




யுத்தம் என்பது ஒரு நரகம், அது மனித உறவுகளை அறுத்தெறிகிறது, அடிப்படை உணர்ச்சிகளைக் கூட அலட்சியம் செய்கிறது. அதிகாரத்தின் பொருட்டு நடைபெறும் மிருகவேட்டை தான் யுத்தம். இராணுவ வீரனாக இருப்பது மனசாட்சியை அடகு வைக்கும் செயல். இப்படிப் படம் முழுவதும் யுத்தம் குறித்து உரத்த சிந்தனையைப் பேசிக் கொண்டேயிருக்கிறார்கள்.

பீரங்கி வண்டி ஒரு சிறைச்சாலை போலவே இருக்கிறது. அதை உணரும் தருணங்களில் அவர்கள் குற்றவுணர்ச்சியை மறைத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். உயிரிழப்புகளின் வேதனையைச் சகித்துக் கொள்ளமுடியாத ஒருவன் அவசரத்துடன் புகைபிடிக்கிறான். புகைபிடிப்பது வண்டிக்குள் அனுமதிக்கப்படுவதில்லை என்று கட்டளை நினைவுறுத்தப்படுகிறது. அவர்களுக்குள் தங்களுக்குள் மனம்விட்டு ஆறுதலாகப் பேசிக் கொள்ள முடியவில்லை, கட்டளைக்கு கீழ்ப்படிவது மட்டுமே வேலையாக இருக்கிறது.

இந்த சூழ்நிலையில் ஒரு தாக்குதலில் இறந்து போன போர்வீரன் உடலைப் பீரங்கியில் வைத்துக் காப்பாற்ற வேண்டிய நிலை உருவாகிறது. இறந்த மனிதனின் உடல் அவர்களுக்கு வாழ்வின் மகத்துவத்தைப் புரிய வைக்கிறது. தாங்களும் நடமாடும் பிணங்களே என்பதை அவர்கள் உணருகிறார்கள். அந்த உடலைக் கொண்டு செல்ல இராணுவ ஹெலிகொப்டர் வருகிறது. பீரங்கியின் கதவு திறக்கப்பட்டு உடல் கொண்டு செல்லப்படுகிறது.

இறந்த உடல் கொண்டு செல்லப்பட்ட பிறகு அவர்கள் தங்களைச் சுயபரிசீலனை செய்து கொள்ளத் தொடங்குக்கிறார்கள். எப்படியாவது இந்தப் போர்க்கருவியில் இருந்து விடுபட வேண்டும் என்று ஏங்குகிறார்கள். இறுக்கமான இரும்புக்கரங்கள் அவர்களை பிடித்துக் கொண்டிருப்பதாகவே உணருகிறார்கள். ஆனால் அதிலிருந்து விடுபட முடியாதபடி கட்டளைகள் அவர்களை வழிநடத்துகின்றன.

நகரவீதிகளுக்குள் பீரங்கி வண்டி நுழைகிறது. பொதுமக்கள் மீது அபாயகரமான ஆயுதங்களைப் பிரயோகிக்கும்படி கட்டளை வருகிறது. தீவிரவாதிகள் ஒளிந்துள்ள ஒரு கட்டடத்தைப் பீரங்கிவண்டி தாக்குகிறது. வீட்டில் பணயக் கைதிகளாக இருந்த பெண்கள் குழந்தைகள் குண்டுவீச்சில் சிக்கி உடல் பிய்த்து எறியப்பட்டு சிதறடிக்கப்படுகிறார்கள்.

துர்மரணம், தொடர்ச்சியான தாக்குதல், தொலைத்தொடர்புக் கருவியின் துண்டிப்பு, பரஸ்பர கருத்துவேற்றுமை என்று அந்த சிறிய உலகிற்குள் நடக்கும் போராட்டங்கள், அவஸ்தைகள். பார்வையாளனை உலுக்கி எடுக்கின்றன. படம் முடியும் போது யுத்தம் என்பது திட்டமிடப்பட்ட வேட்டை என்பதை பார்வையாளன் முழுமையாக உணருகிறான்.

இஸ்ரேலிய சினிமா உலக அரங்கில் மிகுந்த கவனம் பெற்றுவருகிறது. தேர்ந்த கலைநேர்த்தியும், பிரச்சாரத் தொனியில்லாத ஆழமான உணர்ச்சிப் பகிர்வும், புதிய காட்சிப்படுத்துதலை முன்வைத்து இயங்கிய அழகியலும் இப்படத்தை தீவிரமான யுத்த எதிர்ப்பு படமாக்குகின்றன.


# வண்ணத்துப்பூச்சியின் நிறமற்ற வானவில்


- அருண் நரசிம்மன்

மற்ற கற்களைக் காட்டிலும் வைடூரியம் மட்டும் டாலடித்து ஜொலிப்பதேன்? தோகை இளமயில் ஆடி வருகையில் வானில் மழைவராவிட்டாலும், தோகை நிறங்கள் அசாதாரணமாய் ஒளிருவதேன்? சாலையிலுள்ள மழைநீர்தேங்கிய குட்டைகளில் பெட்ரோல் டீசல் ஒழுகிப் படர்ந்து, தாண்டிச்செல்கையில் நாம் பார்க்கும் கோணத்திற்கேற்ப பல நிறங்களில் தெரிவதேன்? கணினி மென்தகட்டை வெளிச்சத்தில் அப்படி இப்படி திருப்பினால் பல நிறங்களாய் தெரிவதேன்? அநேக வண்ணத்துப்பூச்சியின் இறகுகள் பளபளப்பதேன்?

பதில், இரிடெஸன்ஸ். அப்படியெனில் என்ன, அதற்கும் நனோரெக்னொலஜிக்கும் என்ன சம்பந்தம்? பார்க்கலாம்.

பொருளின்மீது விழுந்து ஒளி பிரதிபலிப்பதால் நம் கண்ணில் அப்பொருள் தெரிகிறது. அப்படித் தெரியும் பொருளின் நிறம் அப்பொருளின் ஒளியுடனான உறவாடலை வைத்து வேறுபடும். சூரிய





வெண்கதிர் பல அலையகலத்திலாலான நிறமாலையின், நிறங்களின் கூட்டு. இதைப் பள்ளியில் வெண்மையான ஒளியை அரியம் எனப்படும் முக்கோண கண்ணாடியினுள் செலுத்தி திரையில் வானவில்லாய் பிரித்தெழுதிப் புரிந்துகொண்டுள்ளோம். பொருள் தன் மேல் நிகழும் வெண்ணொளியின் பல அலையகலங்களில் அமைந்த ஒளிக்கூறுகளையும் உறிஞ்சி, மிச்சத்தை பிரதிபலிக்க, அவ்வொளி என்ன அலை அகலத்தில் உள்ளதோ அந்நிறமாய் நம் கண்களுக்கு பொருள் தெரிகிறது.

தோன்றும் விதத்தினால் வேதியியல் மற்றும் இயற்பியல் வகையாய் நிறங்களை இரண்டு வகைபடுத்தலாம். பிக்மண்ட் எனப்படும் இரசாயனப் பொருட்களால் தோன்றுவது வேதியியல் நிறம். இலை பச்சையாய் தெரிவது குளோரோ.:.பில், பச்சையம் எனும் பிக்மண்ட்-டினால். கரட் செம்மஞ்சளாய் இருபபது கரொட்டீன் எனும் பிக்மண்ட்-டினால். ஆனால் தமன்னா அவ்வகையில் இருப்பது சருமத்தின் மெலனின்-னால்.

கோதை 'கார்மேனி, செங்கண், கதிர் மதியம் போல் முகத்தான்' என்கையிலும் வேதியியல் பிக்மண்டுகளையே அகப்புறமான உவமைகளால் குறித்து, நாராயணனை நமக்கே பறைதருகிறாள்.

இரிடெஸண்ட் நிறங்கள் இயற்பியல் வகை. வண்ணத்துப்பூச்சி சிறகுகளில் தெரிபவை. தமிழாக்கினாலும் என்னவென்று விளக்கவேண்டும் என்பதால் ஆங்கிலவார்த்தையிலேயே இக்கட்டுரையில் குறிப்போம். இரிடெஸன்ஸ் என்றால் ஒரு பரப்பு அல்லது பொருளின் நிறம் நாம் நோக்கும் கோணத்திற்கேற்ப வெவ்வேறாகத் தெரிவது. வீதிப் பள்ளங்களில் மழைநீர் தேங்கி, அதன் மீது இழையாக வாகனப் போக்குவரத்தினால் பெட்ரோல் டீசல் படிந்திருப்பது, நோக்கும் கோணத்திற்கேற்ப பல நிறங்களாய் தோன்றுவது இரிடெஸன்ஸ். கணினி மென்தகட்டை அப்படி இப்படி திருப்பினால் பரப்பில் நிறங்கள் தட்டுப்படுவதும் இரிடெஸன்ஸே.

வேதியியல் நிறத்திலிருந்து இரிடெஸண்ட் நிறத்தின் முக்கியமான வேறுபாடு, பிக்மெண்ட் போன்ற வேதியியல் பொருட்களின் துணையின்றி, இரிடெஸண்ட் நிறம் பொருள், அதன் பரப்பின், வடிவியல் கட்டுமானத்திலிருந்தே தோன்றுகிறது. இயற்கையின் ஒளிவிலகல் போன்ற குணங்களின் உதவியுடன்.

இதனால் இரிடெஸன்ஸ் திடப்பொருட்களில் ஏற்படாது. அத் திடப்பொருளுக்கு பிக்மெண்டினால் என்ன நிறமோ அப்படியே நமக்குத் தெரியும். பொருளின் தடிப்பு அதிகரிக்கையில், உள்ளே ஊடுருவும் ஒளி கீழ் பரப்புவரை சென்று பட்டுப் பிரதிபலிக்காது. அதற்குள் மொத்தமும் பொருளுக்குள்ளேயே ஆற்றலாய் உறிஞ்சப்பட்டுவிடும். மேல் பரப்பிலிருந்து பிரதிபலித்த ஒரு பகுதி மட்டுமே நம் கண்களுக்குத் தெரியும். நாமெல்லாம் நம் மெலனின் பிக்மெண்ட் என்னவோ, அதற்கேற்ற நிறத்தில் ஒளிருபவர்களே. தலைக்கு பின்னால் சக்கரம் சுத்துபவர்கள், தேஜஸ்வீக்கள் பௌதீக விதிகளுக்கு அப்பாற்பட்டவர்கள்.

மெலிதான பரப்புடைய பொருளிலும் ஏற்கனவே பிக்மெண்ட்கள் இருக்குமே. இதனால், பிக்மெண்டினால் ஏற்படும் வேதியியல் நிறம் ஒன்றாகவும், மெலிதான மேல்-கீழ் பரப்புகளின் பிரதிபலிப்பில் ஒளித்தலையீடுகளினால் ஏற்படும் இயற்பியல் இரிடெஸண்ட் நிறம் வேறாகவும் இருக்கலாம். இதனால் நம் கண்களுக்கு பொருள் இவ்விரண்டு நிறங்களின் ஒளிச்சராசரியாக தெரியும். உதாரணமாய், பிக்மண்டினால் மஞ்சள் நிறத்துடனிருக்கும் மெலிதான பரப்பின் மீது. ஒளிவிழுந்து பிரதிபலிக்கையில், தடிப்பினால் இரிடெஸன்ஸ் தோன்றி, நீல நிறத்திற்கான ஒளிஅகலங்களில் வெளிவருகிறதென்றால், பொருள் மஞ்சள் மற்றும் நீல நிறத்தின் கூட்டாய், 'பச்சை நிறமே, பச்சை நிறமே' என்றொளிரும்.

இப்போது வண்ணத்துப்பூச்சியை அணுகுவோம்.

வண்ணத்துப்பூச்சியின் உடம்பு முழுவதும் சிட்டின் எனப்படும் இரசாயனம் இயற்கையிலேயே தடவப்பட்டுள்ளது. இறகோ சிட்டின்-னினால் ஆன சவ்வு. நனோ கட்டமைப்புக்கொண்ட செதில்களிலானது. நம் விரல்களுக்கிடையே செடியிலிருந்து இறகைப் பிடித்து தொட்டுத் தூக்கி பறக்கவிடுகையில், சிறிதளவேனும் விரலில ஒட்டிக்கொள்வது வண்ணத்துபூச்சி சிறகுஇழந்தசிட்டின்.

இந்த செதில்கள், ஒன்றன் மீது ஒன்றாய் சேர்ந்து, அடுக்குகளாய் அமைந்துள்ளது. ஓடு வேய்ந்த வீட்டுக் கூரை போல, இறகு நுண் செதில்களாலானவை. வண்ணத்துப்பூச்சிகளின் உயிரியல் குடும்பப்பெயரான லெபிடோப்ட்ரெறா என்றால் கிரேக்கத்தில் செதில்-இறகுடைய என்று பொருள்.

இறகின் பரப்பில் இவ்வகை மைக்ரோ செதில்கள் பல்லாயிரம் இருப்பதை அதிநுண்ணோக்கி மூலம சமீப வருடங்களில் (2000 - 2011) கண்டறிந்துள்ளனர்.

வண்ணத்துப்பூச்சியின் இறகுகள் பல்லாயிரக் கணக்கான செதில்களாய் இருப்பது பறப்பதற்கு காற்றின் எதிர்விசையை கட்டுப்படுத்த உதவுகிறது. விமானத்தில் ஜன்னலில் பராக்கு பார்க்கையில் இறகின் பின்பகுதியை கவனித்தால், அங்கும் விங்-.:.பிலாப்ஸ் எனப்படும் செதில்கள் ஓரிரண்டு இருக்கும் தரையிறங்குகையில் எவ்வாறு குனிந்து நிமிர்கிறது என்று கவனியுங்கள் அவ்வகை உபயோகமே பறக்கையில் வண்ணத்துப்பூச்சியின் செதில்-இறகுகளுக்கும். அடுத்ததாய் பல்வகை தட்பவெட்பத்திலும் வண்ணத்துப்பூச்சியின் உடல் உஷ்ணத்தை கட்டுப்படுத்த இச்செதில்கள் உதவுகிறது. ஸ்கூட்டர், பைக் இவற்றின் என்ஜினை சுற்றி வார்ப்பிரும்பு (இக்காலத்தில் அலுமினியம்) செதில்கள் இருக்குமே; அவைகளும் இவ்வாறே உஷ்ணத்தை வெளியேற்றுகிறது. இவ்விரு உபயோகத்தை கடந்து நிறத்தோற்றத்திலும் செதில்-இறகுகள் முக்கியமான பங்களிக்கிறது.

ஒரு மெலிதான பரப்பிலேயே ஒளித்தலையீட்டால் நிறங்கள் ஜொலிக்கலாம் என்றோம். வண்ணத்துப்பூச்சியின் சிறகோ, அடுக்குகள். காற்று உறையும் இடைவெளிகளுடன் மெலிதான நாற்பதிலிருந்து நானூறு நனோமீற்றர் அளவுகளிலான அடுக்கு பரப்புகளினாலானது.

சிறகின் பொருள் மற்றும் காற்று இரண்டிற்கும் வெவ்வேறு ஒளி விலகல் எண். ஒளி இவற்றின் வழியே ஊடுருவுகையில் வெவ்வேறு விதமாய் விலகி பிறழும். ஒளி விலகல் எண், வெவ்வேறான ஒரு பொருளிலிருந்து மற்றொரு பொருளுக்கு பயணிக்கையில் ஒளிக்கற்றைக்கு நிகழ்கிறது.


> இரிடெஸன்ஸ் என்றால் ஒரு பரப்பு அல்லது பொருளின் நிறம் நாம் நோக்கும் கோணத்திற்கேற்ப வெவ்வேறாகத் தெரிவது. வீதிப் பள்ளங்களில் மழைநீர் தேங்கி, அதன் மீது இழையாக வாகனப் போக்குவரத்தினால் பெட்ரோல் டீசல் படிந்திருப்பது, நோக்கும் கோணத்திற்கேற்ப பல நிறங்களாய் தோன்றுவது இரிடெஸன்ஸ். கணினி மென்தகட்டை அப்படி இப்படி திருப்பினால் பரப்பில் நிறங்கள் தட்டுப்படுவதும் இரிடெஸன்ஸே.

இப்படி இறகில் பொருள்-காற்று-பொருள்-காற்று என்ற அடுக்குகளின் வழியே ஒளி விழுந்து பிரதிபலிக்கையில், அதன் ஒத்தாக்கத் தலையீடு பல கோணங்களில் பல நிறங்களென மேம்படுகிறது. அதாவது, வண்ணத்துப்பூச்சி சிறகில் நிகழ்வது மல்ட்டி லேயர் இண்டர்.:.பெரென்ஸ், அடுக்கு ஒளித்தலையீட்டாக்கம். நிகழும் ஒளி, மேலே விளக்கிய இரிடஸென்ஸ குணத்தினால் சிதறிப் பிரதிபலிக்கிறது. ஒவ்வொரு கோணத்தில் ஒவ்வொரு நிறத்திலோ அல்லது ஒரே நிறத்தின் பல ஜாஜ்வல்ய வகைகளிலோ வண்ணத்துப்பூச்சி தெரிகிறது.

இரிடெஸண்ட் ஜெகஜ்ஜால வர்ண வித்தைகளை வெளிப்படுத்தும் சிட்டின் தடவிய சிறகுகள் வண்ணத்துப்பூச்சிகளுக்கு எதிரிகளை அச்சுறுத்தவும், துணையை டாவடிக்கவும் உபயோகம்.

வண்ணத்துப்பூச்சி இறகின் இவ்வகை அடுக்குச் செதில்களை சாதாரண பூதக்கண்ணாடியிலோ, ஒப்டிகல் மைக்ரோஸ்கோப் எனப்படும் ஒளி பட்டுப் பிரதிபலிக்கும் நுண்ணோக்கியிலோ பெரிதுபடுத்திக் கண்டுவிட முடியாது. இச்செதில்களின் வடிவியல் கட்டமைப்பு நனோ அளவுகளில் உள்ளவை. சாதாரண ஒளியின் அலை அகலம் நனோ சைஸிலோ அதைவிட சற்று அதிகமோ இருக்கும். இதனால் இவ்வொளிக் கற்றைகள் சிறகை இந்த நனோ கட்டமைப்பை பிரித்துக் காட்டமுடிகிற வகையில் ஊடுருவ முடியாமல் தோற்கும்.

இதனால்தான் எலக்ட்ரோன் மைக்ரோஸ்கோப் உபயோகிக்கிறோம். எலக்ட்ரோன் அலைகளுக்கும் 0.1 நனோமீற்றர் அலைஅகலம். வண்ணத்துப்பூச்சி இறகின் செதில்கள் ஒவ்வொன்றும் 40 நனோமீற்றர் தடிப்பானவை. எலக்ட்ரோன் அலைகள் இந்த




செதில்களில் பிரதிபலித்து அவற்றின் நனோ ரூப லகஷ்ணங்களை புட்டுப் புட்டு வைக்கிறது.

யுரேநியா வகை வண்ணத்துப்பூச்சி சிறகில் ஒரு இடத்தில் நனோ சைஸ்களில் இவ்வகை செதில் அடுக்குகள் காற்று இடைவெளிகளுடன் நாலைந்து இருக்குமாம். இவ்வகையில் சிறகு முழுவதும் பல்லாயிரக்கணக்கில். மார்.:.போ வகை வண்ணத்துபபூச்சிகளில் நனோ செதில்கள் அடுக்கு-தீபம் வடிவில அல்லது கிரிஸ் மஸ் மரத்தைப்போல இருக்கும்.

ஒளிவிலகல் எண்ணை செயற்கையாக மாற்றுவதுமூலம் இரிடெஸண்ட் நிறங்களை மாற்றமுடியும். உதாரணமாய் நீல இரிடெஸண்ட் நிறத்துடன் பறக்கும் வண்ணத்துப்பூச்சியின் இறகில் சற்று குறைந்த ஒளிவிலகல் எண்ணுடைய அசிட்டோன் அமிலத்தை சொட்டினால், இறகு பச்சை நிறமாய் ஒளிருவதை நிரூபித்திருக்கிறார்கள்.

இவ்வகை இயற்கை நனோரெக்னொலஜி ஆராய்ச்சியின் தாக்கமாய் ஆய்வுகூடத்தில் செயற்கை .:. போட்டானிக் படிகங்கள் உருவாக்கத் தொடங்கியுள்ளனர். நனோ அளவுகளில் காற்று இடைவெளிகளுடன் அடுக்கடுக்காய் டி.:.ப்ராகஷன் கிரேட்டிங் செய்து இரிடெஸன்ஸை தோற்றுவிக்கிறார்கள்.

முடிக்கும்முன்...

'நிறமற்ற வானவில்' (சுஜாதா கதை) என்று வைக்கப்பட்டுள்ள கட்டுரையின் தலைப்பு கட்டுரையின் உள்ளடக்கத்தை கவனித்தால் தெரியும். வண்ணத்துப்பூச்சியின் நிறம் வேதியியல் பிக்மெண்ட் வெளிப்பாடில்லை; நீர்த்துளியில் ஒளிக்கதிர் எவ்வகையில் சிதறி வானவில்லாகிறதோ அவ்வகையில் தோன்றும் இரிடெஸன்ஸ்ட் நிறங்கள். ஏன் 'நிறமற்ற' என்றால், இவ்வகை இரிடெஸண்ட் நிறங்கள் வெளிப்பட பொருள் எந்நிறத்திலும் இருக்க வேண்டாம். மெலிதான பரப்பில் சூரிய ஒளியின் தலையீட்டாக்கமே இரிடெஸன்ஸ்.

வண்ணத்துப்பூச்சியின் நிறமற்ற வானவில் (இரிடெஸன்ஸ்), இயற்கையை, புறத்தை, நிறங்களாய் பிழிந்துவிட எத்தனிக்கும் ஓவியர்களுக்கு மிகப் பெரிய சவால் என்றே தோன்றுகிறது.

# நயினையிலிருந்து நல்லூருக்கு திருத்தலப் பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு வாழ் பக்த அடியார்களினால் வருடாவருடம் மேற்கொள்ளப்படும் நயினை நல்லூர் திருத்தல பாதயாத்திரை இம்முறையும் இடம்பெறவுள்ளது.


அந்தவகையில் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை பகல் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் அபிஷேக பூசை வழிபாட்டின் பின் வேல்பூசையுடன் வேல் எடுத்துக் கொண்டு யாத்திரை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இது குறிகட்டுவான், புங்குடுதீவு,வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி மண்டைதீவு பண்ணை யாழ்ப்பாணம், வில்லூண்றி கந்தர்மடம் வழியாக எதிர்வரும் 16ஆம் திகதி நல்லூர் கந்தன் தேர்த்திருவிழாவன்று அதிகாலை சென்றடையும் ஒவ்வொரு இடங்களிலும் தரிசித்து செல்லும் ஆலயங்களாக அன்றையதினம் இரவு குறிகட்டுவான் ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலயத்திலும் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு காளிகாபர மேஸ்வரி ஆலயம், புங்குடுதீவு சர்வோதயம் சிவயோக சுவாமிகள்தியான மண்டபம், ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம், நண்பகல் புங்குடுதீவு பெருங்காடு மூத்த நயினார்புலம் சித்தி விநாயகர் ஆலயம் மாலை தென் பெருத்துறை சிவன் ஆலயம், ஆதிவைரவர் ஆலயம், அன்றிரவு சிராஞ்சி மீனாட்சி சுந்தரேஸ்வரர்ஆலயத்தில் தங்கி நின்று ஒன்று கூடல் வழிபாடும் இடம்பெறும்.

15ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு புறப்பட்டு கிராஞ்சி முருகன் ஆலயம் கதிர்காம முருகன் ஆலயம், கலட்டி சித்தி விநாயகர் ஆலயம், மடத்துவெளி முருகன் விநா யகர் ஆலயங்கள், வேலணை துறையூர் முருகன் ஐயனார் ஆலயங்கள்வங்களாவடி முருகன் ஆலயத்தில் கந்தர் அநுபூதிமுன்றோதல் மகேஸ்வர பூசை இடம்பெற்று அதிசயவைரவர் ஆலயம், மண்கும்பான் விநாயகர் ஆலயம் அல் லைப்பிட்டி மண்டைதீவு சந்தி பஜனை வழிபாடு நடைபெற்று பண்ணைவழியாக யாழ். சத்திரம் ஞான வைரவர் கோட்டை ஸ்ரீபால ஞானவைரவர் ஆலயம், நாவாந்துறை வைரவர் நாகபூசணி அம்பாள் ஆலயம் அன்றிரவு வில்லூண்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தங்கி பஜனை வழிபாடு நடைபெறும். 16ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை புறப்பட்டு சீனிவாசகம் வீதி வழியாக வண்ணை சிவன் காளியம்மாள், பெருமாள்கோவில் வழியாக கந்தர் மடம் சிவ உதய நாகபூசணிஅம்பாள்ஆலயத்தில் பூசை வழிபாடு செல்வநாகபூசணி அம்பாள் ஆலயம் அரசடி வீதி வழியாக நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் நல்லை கந்தன் திருத்தலத்தை சென்ற டைந்து திருத்தேரின் பின் திருவீதி பஜனையும் வேல் அர்ச்சனையுடன் நிறைவுபெறும்.

திருத்தல பஜணைப்பாதயாத்திரை செல்லும் வீதியில் வசிப்பவர்கள் சைவக்கலாசாரத்திற்கமைய பூரண கும்பம் வைத்து பக்தி சிரத்தையுடன் அடியவர்களை வழியனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# இலங்கைக் கலைஞர்களின் தயாரிப்பில் "1023 வருடங்கள்" குறுந்திரைப்படம்




(மன்னார்)

இலங்கை தமிழ் சினிமா மற்றும் குறுந்திரைப்பட வரலாற்றில் முதன்முறையாக, மனித இயற்கையை மாற்ற முயற்சிக்கும் விஞ்ஞான தொழில்நுட்பமும் அதனை எதிர்பார்க்கும் ஒருசிலரின் ஆராய்ச்சியும் எந்த அளவிற்கு வெற்றி அளித்தது என்பதை நவீன கால காதல் கதையுடன் தெளிவுபடுத்தும் வகையில் மிக வேகமாக உருவாகிக்கொண்டிருக்கும் குறுந்திரைப் படம் '1023 வருடங்கள்'.

இக்குறுந்திரைப்படத்தில் கணினி வரை கலை(Computer Graphic) தொழில்நுட்பத்தினை சரியான முறையில் பயன்படுத்தியுள்ளனர். மன்னார் பள்ளிமுனை St.Lucia Production டிலான் மற்றும் Asha Production நிரஞ்சனன் ஆகியோர் தயாரிக்கும் - 1023 வருடங்கள் குறுந்திரைப்படத் தினை'பட்டாசு' இயக்குனர் த.ஷமிதன் இயக்குகிறார். இது இவரது 5ஆவது குறுந்திரைப்படம் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு சொ.அனுதீபன் ஒளிப்பதிவினையும், பா.பார்த்தீபன் படத்தொகுப்பினையும(Sunsonic Editing Lab - Mannar), தரஷ்ணன் இசை அமைப்பினையும்

த.சைதன்யன் (Griffin EFX Studio - Mannar ) வரை கலையினையும் மிக நேர்த்தியாக மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை குறுந்திரைப்பட வரலாற்றில் புதிய பரினாமத்தை நோக்கி பயணம் செய்ய தயாராகும் இக்குழுவில் இவர்களது நண்பர்கள் யாழ்.மண்ணில் உள்ள Himalaiya Creations தனியார் விளம்பர, திரைப்பட நிறுவனத்தின் தலைவர் ரெ.துவாரகன் மக்கள் தொடர்பு அதிகரியாகவும்(PRO), அந்நிறுவன படத்தொகுப்பாளர் துசிகரன் துணை ஒளிப்பதிவாளராகவும், FourSix Creation திரைப்பட நிறுவனத்தின் தயாரிப்பாளர், இயக்குனர் சிவராஜ் இனண இயக்குனராகவும் மற்றும் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த தொம்சன் துணை இயக்குனராகவும் அத்தோடு மணி மாறன் உதவி இயக்குனராகவும் மற்றும் லிங்கரூபன் உதவி ஒளிப்பதிவாளராகவும் பணியாற்றியுள்ளனர்.

இறுதிக்கட்ட தயாரிப்பில் உள்ள '1023 வருடங்கள்' குறுந்திரைப்படம் வெகு விரைவில் வெளிவர உள்ளதோடு இலங்கை குறுந்திரைப்பட வரலாற்றில் பெரும் மாற்றத்தினை ஏற்படுத்தி தென்னிந்திய குறுந்திரைப்படங்களுக்கு இணையானதாக அமைய வேண்டும் என இந்த ரெயிலரினை பார்வையிட்ட மக்கள் வாழ்த்துகிறார்கள்.. இயக்குனர் ஷமிதனின் குறும்பட வரிசையில் ஒரு மைல் கல்லாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இளைஞர் யுவதிகளுக்கான அரங்கப் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

யு.என்.டி.பி நிறுவனத்தின் அனுசரனையில் நடாத்தப்பட்டு வருகின்ற பிரதேச இளைஞர் யுவதிகளின் ஆளுமை திறன் விருத்தி அரங்க பயிற்சிபட்டறை நிகழ்வின் அங்கமாக பண்டத்தரிப்பு சாந்தை பிரதேச இளைஞர் யுவதிகளுக்கான திறன் விருத்தி அரங்க பயிற்சி பட்டறை நிகழ்வு சாந்தை விநாயகர் கலை பண்பாட்டு மன்ற தலைவர் இரா. இதயராஜ் தலைமையில் கலை பண்பாட்டு மன்ற மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு விசேட அதிதியாக யு.என்.டி.பி நிறுவனத்தின் சமூக சேவை உத்தியோகத்தர் மகேஸ்வரன் கலந்து கொணடார். திறன் விருத்தி அரங்க பயிற்சி பட்டறையின் வளவாளர்களாக புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியருமான எஸ்.ரி.குமரன் புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப்பணிப்பாளரும் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியருமான எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோர் கலந்து கொண்டு அரங்க பயிற்சி பட்டறையை வழிநடத்தினார்கள்.

இப்பயிற்ச்சி பட்டறையில் 30 இற்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.இப்பயிற்சி பட்டறையில் இளைஞர் யுவதிகளின் ஆளுமைத்திறன் விருத்தி சார் பயிற்சிகள் தெருவெளி ஆற்றுகைக்கான களப்பயிற்சி என்பன வழங்கப்பட்டன.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

கணினியில் Pagemakar இல் தட்டச்சு செய்யக்கூடியவர்கள், எழுதுவினைஞர், கணக்குப்பதிவுகள் செய்யக்கூடியவர்கள், அச்சக வேலைதெரிந்தவர்கள், வீட்டில் வைத்து தட்டச்சு செய்து தரக்கூடியவர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கும் வேலையைக்குறிப்பிட்டு விண்ணப்பத்தை சி. மருதகேசன் 166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் மேலதிக தகவல்களுக்கு 0755525405 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

அரைக்கும் ஆலை, இயந்திரத்தில் மா. வறுத்தல் தொலைத் தொடர்பு நிலையம் என்பவற்றில் பணியாற்ற அனுபவமுள்ள வேலையாள் தேவை ஆர்வமுள்ளவர்கள் பிருந்தா மில் இல 18, றக்கா றோட் யாழ்ப்பாணம் அல்லது 0779912304 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

சாவகச்சேரி டச்சு வீதியில் இருக்கு சுஜித் என்ரபிறைசஸ் இற்கு களஞ்சியப் பொறுப்பாளர் தேவை. 50 வயதிற்கு மேற்பட்ட சிங்களம் பேசக்கூடியவர் விரும்பத்தக்கது. உணவு, தங்குமிட வசதி உண்டுமேலதிக விபரங்களுக்கு 0212270588, 0770590 668இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

உடுவிலில் உள்ள வைத்தியசாலைக்கு வேலை தெரிந்ததாதியர் தேவை பழக விரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம். மேலதிக விபரங்களுக்கு 0773715670 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

பிறிலன் தனியார் நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, கல்முனை ஆகியஇடங்களுக்கு விநியோகஸ்தர்கள், விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0774887748, 0777341355 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

New Asian center நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதி (ஆண்) கணக்கியல் எழுது வினைஞர் (பெண்) கணினி போதனாசிரியர்தேவை. ஆர்வமுள்ளவர்கள்.0771541852, 0778249949 இற்குதொடர்பு கொள்ளவும்.

---

ரில்கோ சிற்றிஹெட்டேலில் Restaurant Supervisor, Waiters தேவை. ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக்கோவையைTilko Jaffna city Hotel, 70/6,K.K.S. Road, Jaffna என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும் தகவல்களுக்கு 0777807737 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்துறையில் வேலைவாய்ப்பு. ஆண்டு 9 வரை படித்திருந்தால் மட்டும் போதுமானது பயிற்சியின் போது சம்பளம் மற்றும் தங்குமிட வசதிஉண்டு மேலதிக தவல்களுக்கு 0217212045, 0778330074 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

வள்ளுவர் சிறுகைத்தொழில் நிறுவனத்திற்கு பெண் தொழிலாளர்கள்தேவை. உணவு தங்குமிட வசதி உண்டு ஆர்வமுள்ளவர்கள் 0213208835, 0770691465 இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

சித்த வைத்தியருடன் கூட இருந்து குரு சிஷ்யமுறைப்படி மருந்துகள் செய்யப் பழக விருப்பமுள்ள குடும்பப் பொறுப்புகள் இல்லாத பெண்பிள்ளைக்கு வெற்றிடம் உண்டு. சிறந்த எதிர்கால வாழ்க்கைக்கு வழிகாட்டப்படும். தொடர்புக்கு 0779723369.

---

தச்சுவேலை முழுமையாகத்தெரிந்தவர்கள், வேலைபழக லிரும்புபவர்கள் உடன் தேவை. கூடியளவான சம்பளம் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் கூலிவேலையாள்களும் தொடர்பு கொள்ளலாம்.தொடர்புக்கு லிப்றா மரத்தளபாட நிலையம் 61, இராமநாதன் வீதி, கலட்டி. 0773001763.

---

அல்படிசைனிங், வீடியோ எடிற்றிங் தெரிந்த வேலையாள்கள் தேவை. இருபாலாரும் விரும்பத்தக்கது. தொடர்புக்கு 0778893692.

---

கையடக்க தொலைபேசிகள் திருத்துவதற்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை. சம்பளம் நேரில்பேசித் தீர்மானிக்கப்படும் மேலதிக விவரங்களுக்கு 0772622373இற்கு தொடர்பு கொள்ளவும்.

---

சமையல்வேலை தெரிந்தவரும் தங்கி இருந்துவேலை செய்யக்கூடியவரும் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும் தொடர்புக்கு 0772664677.

---

அனுராதபுரம், வவுனியா, மன்னார், யாழ்பப்பாணம், மட்டக் களப்பு, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களுக்கு புனர் நிர்மாண வேலைகளுக்கு குழுக்களாக தொழிலாளர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றர்கள். இரண்டு வாரத்துக்கு ஒருதடவை சம்பளம் ஒவ்வொருநாளும் செலவுக்கு பணம் எடுக்கலாம். உணவு, தங்குமிட வசதி உண்டு இலங்கை முழுவதும் தொழில் வாய்ப்புகளுக்கு அனைவரும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். தொடர்புக்கு 0713460295.

---

யாழ். நகரில் தனியார் கிளினிக்குக்கு 18வயதுக்கு மேற்பட்ட G.C.E.O/L சித்தியடைந்த பெண்காசாளர்தேவை. தகைமையுடையோர் சுயவிபரக்கோவையுடன் புதன் கிழமை (08.08.2012 காலை9.00 மணிக்கு 514/18 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு சமூகமளிக்கவும். தொடர்புக்கு 0777954152

# பின்தங்கிய பாடசாலைகளை நவீனமயப்படுத்துவதே இலக்கு

## – வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர்



மகிந்த சிந்தனையின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 5000 பாடசாலைகளில் ஒவ்வொரு பாடசாலைக்கும் தலா 500000 ரூபா வழங்கும் ஆரம்பகட்ட நிகழ்வு சித்தங்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் பெயர் பொறிக்கும் முன்வளைவுக்கு அடிக்கல்லை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஈ.பி.டி.பியின் வலிகாமம் வலய இணைப்பாளரும் வலி மேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சி தலைவருமாகிய சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) அவர்கள் நாட்டி வைத்தார்.

இக்கிராமத்தில் இருந்து இப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் நவீன பாடசாலையை தேடிப் போகாமல் இப்பாடசாலையை நவீனமயப்படுத்தி பிள்ளைகள் இப்பாடசாலையியே கல்வி கற்பதே எமது நிலைப்பாடாகும். அத்தோடு இப்பாடசாலையின் மாணவர்களின் திறமைகளை பார்க்கும் போது



இனிவரும் காலங்களில் இப்பாடசாலை கல்வியில் முதன்மையான பாடசாலையாகத் திகழும் என்றார் .

தொடர்ந்து இரண்டாம் கட்ட நிகழ்வாக சங்கானை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை அபிவிருத்தி பணியை ஜீவன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் சங்கானை பிரதேச செயலர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திட்டமிடல் பணிப்பாளர் அதிகாரிகள் அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# பிரான்ஸிற்கு சென்ற இளம்பெண் கட்டுநாயக்க விமானநிலையத்தில் கடத்தல்

(சுன்னாகம்)

பிரான்ஸிற்கு செல்வதற்காக சென்ற இளம் பெண் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இனம் தெரியாதவர்களினால் வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக யாழ்.சுன்னாகம் காவல்துறை நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலையில் இடம்பெற்றுள்ள இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:

சுன்னாகம் சூராவத்தையைச் சோர்ந்த இளம் பெண் ஒருவர் பிரான்ஸ் நாட்டில் இருந்து வந்து தமது தாய் தந்தையர் மற்றும் உறவினர்களுடன் விடுமுறையைக் கழித்து விட்டு மீண்டும் பிரான்ஸ் நாட்டிற்குச் செல்வதற்க்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்க்குச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் விமான நிலையத்தில் வைத்து வாகனத்தில் வந்த இனம் தெரியாதவர்கள் குறிப்பிட்ட இளம் பெண்ணை கடத்திச் சென்றதாக சுன்னாகம் காவல்துறை நிலையத்தில் உறவினர்கள் முறையிட்டுள்ளார்கள்.

குறிப்பிட்ட கடத்தல் சம்பவத்திற்கான காரணம் இதுவரையில் தெரியவரவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# தனிப்பட்ட தரவுகளை பார்வையிட சில நிறுவனங்களுக்கு அனுமதி

(கொழும்பு)

நபர்களின் தனிப்பட்ட தரவுகளை பார்வையிட சில நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட உள்ளது.

நாட்டின் பாதுகாப்பு தொடர்பான நிறுவனங்களுக்கே இவ்வாறு சந்தர்ப்பம் அளிக்கப்படவுள்ளது.

ஆட்பதிவு திணைக்களத்தின் தரவுகளை இவ்வாறு இணையத்தின் ஊடாக பார்வையிடக் கூடிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட உள்ளன.

புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட நாட்டின் சில பாதுகாப்புத் தரப்பினர், இவ்வாறு எந்தவொரு நபரினதும் தரவுகளை பார்வையிட அனுமதி அளிக்கப்படவுள்ளது.

# துமிந்த சில்வாவை கைது செய்ய வேண்டும் பொலிஸ் மா அதிபரிடம் ஹிருணிகா கோரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று நாடு திரும்பியுள்ளார். நீதிமன்ற உத்தரவுப்படி அவரைக் கைது செய்யுமாறு கொலையுண்ட ஜனாதிபதியின் ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமச் சந்திரவின் புதல்வி ஹிருணிகா பிரேமச் சந்திர பொலிஸ் மா அதிபருக்கு தொலைபேசி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

துமிந்த சில்வா எப்போது இலங்கை திரும்பினார். என்று எனக்குத் தெரியாது.

இவர் இரு வாரங்களுக்கு முன்னர் நாடு திரும்பியதாகக் கூறுகின்றனர்.

வேறு சிலர் மூன்று நாட்களுக்கு முன்னர் நாடு திரும்பியதாகக் கூறுகின்றனர் என்று அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

# மஞ்சள் கோட்டுக் கடவையை மீறல் ஆயிரம் பேருக்கு வழக்கு

மஞ்சள் கோட்டுக் கடவை சட்டத்தினை அமுல் படுத்திய கடந்த 10 நாள் காலப்பகுதியினுள் மட்டும் சுமார் ஆயிரம் பாதசாரிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், கடந்த 48 மணி நேரத்தில் மாத்திரம் 150 பாதசாரிகளுக்கு எதிராக இந்த சட்டத்தை மீறினார்கள் என்ற காரணத்திற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக, காவல்துறை ஊடக பேச்சாளர் அஜித் ரோகண குறிப்பிட்டுள்ளார்.

மஞ்சள் கோட்டின் ஊடாக மட்டுமே வீதியினை கடக்க வேண்டும் என்ற சட்டம் தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தப்படுகிறது. இந்த நிலையில் கடந்த இரண்டு வாரங்களில் மாத்திரம் ஆயிரம் வழக்குகள் நாடளாவிய ரீதியாக பதிவு செய்யப்பட்டுள்ளன. அதுபோல நேற்று காலை 6.30 முதல் 8.30 வரை கொழும்பு தெற்கு, மற்றும் கொழும்பு மத்திய பகுதிகளில் கண்காணிக்கப்பட்ட போது, இதனை மீறிய சுமார் 150 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# சர்வதேச பாதுகாப்பு கருத்தரங்கு; பாதுகாப்பு ஏற்பாடுகள் பூர்த்தி

கொழும்பில் நடைபெறவுள்ள சர்வதேச பாதுகாப்பு கருத்தரங்கை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையில் கொழும்பு கலதாரி ஹோட்டலில் சர்வதேச பாதுகாப்பு கருத்தரங்கு நடாத்தப்பட உள்ளது.

இந்த கருத்தரங்கில் பங்கேற்போரை பாதுகாக்கும் நோக்கில் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

43 நாடுகளின் இராணுவ உயரதிகாரிகள் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த 200 முக்கியஸ்தர்கள் இந்த கருத்தரங்கில் கலந்து கொள்ள உள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

இந்தப் பாதுகாப்பு கருத்தரங்கின் பிரதம அதிதியாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பங்கேற்க உள்ளார். அமெரிக்கா, சீனா, இந்தியா உள்ளிட்ட 43 நாடுகளின் இராணுவ உயரதிகாரிகள் இந்த கருத்தரங்கில் பங்கேற்க உள்ளனர்.

# தம்பசிட்டி வீதி காப்பற்றாக புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தம்பசிட்டி வீதியிலிருந்து நாவலடிச் சந்தி வரை காப்பற் வீதியாக புனரமைக்கப்படவுள்ளது.

இவ்வீதி கடந்த 10 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் மிக மோசமாக சேதமடைந்துள்ளதால் இவ்வீதியூடாக 3 பிரபல கல்லூரிகளுக்கும் அரச சேவை அலுவலகங்களுக்கு செல்லும் பொதுமக்களும் மாணவர்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இதனை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சுட்டிக் காட்டியதை அடுத்து தற்போது ஆமை வேகத்தில் வீதி அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் இவ் வீதி புனரமைக்கப்பட்ட பின்னர் மக்கள் இலகுவாக தமது பயணத்தை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுகிறது.

(109)


# நல்லூர் திருவிழாவை முன்னிட்டு "பஜாஜ்" இலவச விசேட சேவை

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு 'பஜாஜ்' வாடிக்கையாளர்களுக்கு இலவச விசேட சேவையினை வழங்கவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை இந்தச் சேவை நடைபெறவுள்ளது.

டேவீட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் அங்கீகாரம் பெற்ற யாழ்.முகவர் சந்நிதி முருகன் வேக் சொப் அன்ட் சேவிஸ் இந்தச் வேவையை வழங்குகின்றது.

BAJAJ

பஜாஜ் வாடிக்கயாளர்களுக்கு டேவீட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் சேவிஸ் பிரிவில் தொழில் நுட்ப வல்லுனர்களால் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கரவண்டிகளை இலவசமாக பரீட்சித்து பெற்றக் கொள்ள முடியும் வாகனங்களுக்குரிய தரநிர்ணயம் பரிசோதனை இலவசமாகச் செய்து கொள்ளலாம்.

இதேவேளை பஜாஜ் வாடிக்கையாளர்களுக்கு 10 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை நிறுவனத்தில் பஜாஜ் அசல் உரிதிப்பாகங்களை மட்டும் கொள்வனவு செய்பவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படுவதுடன் 10 வீத விலைக் கழிவும் உண்டு.

சேவிஸ் திருத்த வேலைகளுக்கும் இந்நாட்களில் 10 வீத விலைக்கழிவு உள்ளது என அந்நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.


# "பத்ர்" என்ற வெற்றிக்காக

கண்ணியம் மிக்க இந்த மாதத்திலே இன்றைய நாள் ஒவ்வொரு முஸ்லிம்கள் உள்ளத்திலும் உயிரோட்டமாக பதிய வேண்டியது என்றால் அது மிகையாகாது. ஆம், பிறை 17 ஆம் நாள் அன்றுதான் எம் வரலாறுகள் பேணப்பட்டு இஸ்லாம் மார்க்கம் வாழ்வா? சாவா? என்ற கேள்விக்கான விடையைத் தந்த நாள்!

ஆம்! முஸ்லிம்களின் முன்னேற்றத்தை முறியடிக்க முனைந்த இறை நிராகரிப்பாளர்களால் 'பத்ர்' என்னும் போர்க்களத்தில் கி.பி.623 ஆம் ஆண்டு ஹிஜ்ரி 2 ஆம் வருடம் றமழான் மாதம் 17 ஆம் நாள் ஆரம்பமானது. எதிரிப்படைகள் 1,000 பேர்கள் இருக்க முஸ்லிம்கள் எண்ணிக்கையோ 313 ஆக இருந்தது. இந்நிலையிலே எவ்வாறு எதிரிப்படைகளை தோற்கடிக்க முடியும் என்று ஏங்கிய முஸ்லிம் படையினரிடம் 'பயப்படாதீர்கள் இறைவன் எமக்கு உதவி புரிவான்

நிச்சயமாக நான் தொடர்ச்சியாக ஆயிரம் மலக்குகளைக் கொண்டு உங்களுக்கு உதவுவேன்' என்ற வசனத்தைச் சுட்டிக்காட்டி அவர்களைத் தைரியப்படுத்தினார்கள்.

இன்னும் எம்பெருமானார் கலந்து கொண்ட யுத்தத்தங்களில் இந்த 'பத்ர்' யுத்தம் மிக மிக முக்கியமானது. அவர்களே அணிகளை ஒழுங்கு செய்து போரை வழிநடத்தி வெற்றி பெற்றதும் இப்போருக்கு சிறப்பளிக்கின்றது.

அத்தோடு இறைநிராகரிப்பாளர்களின் பெயர்களை கூறிக் கூறி இவர்கள் இந்த இடத்தில கொல்லப்படுவார்கள் என்று கூறிய முன்னறிவிப்பும் மெய்ப்பிக்கப்பட்டதும் இந்த பற்றுக் கோர் முத்தாய்ப்பாகின்றது.

எனவே எவ்வளவோ இன்னல்களுக்கும் இடைஞ்சல்களுக்கும் முகம் கொடுத்து இஸ்லாத்திற்காக தம் இன்னுயிர்களை நீத்து தியாகம் செய்த அந்த நபித் தோழர்களான ஸஹாபாக்களை நாமும் நினைவு கூருவதில் கடமைப்பாடுடையவர்களாகின்றோம்.

'ஸலீலல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸலீலம்'

- யாழ்.மௌலவி அப்துல் அஸீஸ் -

34. கத்திபோல் இலை இருக்கும் கவரிமா பூ பூக்கும். தின்னப் பழம் பழுக்கும். தின்னாத காய் காய்க்கும். அது என்ன?
1. வேம்பு 2. அகத்தி 3. முருங்கை 4. வெண்டி


✱ 35ம் வினாவுக்கு உரிய விடையினைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.





| | | |
|---|---|---|
| வியாதி | விதவை | கதவு |
| யாகம் | தவளை | தவிடு |

அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்கள் கீழே தரப்பட்டுள்ளவாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அக்கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

35. விதவை ⟶ தவிடு ⟶ வியாதி ⟶ .................... ⟶ ....................

36. உருவில் வெற்று அடைப்புக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.



1.  2.  3.  4. 


✱ பின்வரும் பந்தியில் இரண்டு பகுதிகள் வெட்டி நீக்கப்பட்டுள்ளன. அவ்வாறு வெட்டி நீக்கப்பட்டுள்ள இரண்டு பகுதிகளையும் தெரிவு செய்து 37ம், 38ம் வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.


ஆதிகாலத்தில் திறந்த வெளிகளில் மனிதர்கள் [ A ] பின்னர், குகைகளில் வசிக்கக் கற்றுக் கொண்டனர். அவர்கள் கற்களைக் கூர்மையாக்கி அதை ஆயுதமாக பயன்படுத்தி வந்தனர். அந்தக் கூர்மையான கல் மனிதர்களின் எழுதுகோலாகும். அந்தக் கூரிய கல்லை எழுதுகோள்கள் [ B ] தாங்கள் வசித்து வந்த குகைச் சுவர்களில் சித்திரங்களை வரைந்தார்கள். அந்தச் சித்திரங்கள் வாழ்க்கையையும் வேட்டையில் அடைந்த வெற்றிகளையும் குறிப்பிடுவதாக அமைந்திருந்தன.


37. வெற்றிடம் Aயிற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.
1. வசித்து வந்தார்கள். ஒரு தற்காப்பு முதல்
2. வசித்து வருகிறார்கள். ஒரு தற்காப்பு முதல்
3. வசித்து வருவார்கள் ஒரு தற்காப்பு முதல்

38. வெற்றிடம் Bயிற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.
1. ஆயுதமே போல் பயன்படுத்தி விலங்குகளின் தினசரி
2. ஆயுதமே போல் பயன்படுத்தி இவர்களின் கடைசி
3. ஆயுதமே போல் பயன்படுத்தி அவர்களின் தினசரி


✱ 39ம், 40ம் வினாக்களுக்கு பின்வரும் விளக்க உருக்களை அவதானித்து கேட்கப்படும் கேள்விகளுக்கு விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.


ரூபா. 130


ரூபா. 30


ரூபா. 140

39.  ஒன்றின் விலை யாது? ....................................


40.  ஒன்றின் விலை யாது? ....................................





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II
நேரம் 1-15 நிமிடம்





# கல்வி முரசு






இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

✱ 01ம், 02ம் வினாக்களுக்குப் பாடல்களில் குறித்து நிற்கும் பொருளுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. வண்ண வண்ண மலர்கள்
வனப்பு மிகு மலர்கள்
பல நிறத்தில் உண்டு
பார்க்க அழகு மலர்கள்

1.  2.  3.  4. 

02. தானுண்ட நீரை
தலையாலே தரும் தரு
களைகளற்ற தரு
கிடுகு பின்ன உகந்த தரு

1.  2.  3.  4. 

03. 
இந்நிகழ்வை எந்த மாதத்தில் காணலாம்
1. சித்திரை 2. வைகாசி 3. தை மாதம் 4. ஆனி

04. பின்வரும் விளக்குகள் வெவ்வேறுபட்ட துணிகளைக் கொண்ட திரிகள் காணப்படுகிறது. இவற்றுள் நீண்ட நேரம் ஒளிரும் விளக்கு எது?

1. 
பருத்தித் துணி





2. 
நைலோன் துணி

3. 
பொலிஸ்டர் துணி

4. 
இறப்பர் நாடா

✱ 05ம், 06ம் வினாக்களிலுள்ள உருக்களில் பொருத்தமற்ற உருவின் கீழ்க் கோடிடுக.

05. 1.  2.  3.  4. 

06. 1.  2.  3.  4. 

✱ 7ம், 8ம் வினாக்களில் தரப்படும் நிகழ்வுகளுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

07. மழை பெய்தால் உடனடியாக நிகழக்கூடியது
1. மண் குளிரும் 2. புல் தளைக்கும் 3. மண் நனையும் 4. சேற்று நிலமாக மாறுதல்


08. பழமரத்தில் எப்போதும் இருப்பது
1. காய் 2. இலை 3. பூ 4. வேர்

09. ஓர் எண்ணை நினைத்து அதனை நான்கால் பெருக்கி வரும் விடையிலிருந்து ஐந்தைக் கழித்தால் வருவது 7 ஆகும். எனின், நினைத்த எண் யாது?
1. 3 2. 6 3. 12 4. 8

✱ 10 - 12 வரையுள்ள வினாக்களுக்கு ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள வரிவடிவப் படம் மூன்றுக்கும் பொருந்துகின்ற படத்தை எதிரில் உள்ள படங்களில் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

10. 

11. 


12. 

13. கமலனின் வயது 14. நிமலன் கமலனிலும் பார்க்க 6 வயது மூத்தவன். விமலன் நிமலனிலும் பார்க்க 2 வயது இளையவன். விமலனின் வயது எத்தனை?
1. 20 2. 18 3. 22 4. 16


14. ராசனுக்கு கிடைக்கும் தொகையின் இரு மடங்கு ஈசனுக்கும் மும்மடங்கு நேசனுக்கும் கிடைக்கத் தக்கவாறு 54 தோடம்பழங்கள் ராசன், ஈசன், நேசன் ஆகிய மூவருக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டால், நேசன் எத்தனை தோடம்பழங்கள் பெறுவான்?
1. 9 2. 18 3. 27 4. 29

15. இருபது மாணவர்கள் 20 நிமிடத்தில் ஒரு கிலோமீற்றர் தூரம் ஓடுவார்கள். 40 மாணவர்கள் அதே தூரத்தை எத்தனை நிமிடத்தில் ஓடுவார்கள்?
1. 20 நிமிடம் 2. 40 நிமிடம் 3. 10 நிமிடம் 4. 30 நிமிடம்

✱ கீழே மூன்று வாக்கியங்கள் முகங்கள் மூலம் சொற்களின் மேல் காட்டப்படுகின்றன. ஒரு சொல் ஒரு முகத்தின் மூலம் காட்டப்படுனும், முகங்கள் சொற்களின் ஒழுங்கில் காட்டப்படவில்லை. அருகில் காட்டப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான முகங்களைத் தெரிந்து அதன்கீழ்க் கோடிடுக.




16. வருவாயா
17. கோயிலுக்கு
18. நாளை




19. முரளியும் நானும் விளையாட்டுக்களில் ஈடுபடுவதுண்டு. எனினும், அவன் என்னுடன் பல நாட்களாக விளையாட்டுக்களில் ஈடுபடவில்லை. அவன் விளையாட்டுக்களில் ஈடுபடாததற்குக் காரணமாக இருக்கக்கூடியது.
1. அது மழைகாலமாக இருந்தமை
2. அவன் சுகவீனமுற்று இருந்தமை
3. விளையாட்டு மைதானம் இல்லாமல் இருந்தமை
4. அவன் பரீட்சைக்குப் படித்ததனால்

20. கந்தசாமி ஒரு சிறந்த விவசாயி. இருந்த போதிலும், கடந்த விவசாயச் செய்கையில் அவனால், கூடியளவு விளைச்சலைப் பெறமுடியவில்லை. இதற்குக் காரணமாக இருக்கக்கூடியது.
1. விளைச்சல்களின் விற்பனை குறைவடைந்திருந்தமை
2. கந்தசாமி நினைத்ததை விட குறைந்தளவு விளைச்சல் கிடைத்தமை
3. விவசாயச் செய்கையின் போது முறைப்படி பராமரிப்புக்களைச் செய்ய முடியாமல் இருந்தமை.
4. விலை வீழ்ச்சியடைந்தமை




21. ஒரு திருமண விருந்தில் 2 வடைகளுக்கு ஒரு வாழைப்பழம் வீதம் பரிமாறப்படுகிறது. வடையும் வாழைப்பழமும் மொத்தம் 300 பரிமாறப்பட்டிருந்தால், திருமண வீட்டிற்கு வந்தவர்கள் எத்தனை பேர்?
1. 200 பேர் 2. 100 பேர் 3. 300 பேர் 4. 150 பேர்



22. அருகில் செங்கற்களினால் கட்டப்பட்ட சுவரின் வடிவம் தரப்பட்டுள்ளது. இதில் வெற்றிடமாக உள்ள பகுதியினால் காட்டப்பட்டுள்ள வெளியை முழுமையாக நிரப்பத் தேவையான செங்கற்களின் எண்ணிக்கை யாது?
1. 9 2. 18 3. 6 4. 20

23. இச்சுவரை நிரப்பியதன் பின்பு உள்ள செங்கற்களின் எண்ணிக்கை எத்தனை?
1. 10 2. 5 3. 50 4. 48


✱ 
அருகில் ஒரு சதுர மரக்குற்றி காணப்படுகிறது. அது சுற்றிவர மேற்பரப்பில் மை பூசப்பட்டு கோடுகள் வழியே சிறுதுண்டுகளாக வெட்டி வேறாக்கப்படுகிறது. அதனை விளங்கிக் கொண்டு 24 - 26 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

24. மை பூசப்படாத துண்டுகளின் எண்ணிக்கை எத்தனை?
1. 1 2. 2 3. 3 4. 4

25. ஒரு முகம் மாத்திரம் மைபூசப்பட்ட துண்டுகள் எத்தனை?
1. 4 2. 3 3. 6 4. 2


26. மூன்று முகம் மாத்திரம் மைபூசப்பட்ட துண்டுகள் எத்தனை?
1. 4 2. 8 3. 12 4. 16

✱ பின்வரும் அடைப்புக்களில் காட்டப்பட்டுள்ள உருக்களை யாதாயினும் ஒரு பொது இயல்புக்கு ஏற்ப மூன்று உருக்களைக் கொண்ட கூட்டங்களாக்கலாம். இவ்வாறு கூட்டமாக்கப்பட்டுள்ள மூன்று உருக்களின் எழுத்துக்களையும் கூட்டங்களாக்குவதோடு அதன் பொது இயல்பினையும் எழுதுக. (உதாரணத்தை அவதானிக்குக)




| | உருக்களின் எழுத்து | பொதுப் பெயர் |
|---|---|---|
| உ.ம் | B.D.K. | ஆயுதம் |
| 27. | ........ | ........ |
| 28. | ........ | ........ |
| 29. | ........ | ........ |

✱ இக்கடிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு 30 - 32 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

30. 

அருகில் காட்டப்பட்டுள்ள கடிகாரத்தை முகம் பார்க்கும் கண்ணாடி வழியாகப் பார்க்கும் போது தெரியும் நேரம் எத்தனை மணி?
1. 9.30 2. 2.30 3. 6.45 4. 10.30

31. இங்கிலாந்து நேரம் இலங்கை நேரத்திலும் பார்க்க 6 மணித்தியாலங்கள் குறைவாகும். தினந்தோறும் 30 நிமிடங்கள் பிந்திக் காட்டும் இக்கடிகாரத்தில் நேரம் பிற்பகல் 2.30 ஆகும் போது இங்கிலாந்தின் நேரம் என்ன?
1. மு.ப. 8.30 2. பி.ப. 9.00 3. மு.ப. 9.00 4. மு.ப. 9.30

32. இங்கிலாந்தின் நேரம் பி.ப. 5.00 மணியாகும் போது இக்கடிகாரம் காட்டும் நேரம் யாது?
1. பி.ப 11 2. பி.ப. 10.30 3. மு.ப. 10.30 4. பி.ப. 9.30

✱ 33ம், 34ம் வினாக்களில் தரப்பட்டுள்ள விடுகதைகளுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

33. பஞ்சுக்காலால் நடந்திடுமாம்: பாலை நக்கிக் குடித்திடுமாம். அது என்ன?
1. நாய் 2. பூனை 3. ஓநாய் 4. முயல்

# 31 மசோதாக்கள் தாக்கல் செய்ய திட்டம் பிரச்சினைகளை எடுக்க எதிர்க்கட்சிகள் தீவிரம்



மழைக்கால கூட்டத்தொடருக்காக அடுத்த வாரம் இந்திய நாடாளுமன்றம் கூடுகிறது. இதில், நிலம் கையகப்படுத்துதல் மசோதா, கம்பெனிகள் மசோதா மற்றும் பெண்கள் மசோதா என, மிக முக்கியமான 31 மசோதாக்களை எடுத்துக் கொள்ள, அரசு தரப்பு தீவிரமாக தயாராகி வருகிறது. ஆனாலும், அரசியல் கட்சிகளின் ஆதரவு மற்றும் எதிர்ப்பு ஆகியவை எப்படி இருக்கும் என்பதை கணிக்க முடி யாத காரணத்தால், இம்மசோதாக்கள் நிறைவேற்றப்படுமா என்ற பரபரப்பும், கேள்விக்குறியும் எழுந்துள்ளது.

மழைக்கால கூட்டத்தொடருக்காகக் கூடும் நாடாளுமன்றில் பெரும்பாலும் முக்கிய மசோதாக்கள் நிறைவேற்றப்படுவதே வழக்கமாக இருந்து வருகிறது. மழைக்கால கூட்டத்தொடர் என்றாலே, அது மசோதாக்கள் கூட்டத்தொடர் என்று கூட சொல்லப்படுவதுண்டு. மற்ற கூட்டத் தொடர்களைக் காட்டிலும், இந்த கூட்டத்தொடரில் தான் அதிகபட்ச மசோதாக்கள் நிறைவேற்றப்படுகின்றன என்பதே இதற்கு காரணம். அதனால், இந்த முறை எந்தெந்த மசோதாக்களை, அரசு கையில் எடுக்கப் போகிறது என்பது குறித்து, கடந்த சில நாட்களாகவே பெரும் எதிர்பார்ப்பு நிலவி வந்தது.

இந்நிலையில், கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பவன்குமார் பன்சால், மத்திய அரசின் முக்கிய துறைகளின் செயலர்கள் அனைவரையும் அழைத்து, ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். இரண்டு மணி நேரம் நடந்த அந்த கூட்டத்தில், எந்தெந்த மசோதாக்களை நிறைவேற்றலாம் என, ஆலோசிக்கப்பட்டது. இறுதியாக 31 மசோதாக்களை, இந்தக் கூட்டத்தொடரில் எடுத்துக் கொள்வது என, முடிவெடுக்கப்பட்டது.

# மதுரையில் வெடிகுண்டுப் பார்சல்

மதுரையில் பார்சல் வெடிகுண்டை கொண்டு வந்த மர்ம மனிதனை கண்டுபிடித்து தகவல் தெரிவிப்பவருக்கு ரூபா10,000 சன்மானம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வெடிகுண்டு பார்சல் கொண்டு வந்த மர்ம மனிதனின் உருவப்படத்தை மதுரை பொலிஸார் நேற்றிரவு வெளியிட்டனர்.




குஜராத் முதல்வர் நரேந்திர மோடி சௌராஷ்ட்ரா சமூகத்தினரின் மாநில மாநாடு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக மதுரை வருவதாக இருந்தது. அவரது வருகைக்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் வெடிகுண்டு கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வட மாநிலங்களில் கனமழை குழந்தைகள் உட்பட 10 பேர் பலி





இந்தியாவின் வட மாநிலங்களான உத்தரகாண்ட், இமாச்ச பிரதேசம், ஜம்மு - காஷ்மீரில் பெய்து வரும் கன மழையால் அம்மாநில மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உத்தரகாண்ட் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி 10 பேர் இறந்துள்ளனர்.

சமோலி மாவட்டத்தில் உள்ள கர்ணபிரயாக் பகுதியில் பெய்த கனமழையால் வீடு இடிந்து விழுந்ததில் 2 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தனர். இதே மாவட்டத்தில் உள்ள போக்ரி பகுதியில் ஒரு குழந்தை வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டு இறந்தது.

உத்தரகாண்ட் மாவட்டங்களின் பல பகுதிகளிலும் தொடர்ந்து நிலச்சரிவுகள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் பத்ரிநாத் செல்லும் நெடுஞ்சாலைகள் தடைப்பட்டுள்ளன.

பத்ரிநாத் யாத்திரை மேற்கொண்டுள்ள நூற்றுக்கணக்கான பக்தர்கள் அங்கு செல்ல இயலாமல் பாதாள கங்கை, லம்பாகர், பிராகி ஆகிய இடங்களில் தங்கியுள்ளனர்.


கங்கோத்ரி பகுதியில் பாகீரதி நதி அபாய அளவைத் தாண்டிப் பெருக்கெடுத்து ஓடுகிறது. வெள்ளத்தில் சிக்கி தீயணைப்புப் படையைச் சேர்ந்த 3 வீரர்கள் உயிரிழந்தனர். வெள்ளம் சூழ்ந்த இடத்திலிருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

இந்த வெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள இழப்புகளை கண்காணித்து வருகின்ற அம்மாநில முதல்வர் விஜய் பகுகுணா, பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் வட மாநிலங்களான இமாச்சல பிரதேசம், ஜம்மு - காஷ்மீர் மாநிலங்களிலும் கனமழை பெய்து வருகின்றது. இமாச்சலில் ஒருவர் உயிரிழந்தார்.

ஜம்மு - காஷ்மீரில் வெள்ளத்தில் சிக்கிக்கொண்ட 22 பேரை மீட்புக்குழுவினர் 3 மணி நேரம் போராடி மீட்டனர். இம்மாநிலங்களிலும் மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

# கூடங்குளத்தில் மின் உற்பத்தி 25 ஆம் திகதி ஆரம்பம்



தமிழ்நாட்டின் கூடங்குளத்தில் உள்ள அணுமின் நிலையத்தின் பணிகள் முழுவதும் முடிவடைந்து விட்ட நிலையில் வரும் 25ஆம் திகதி மின் உற்பத்தி தொடங்கும் என மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில் தமிழ்நாட்டில் மின்சார தட்டுப்பாடு நிலவி வரும் விடயம் மத்திய அரசிற்கு தெரியும்.

இந்நிலையில் கூடங்குள அணுமின் நிலையத்தில் பணிகள் அனைத்தும் நிறைவு பெற்றுவிட்டதையடுத்து மின் உற்பத்திக்கான பணிகள் வரும் 25ஆம் திகதி தொடங்குகின்றது. உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மத்திய தொகுப்புக்கு அனுப்பப்பட்டதுடன் அதை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் விரைவாக செயற்படுத்தப்படும்.

ஒரு வேளை, கூடங்குள அணுமின் நிலையத்தில் ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் இழப்பீடு தொகையாக ரூ.1500 கோடியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. 3,4 அணுமின் உலைகளில் ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்படுமாயின் அதற்கு ரஷ்யா நாடே பொறுப்பு என்றார்.

இந்த அணுமின் நிலையத்தை தொடங்கக்கூடாதென வலியுறுத்தி அப்பகுதி மக்கள் கடந்த ஆண்டு மிகப்பெரிய போராட்டத்தை நடத்தினர் என்பது தெரிந்ததே.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# மரணித்த அனாதை விதவைகளை வெட்டி புதைக்கும் கொடூரம்

மரணமடைந்த அனாதை விதவைகளை முறைப்படி அடக்கம் செய்யாமல் அவர்களை வெட்டி புதைக்கும் செயலுக்கு உச்ச நீதிமன்றம் தனது எதிர்ப்புடன் கடும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

உத்திரபிரதேச மாநிலத்தில் உள்ள அனாதை விடுதிகளில் தங்கியிருக்கும் விதவைப்பெண்கள் மரணித்தவுடன் அவர்களை முறைப்படி அடக்கம் செய்வதில்லை.

இது குறித்து தேசிய சட்டமைய அமைப்பின் சார்பில் பொதுநலன் வழக்கு தொடரப்பட்டது.


இந்த வழக்கின் மனுவில், உத்திரபிரதேச மாநிலம் மதுரா அருகே "விரிந்தாவன்" என்ற இடத்தில் அரசு அனாதை விடுதிகளில் முறைப்படி இறுதி சடங்கு செய்வதில்லை என்றும் இதற்கு அரசு போதுமான நிதி ஒதுக்கீடு வழங்குவதில்லை எனவும் கூறப்பட்டிக்கிறது.

இதனால் இறந்த விதவைகளின் உடல்களை துண்டு துண்டாக வெட்டி சாக்கு பைகளில் போட்டு அப்புறப்படுத்தும் நிலை உள்ளதாகவும் அம்மனுவில் கூறப்பட்டிருந்தது.

இம்மனுவை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் டி.கே. ஜெயின், மதன் லோகூர் ஆகியோர் விசாரித்து தீர்ப்பு வழங்கினர்.

இது குறித்த தீர்ப்பில், விதவைகள் இறந்ததும் அவரது உடல்களை உரிய மரியாதையுடன் அவர்கள் சார்ந்த மத வழக்கப்படி இறுதிச் சடங்குகள் செய்து அடக்கம் செய்ய வேண்டும்.

அனாதை விடுதிகளில் நடந்த சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. மதுரா மருத்துவமனை முதன்மை மருத்துவ அதிகாரி, அனாதை விடுதிகளில் இறக்கும் விதவைகளின் உடல்களை உரிய மத வழக்கப்படி அடக்கம் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றனர்.



# சீனா, நேபாள கோவில்களுக்கு செல்லும் இந்துக்களுக்கு தமிழக அரசு மானியம்




புனித யாத்திரையின் அடிப்படையில் சீனா, நேபாள கோவில்களுக்கு பயணம் மேற்கொள்ளும் இந்துக்களுக்கு ஆண்டுதோறும் அரசு மானியம் வழங்க தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் உள்ள இந்துக்கள் சீனாவில் உள்ள மானசரோவர் மற்றும் 108 வைணவ திருத்தலங்களில் ஒன்றான நேபாள நாட்டிலுள்ள முக்திநாத் ஆகிய இடங்களுக்கு புனித யாத்திரை மேற்கொள்ள இந்த உதவித்தொகை வழங்கப்படுகின்றது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டள்ள அறிக்கையில், மானசரோவர் புனித யாத்திரைக்கு செல்ல இந்திய வெளியுறவுத் துறையால் தெரிவு செய்யப்படும் தமிழ்நாட்டை சேர்ந்த 250 இந்துக்களுக்கும், முக்திநாத்துக்கு செல்லும் 250 பேருக்கும் இந்த மானியம் வழங்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

மேலும் இந்த திட்டத்திற்காக 2012 - 2013ஆம் ஆண்டில் மானசரோவர் புனித பயணத்திற்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் சென்று வர ஒரு நபருக்கு ஆகும் மொத்த உத்தேச செலவான ஒரு இலட்சம் ரூபாயில் ரூபா 40 ஆயிரம் வீதம் 250 பேருக்கு ரூபா 1 கோடி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானின் ஏவுகணை சோதனை வெற்றி



ஈரானில் குறுகிய தூர இலக்குகளைத் தாக்கும் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டதாக அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் அகமது வாஹிதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அகமது வாஹிதி கூறுகையில், படேஹ்-110 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஏவுகணை முன்னதாக 200 கி.மீ தூர இலக்குகளை மட்டுமே தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது அதன் திறனை மேம்படுத்தி 300 கி.மீ தூர இலக்கைத் தாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

திட எரிபொருள் மூலம் இயங்கும் இந்த ஏவுகணையைக் கொண்டு தரை மற்றும் கடலில் உள்ள இலக்குகளைத் தாக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இதுமட்டுமல்லாமல் ஏற்கனவே ஈரான் வசம் 2 ஆயிரம் கி.மீ தூரத்தில் உள்ள இலக்கைத் தாக்கும் திறன் கொண்ட ஷாகாப் - 3 என்ற ஏவுகணை உள்ளது குறிபபிடத்தக்கது.

இந்த ஏவுகணையைப் பயன்படுத்தி இஸ்ரேல், தெற்கு ஐரோப்பாவில் உள்ள நாடுகள் மீது ஈரானால் தாக்குதல் நடத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.



ரோம், பவேரியன் பாரம்பரிய உடையணிந்த நடனக்கலைஞர்களின் நிகழ்ச்சியை கண்டுகளித்த போப் பதினாறாம் பெனிடிக்ட் (நடுவில்).

# ஹிரோசிமாவில் அமெரிக்கா அஞ்சலி



பேரழிவிற்கு உள்ளான ஜப்பானில் ஹிரோஷிமாவில் அமெரிக்காவில் முன்னாள் ஜனாதிபதியின் பேரன் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானின் ஹிரோஷிமா நகர் மீது முதன் முறையாக அணு குண்டு வீசப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின் போது(1939-1945) ஜப்பானின் இரு பெரும் நகரங்களான ஹிரோஷிமா மீது முதல் அணு குண்டு வீசப்பட்டது. இதில் 1 லட்சத்து 40 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பலியாயினர். அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக ஹென்றி ட்ரூமன் இருந்தார்.

இந்நிலையில் அவரது பேரன் கிளிப்டன் ட்ரூமன் டேனியல், நேற்று ஜப்பான் வந்தார். பின்னர் ஹிரோஷிமா அமைதிப் பூங்கா சென்று நினைவிடத்தில் மலரஞ்சலியும், மௌன அஞ்சலியும் செலுத்தினார்.

# உலகின் மிகச் சிறிய போர் விமானம்

# தீவிரவாதிகளை அழிக்கத் தயாராகிறது



ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்க, அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் முகாமிட்டுள்ளன.

அவ்வப்போது ஆளில்லா உளவு விமானங்கள் மூலமும் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இதில் பலர் பலியாகி வருகின்றனர்.

இந்நிலையில் எளிதில் கண்டுபிடிக்க முடியாத வகையில் உள்ளங்கையில் அடங்க கூடிய மிகச் சிறிய டிரோன்களை இங்கிலாந்து இராணுவம் கண்டு பிடித்துள்ளது.


நேனோ டிரோன் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த விமானம் 198 கிராம் மட்டுமே நிறை கொண்டது. இதில் 2 அதிசக்தி வாய்ந்த கமெராக்கள் உள்ளன.

இதன் மூலம் தீவிரவாதிகள் பதுங்கி உள்ள இடங்களை கண்டுபிடித்து தாக்குதல் நடத்த முடியும். உலகிலேயே மிகச் சிறிய போர் விமானம் என்று இதை கூறுகின்றனர்.

இதன் மூலம் தலிபான்கள் மீது தாக்குதல் நடத்துவது எளிது, வீரர்களுக்கு உயிரிழப்பு ஏற்படாது என்று இராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனர்.

உலகச் செய்திகள்

# வடகொரியாவில் பெரு வெள்ளம் பலி எண்ணிக்கை 169 ஆக அதிகரிப்பு



வடகொரியாவில் கடந்த சில வாரங்களாக பெய்து வரும் கன மழை காரணமாக பயங்கர வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன், 169 பேர் பலியாகி உள்ளனர்.

இதுமட்டுமல்லாமல் 400க்கும் மேற்பட்டோர் காணாமல்போயுள்ளனர். இவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

ஜூலை இறுதி முதல் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் கனமழை காரணமாக 2,12,200 பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

65,280 ஹெக்டேயர் விளைநிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. 8,600 வீடுகள் முற்றிலும் சேதமடைந்துள்ளன.

இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ மீட்புக் குழுவையும், உணவுகளையும் ஐ.நா அனுப்பி உள்ளது.

# இந்து கோயில்களுக்கு சேவை செய்வேன்



பாகிஸ்தான் உச்ச நீதிமன்ற நீதிபதி குர்ஷித் கான், இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்ட போது பொற்கோவிலில் பக்தர்களின் சப்பாத்துக்களை துடைத்தார் என்ற சர்ச்சை எழுந்தது.

இதற்கு பாகிஸ்தானில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. மேலும் குரஷித் கான் பதவி நீக்கப்பட்டார்.

இது குறித்து குர்ஷித் கான் கூறுகையில், இப்போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். சுதந்திர மனிதனாகி விட்டேன். காலை 8 மணியில் இருந்து மாலை 5 வரை கடினமான பணியில் இருந்து விடுவித்துள்ளனர்.



அக்டோபர் 7ஆம் திகதி நடைபெறவுள்ள அதிபர் தேர்தலுக்காக ஆன்டிமானோ பகுதியில் பிரச்சாரப்பேரணியில் ஈடுபட்ட வெனிசுலா அதிபர் ஹூகோ சாவேஸ்.

இனி உலகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து சீக்கிய, இந்து கோயில்களில் சேவை செய்வேன். மத நல்லிணக்கம், உலக அமைதி வேண்டி இதை செய்வேன்.

எனக்கு சலரோக நோய் இருக்கின்றது இரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுப்பாட்டுக்குள் வைத்து கொள்ள கடந்த 10 ஆண்டுகளாக நிறைய இன்சுலின் எடுத்துக் கொண்டேன்.

ஆனால் சேவை புரிய தொடங்கியவுடன் சர்க்கரை அளவு படிப்படியாக குறைந்து விட்டது. கடந்த 3 ஆண்டுகளாக நான் இன்சுலின் எடுத்துக் கொள்வதில்லை.

சீக்கிய, இந்து கோயில்களில் நான் சேவை புரிவதற்கு தீவிரவாதிகள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். என் உயிரை பற்றி நான் கவலைப்படவில்லை. வத்திக்கான் நகருக்கு சென்று போப் பெனடிக்டுக்கும் சேவை செய்வேன்.

தீவிரவாத குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு அமெரிக்க சிறையில் உள்ள ஆபியா சித்திக்கை விடுவிக்க முயற்சி மேற்கொள்வேன்.

அவர் விடுதலையானால் அமெரிக்கா மீது பாகிஸ்தான் மக்களுக்கு உள்ள தவறான எண்ணம் மாறும். அதன் மூலம் இரு நாட்டு உறவு மேம்படும் என்று தெரிவித்துள்ளார்.

# பாலியல் வன்முறையை தடுக்க பிரான்ஸில் புதிய சட்டம்



பிரான்சின் நாடாளுமன்றத்தில் கடந்த 2ஆம் திகதி பாலியல் வன்முறைக்கான புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இந்த புதிய சட்டம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலையும் பெற்றுள்ளது.

இது குறித்து சட்ட அமைச்சர் கிறிஸ்டினா டாபிரா கூறுகையில், பாதிக்கப்பட்டவர்கள் மறுபடியும் தங்கள் வழக்குகளை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து, தற்போதைய புதிய சட்டத்தின்படி நீதியைத் தேடலாம் என்றார்.

மேலும் இந்த புதிய சட்டம் தெளிவான வரையறைகளுடன் அமைந்துள்ளது என்றார்.

பாலியல் வன்முறைக்குப் புதிய சட்டம் தேவை என்கின்ற விவாதம் தோன்றக் காரணம், சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் ஸ்டிராஸ்கான் நியூயார்க் விடுதியில் பணிப்பெண் ஒருவரிடம் தவறாக நடந்து கொண்டார் என்பதுவே ஆகும்.


இந்த வழக்கில் இருந்து ஸ்டிராஸ்கான் விடுபட்டாலும், விவாதம் மட்டும் தீவிரமாகி கொண்டே இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தப் புதிய சட்டம் மாற்றுப் பாலினத்தாருக்கும் பணித்தளங்களில் துன்பம் நேராமல் தடுக்க உதவுகின்றது.

மேலும் இந்த சட்டம் பிரான்சின் கட்டுப்பாட்டில் உள்ள மற்ற நாடுகளுக்கும் பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தொழில் வல்லுநர்களைப் பகிர்ந்துகொள்ள இந்திய - இலங்கை அரசுகள் தீர்மானம்

## விசாக் கட்டுப்பாடுகளும் தளரும் சாத்தியம்



(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் அவர்களுக்கான விசாக் கட்டுப்பாட்டை எளிமைப்படுத்துவதற்குமான பேச்சுவார் த்தையில் இலங்கையும் இந்தியாவும் ஈடுபட்டுள்ள நிலையில், இந்தியாவில் வேலைவாய்ப்பு பெறுபவர்களுக்கான விசாக் கட்டுப்பாட்டை தளர்த்துமாறு இந்தியாவிடம் இலங்கை கோரியுள்ளதாக இந்தியாவின் வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்த அமைச்சர் ஆனந்த் சர்மா, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து தனது இலங்கைக்கான விஜயத்தின் நோக்கம் மற்றும் இருதரப்பு உறவுகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

தனது விஜயத்தின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்த அமைச்சர் ஆனந்த் சர்மா, மருந்துப் பொருட்கள் மற்றும் பொறியியல் பொருட்கள் நிலையம், வாகனங்களுக்கான சிறப்பு பொருளாதார வலயம் ,ஆகியவற்றை அமைப்ப' தற்கு இந்தியா தீர்மானித்துவ! ளது எனவும் கூறினார்.

விசாக் கட்டுப்பாட்டை எளிமைப்படுத்துவதற்கான நடவடிக்கையில் இருநாட்டு வர்த்தகச் செயலாளர்களும் ஏற்கெனவே ஈடுபட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அமைச்சர் ஆனந்த் சர்மா தெரியப்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்துள்ளன. வேலைவாய்ப்பு விசாக் கட்டுப்பாட்டை தளர்த்துமாறு இலங்கை கோரியுள்ளது. இந்தியாவுக்கான விஜயமொன்றைத் தான் கூடிய விரைவில் மேற்கொள்ளவுள்ளதாக ஆனந்த் சர்மாவிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியதாகவும் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, சீங்க அனுமதி தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் இந்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா கலந்துரையாடியுள்ளார்.

# சட்டவிரோத பஸ் சேவை கட்டுப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இருந்து கொழும்புக்கு உரிய அனுமதி இன்றி சேவையை நடத்தும் பேருந்து உரிமையாளர்களுக்கு எதிரான தண்டனை அதிரிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் 7500 ரூபாய் தண்டப்பணமாக அறவிடப்பட்டு வந்தது.

எனினும் அதனை 250,000 ரூபாவாக அதிகரித்துள்ளதுடன், 10 வருடகால சிறைத் தண்டனையும் வழங்கப்படும் என போக்குவரத்துத்துறை அமைச்சர் சீ.பி.ரதநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் இருந்து இவ்வாறு 150 இற்கும் அதிகமான பேருந்துகள் சட்டவிரோதமாக இயங்குகின்றன. அவற்றில் பல வடமாகாணத்தில் உள்ள அரசியல்வாதிகளுக்கு சொந்தமானது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வடக்கு, தெற்கு உறவுப்பாலம் இளைஞர் பரிமாற்று வேலைத்திட்டம்



(கிளிநொச்சி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் கம்பஹாவுக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் நட்புறவுப் பாலத்தை அமைக்கும் ஸ்ரீலங்கா யூத் இளைஞர் பரிமாற்று வேலைத்திட்ட ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை விவேகானந்த நகரில் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் நடைபெற்றது.

இதன் ஓர் அங்கமாக இளைஞர் சேவைகள் மன்றத்தின் கம்பஹா மாவட்டத்திலிருந்து 51 பேர கொண்ட குழு கிளிநொச்சிக்கு வருகை தந்துள்ளனர்.

இவ் ஆரம்பநிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் கீர்த்தனாத், கரைசசிப் பிரதேச சபை உபதலைவர் நகுலேஸ்வரன், பாரதிபுரம் வித்தியாலய அதிபர் இராஜேந்திரம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தமிழ் சிங்கள மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இக்குழுவினர் கிளிநொச்சி மக்களின் கலாசாரம் பண்பாடு மற்றும் வாழ்க்கை முறை என்பவற்றை அறிந்துகொள்ளவுள்ளனர். அத்துடன் சமூக சேவை வேலைத்திட்டங்களையும் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கிளிநொச்சியிலிருந்தும் மன்றத்தின் மாணவர்களில் 51 பேர் கொண்ட குழு 2 ஆம் கட்டமாக கம்பஹாவிற்குச் செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (77)

## தெரிவுக்குழுவை...

எடுத்துக்கூறி வருகிறோம். ஒரு ஜனநாயக ஆட்சி இடம்பெறும் நாட்டில் நாமும் ஜனநாயகக் கோட்பாட்டை ஆதரிக்கும் அரசியல் கட்சி என்ற ரீதியில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவிலிருந்து ஒதுங்கி இருக்க முடியாது. ஆனால் இது தொடர்பாக அரசுக்கும் எமக்கும் ஒரு பேச்சுவார்த்தை இடம்பெற்று ஒரு இணக்கப்பாடு எட்டிய பின்பே அதில் நாம் பங்கு பற்றுவது விவேகமாகும்.

தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றவர்கள் என்ற ரீதியில் தமிழ் மக்களுக்கான பேச்சுவார்த்தைகளிலிருந்து நாம் ஒதுங்கி விடவோ அவற்றை தட்டிக்கழிக்கவோ முடியாது. நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதன் மூலம் நாம் பொறிக்குள் அகப்படப் போகிறோமென கூறுவது தவறு.

இதில் பங்குபற்றி தமிழர்களும் நியாயமானவர்கள் என்பதை சர்வதேசத்திற்கு நாம் தெரிவிக்கவேண்டும். தமிழர்கள் ஒரு பிற்போக்கானவர்கள் அல்லது நியாயமற்றவர்கள் என சர்வதேசத் தரகர்கள் நினைக்கக் கூடாது எனவும் அவர் கூறினார்.

## பாதிக்கப்பட்ட...

ஆகவே இந்த விடயங்களில் கண்டிருக்கின்ற முன்னேற்றத்துகாக நாம் இலங்கை அரசாங்கத்தை பாராட்டுகிறோம் என்றார் பொப் பிளாக்மான் எம்பி. இந்த பிரிட்டிஷ் நாடாளுமன்றக் குழுவில் 2010 ஆம் ஆண்டு தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 9 புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர். அவர்களில் 8 பேர் கொன்சர்வேட்டிவ் கட்சியை சேர்ந்தவர்கள்.

இலங்கையின் போர் நடந்த பல பகுதிகளுக்கும் தாம் சென்று, பரந்துபட்ட மக்களையும் அவர்களது தலைவர்களையும் எந்த விதமான பிறர் தலையீடும் இன்றி சந்தித்ததாக அவர்கள் கூறியுள்ளனர். பிரிட்டனுக்கான இலங்கை தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விஜயத்துக்கு, அந்தத் தூதரகமே நிதி உதவி வழங்கியிருந்ததாகவும் அவர்கள் பி.பி.சி செய்தியாளரிடம் கூறியிருந்தனர்.

## ஐ.நா.வுடன்...

தொடர்பாக வெளியிடப்பட்ட செய்தியிலேயே மேற்படி தகவலையும் கொழும்பு ஆங்கில வார இதழ் வெளியிட்டிருக்கிறது.

இதன் ஒரு கட்டமாகவே அண்மையில் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய செயற்திட்டத்தையும் அரசு வெளியிட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நிபுணர்களை கொழும்புக்குள் அனுமதிக்க எடுககப்பட்டுள்ள முடிவு, அரசாங்கம் ஐ.நா.வுடன் முழுமையாக ஒத்துழைக்க முடிவு செய்துள்ளதையே காட்டுகிறது என்றும், இதன் அடிப்படையில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அடுத்த நவம்பர் முதலாம் நாள் நடைபெறவுள்ள பூகோள கால மீளாய்வுக் கூட்டத்துக்காக, அரசாங்கம் சமர்ப்பித்த அறிக்கையிலும் திருத்தங்கள் செய்யப்பட்டு, மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பு ஆங்கில வார இதழ் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

## இந்தியாவின்...

அமைச்சர் உறுதியளித்துள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே அவர் மேற்கண்டவாறு உறுதிமொழியை வழங்கினார்.

கொழும்பில் நடைபெறும் இந்தியக் கண்காட்சியில் கலந்துகொள்ளவதற்காக நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய வர்த்தக - கைத்தொழில் அமைச்சர் ஆனந் சர்மா நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினார். இலங்கையின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் இந்தியா இலங்கைக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கும் என இச்சந்திப்பின்போது இந்திய அமைச்சர் உறுதியளித்தார்.

# திருமலை நகரில் பாரிய தீ விபத்து

(கொழும்பு)

திருகோணமலை மத்திய வீதியிலுள்ள வர்த்தக நிலையமொன்று நேற்று பிற்பகல் தீப்பற்றி எரிந்துள்ளதுடன் அருகில் உள்ள கடைகளும் பாதிப்புக்குள்ளாகின. சுமார் ஒரு மணித்தியாலத்திற்குப் பின் திருகோணமலை பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினர், கடற்படையினர், பொதுமக்கள் உதவியுடன் தீயினைக் கட்டுப்பாட்டுக்கு



கொண்டு வரப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வர்த்தக நிறுவனமொன்றின் மேல் மாடியில் ஏற்பட்ட தீயே பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் தீ ஏற்பட்டமைக்கான காரணம் இன்னமும் புலனாகவில்லை. தீயினைக் கட்டுப் படுத்துவதற்காகக் கடற்படையின் தீ அணைப்பு வாகனங்கள் உடனடியாக ஸ்தலத்திற்கு வந்தன. இதனையடுத்து நகரசபை, பொலிஸ், இராணுவ தண்ணீர் தாங்கிகளும் ஸ்தலத்திற்கு வந்து நீரை வழங்கின. நிலைமை கட்டுக கடங்காமல் போகவே, னக்குடா விமானப்படைத் தளத்தில் இருந்தும் தீ அணைப்பு வாகனமும் கொண்டுவரப்பட்டது. 2 மணிநேர போராட்டத்தின் பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இவ் விபத்துக் காரணமாக அருகில் உள்ள இரு வர்த்தக நிலையங்கள் சேதமடைந்ததுடன் வீடொன்றும் சிறிய சிறிய சேதத்திற்கு உள்ளானது. நகர சபையின் தலைவர் க.செல்வராசா ஸ்தலத்தில் நின்று தீ அணைப்புக்கான உதவிகளை வழங்கினார்.

திகோணமலை நகர சபையில் 3 தீ அணைப்பு வாகனங்கள் இருந்த போதிலும் அவற்றினால் சேவையை வழங்க முடியவில்லை. உத்தியோக பூர்வமாக இவ்வாகனங்கள் கையளிக்கப்பட வில்லை எனவும் இதனால் தம்மால் சேவையினை வழங்க முடி யாது இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இத் தீவிபத்துப் பற்றி திருகோணமலை பொலிஸார் தற்போது விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## சமூக...

பார்க்கப்படுகிறது. குறுகிய காலமே கொழும்பில் தங்கியிருக்கவுள்ள போதிலும், இந்தக் குழுவினர் கிழக்கு மாகாணத்துக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறியவுள்ளனர்.

## உயர்தரப்...

வருவதாக மனித உரிமைகள் கண்கானிப்பகம் தெரிவித்துள்ளது.

இசெட் புள்ளி மீண்டும் வெளியிடப்பட்ட காலப் பகுதியிலிருந்து 1750 மாணவர்கள் அதற்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளதாகவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## யுத்தகால...

குறிப்பிட்டுள்ளார். சகலவிதமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் உரிய முறையில் விசாரணைகள் நடத்தப்படும் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.




| Rank by Gold | Country | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 29 | 16 | 14 | 59 |
| 2 | அமெரிக்கா | 27 | 14 | 15 | 56 |
| 3 | பிரித்தானியா | 16 | 9 | 9 | 34 |
| 4 | தென்கொரியா | 10 | 4 | 6 | 20 |
| 5 | பிரான்ஸ் | 8 | 6 | 9 | 23 |
| 6 | ஜேர்மனி | 5 | 10 | 6 | 21 |
| 7 | இத்தாலி | 5 | 5 | 3 | 13 |
| 8 | கசகஸ்தான் | [illegible] | [illegible] | 0 | 5 |
| 9 | வடகொரியா | [illegible] | 0 | [illegible] | 5 |
| 10 | ரஷ்யா | 3 | [illegible] | 14 | 33 |
| 11 | நெதர்லாந் | 3 | 1 | 4 | 8 |
| 12 | ஹங்கேரி | 3 | 1 | 2 | 6 |
| 13 | தென்னாபிரிக்கா | 3 | 1 | 0 | 4 |
| 14 | நியுஸிலாந்து | 3 | 0 | 4 | 7 |
| 15 | ஜப்பான் | 2 | 11 | 12 | 25 |
| 16 | றொமேனியா | 2 | 4 | 2 | 8 |

# பொலிகண்டியில் வள்ளங்களுக்கு தீ வைப்பு

(வடமராட்சி)

பொலிகண்டி மாதங் கோவில் பகுதியில் நேற்றுப் பகல் 1.00 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் இரண்டு படகுகள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

சுனாமியால் பாதிக்கப்பட்ட படகுகள் திருத்தப்படும் இடத்தில் நிறுத்தி வைக்கப்பட் டிருந்த 7 படகுகளில் இரண்டு படகுகளுக்கே தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் பொலிகண்டியில் பத்திரகாளி கோவில் பகுதியில் மாடுகள் நீர் அருந்தும் தொட்டி ஒன்றும் இனந்தெரியாத நபர்களால் அடித்து நொருக்கப்பட்டது.

இவ்வாறான நாசகாரச் செயல்களால் அப்பகுதி மக்கள் பயப் பீதியுடன் இருக்கின்றனர். (116)

# தென்பகுதி மக்களுக்கு கிடைக்கும் அனைத்தும் வட பகுதி மக்களுக்கும் கிடைக்க வேண்டும்

## கிளிநொச்சியில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர

(கிளிநொச்சி)

இந்த நாட்டில் தென் பகுதி மக்களுக்கு கிடைக்கும் அனைத்து உதவிகளும், வசதிகளும் வடபகுதி மக்களுக்கும் கிடைக்க வேண்டும் அதுதான் எமது நிலைப்பாடு என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமாரின் வேண்டுகோளுக்கு அமைய கிளிநொச்சி மாவட்டத்தில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூரைத்தகடுகள் மற்றும் அனர்த்த நிவாரணப்பொருட்களை நேற்றுக் கிளிநொச்சி அரச செயலகத்தில் வழங்கி வைக்கும் நிகழ்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது இந்தப் பிரதேசத்தில் அரசினால் பல அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது வடபகுதி மக்கள் முன்னர் இருந்ததனை விட தற்போது மகிழ்ச்சியாக உள்ளனர் இந்த பிரதேசங்களில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது குறிப்பாக வறட்சிக்காக நாம் பத்தாயிரம் மில்லியன் ரூபா நிதியினை ஒதுகீடு செய்துள்ளோம் அத்தோடு குடிநீர் தேவைக்காகவும் ஒரு மில்லியன் ரூபாவினையும் ஒதுக்கியுள்ளோம் மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்ட மக்களுக்கும் நட்டஈடுகளை வழங்கவும் அரசு தீர்மானித்துள்ளது எனத்தெரிவித்த அமைச்சர் முன்னர் ஒரு காலத்தில் இந்த நாட்டில் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் இடையே நல்ல உறவு இருந்தது நட்போடு வாழ்ந்தனர் அந்த உறவு மீண்டும் மலர வேண்டும் அதை நோக்கி நாம் அனைவரும் பயணிக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்

நேற்றுக் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கு 1800 கூரைத்தகடுகள் வழங்கப்பட்டதோடு மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளுக்கும் நான்கு பிரதேச செயலகங்களுக்கும் அனர்த்த காலங்களுக்கு தேவையான சமையல் உபகரணங்கள் வழங்கப்பட்டன மேலும் பூநகரி பிரதேச செயலகத்திற்கு சுனாமி எச்சரிக்கை கருவிகளும் வழங்கப்பட்டுள்ளது.



இந்நிகழ்வில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையப் பணிப்பாளர் ஹெட்டி ஆராச்சி, கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சீனிவாசன், கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பணிப்பாளர் சுகுனதாஸ், கரைச்சி பிரதேச சபைதலைவர் குகராசா, பூநகரி பிரதேச சபைத் தலைவர் சிறிஸ்கந்தராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் 'மக்கள் தொடர்பு அதிகாரி தவநாதன், மாவட்டச் செயலக திட்டப்பணிப்பாளர் மோகனபவன், உதவி அரசஅதிபர் ஜெயராணி, பிரதேச செயலர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கொழும்பு ஆட்டிறைச்சிக் கடைகளில் நாய் இறைச்சி விற்பனை



(கொழும்பு)

கொழும்பில் அதிகளவான தெருநாய்கள் மர்மமான முறையில் காணாமற்போயுள்ள நிலையில், கொழும்பு நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள ஆட்டிறைச்சிக் கடைகளில் ஆட்டிறைச்சியுடன் நாய் இறைச்சி கலந்து விற்கப்படுவது உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாகக் கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பின் பல்வேறு பகுதிகளில் நாய்கள் காணாமல் போயுள்ளதை பொலிஸ் மற்றும் விலங்குகள் நல அமைப்புக்கள் உறுதி செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில், கொழும்பு விகாரமாதேவி பூங்கா மற்றும் அதனை அண்டிய பகுதியில் காணப்பட்ட 10 வரையிலான தெருநாய்கள் திடீரெனக் காணாமற் போயுள்ளன. இந்தநிலையில், கொழும்பிலுள்ள இறைச்சிக் கடைக்காரர் ஒருவர், ஆட்டிறைச்சியுடன் நாய் இறைச்சி கலந்து விற்கப்படுவதை உறுதி செய்துள்ளார். விலங்கு நலம் மற்றும் பாதுகாப்புச் சங்கத் தலைவர் ஜயதிலகே, தெரு நாய்கள் காணாமல் போவதாக உறுதி செய்துள்ளதுடன், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோகணவும் தெருநாய்கள் காணாமற் போனது தொடர்பாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்தவாரம் கொலன்னாவையை நோக்கிச் சென்ற வாகனத்தில் தெருநாய்களைப் பிடித்து ஏற்றிச் சென்றதை சிலர் பார்த்துள்ளதாகத் தெரிவித்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

# தேர்தலுக்கு அஞ்சும் எதிர்க்கட்சி இலங்கையில் உள்ளது

(கொழும்பு)

உலகத்திலேயே தேர்தலைக் கண்டு அஞ்சுகின்ற ஒரே ஒரு எதிர்க்கட்சி இந்நாட்டு எதிர்க்கட்சி என மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். அதேவேளை நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு மிகப்பெரிய தடையாக இருப்பது ஜே.வி.பி. எனவும் அவர் தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பொன்றில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தலை பகுதி பகுதியாக நடத்துவதில் எதிர்க்கட்சிக்கு சாதகமான நிலை இருந்த போதிலும் இந்நாட்டு எதிர்க்கட்சி அதற்கு அஞ்சுகிறது. இத்தகைய எதிர்க்கட்சியே 18ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் பேசுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தென்மாகாண சபை உறுப்பினர் கைது

தென் மாகாண சபையின் ஐ.தே.க. உறுப்பினரான ரத்தரன் என அழைக்கப்படும் கிருஷாந்த புஷ்பகுமார கைது செய்யப்பட்டுள்ளார். யக்கலமுல்ல பகுதியில் தல்கம்பல பகுதியில் போக்குவரத்து பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டின் காரணமாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உடுகம - யக்கலமுல்ல பிரதான வீதியில் சனிக்கிழமை போக்குவரத்து நெரிசல் காணப்பட்டபோது, கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாகனங்களை வேறுபுறமாக திருப்பினர். அப்போது திருமண வைபவமொன்றுக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சென்று கொண்டிருந்தபோது மற்றொரு மாகாண சபை உறுப்பினரின் சாரதியின் அனுமதிப்பத்திரத்தை பொலிஸார் கோரினர்.

அவ் வேளையிலேயே மாகாணசபை உறுப்பினர் புஷ்பகுமார தலையிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

காலி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வாஸ் குணவர்தனவின் உத்தரவின் பேரில் புஷ்பகுமார கைது செய்யப்பட்டுள்ளார். இவருடன் சேர்த்து கடந்த இரு தினங்களில் 4 அரசியல்வாதிகள் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பரீட்சை மோசடிகள் தொடர்பாக முறையிட தொலைபேசி இலக்கம்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் மோசடியில் ஈடுபடுவோர் மற்றும் அதற்கு ஒத்துழைப்புக்களை வழங்குவோருக்கு எதிராக பரீட்சைகள் சட்ட மூலம் மாத்திரமன்றி சாதாரண சட்டதின் கீழும் தண்டனைகள் வழங்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகளை அறிவிப்பதற்கு விசேட தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி 1911 என்ற தொலைபேசி இலக்கத்துடன் 24 மணித்தியாலங்களும் தொடர்பினை ஏற்படுத்தி முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாடசாலை பரீட்சைகள் ஏற்பாட்டு நிலையத்திலும் முறைப்பாட்டை பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி 011 2784208 மற்றும் 0112784537 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் ஊடாகவும் முறைப்பாட்டை பதிவு செய்ய முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று 0112785220 மற்றும் 0112785779 ஆகிய தொலைநகல் இலக்கங்களின் ஊடகவும் முறைப்பாடு செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழக அகதிகளை மீண்டும் அழைக்க முயற்சி

(கொழும்பு)

தமிழ் நாட்டில் இடம்பெயர்ந்துள்ள இலங்கையரை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்படும். இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்.

இதன்படி மீண்டும் இலங்கைக்கு நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவிக்கும் இடம்பெயர்ந்தவர்கள் பற்றி சம்பந்தப்பட்ட ஆவணங்களை தயாரிக்குமாறும் இந்தியாவிலுள்ள இலங்கையின் பிரதித் தூதுவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தும் தேசிய திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கைகளில் அதிகம் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்.

இதேவேளை தமிழ் நாட்டில் இடம்பெயர்ந்துள்ள இலங்கையர் 800 பேர் அண்மையில் மீண்டும் நாடு திரும்பிள்ளனர் என அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்.

## தேர்தலைக் கண்காணிக்க வெளிநாட்டவர் தேவையில்லை

மாகாணங்களுக்கான தேர்தல்களின் போது வெளிநாட்டு கண்காணிப்பாளர்ளை பணியில் ஈடுபடுத்த வேண்டிய அவசியம் கிடையாது என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும் வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களை கடமையில் ஈடுபடுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளன.

எனினும், தற்போதைக்கு வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தவேண்டிய அவசியம் எதுவும் எழவில்லை என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஆகஸ்ட் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.